


# மொழிநூறு

தாமரைத் தீவான்

# மொழி நூறு

(கவிதைகள்)

தாமரைத் தீவான்

பதிப்பு
**முல்லை அமுதன்**

34, RED REFFE (34,REDRIFFE ROAD)
PLAISTOW
LONDON - E13 OJX
0044-208-5867783

முதல் பதிப்பு : 2009

விலை
இந்தியா : ரூ.105.00
இலங்கை : ரூ.290.00

வெளியீடு : முல்லை அமுதன்

நூல் உருவாக்கம்: கல்யாணி பழனியப்பன்
கைபேசி : +9194450 53512

அட்டை வடிவமைப்பு : மேக்ஸ்

அச்சாக்கம் : மீரா ஆப்செட் பிரிண்டர்ஸ்
சென்னை - 600 005

# ச ம ர் ப் ப ண ம்

ஈழத்து மண்ணுக்காய்
விதைபட்ட
மாந்தர்க்கு!

# "முல்லை அமுதன்" பேசுகின்றேன்...

உங்களை மகிழ்விப்பது, பெருமை கொள்ளச் செய்வது எது? என்று என்னிடம் கேட்டால், தயங்காமல் சொல்வேன் 'தாமரைத் தீவா'னின் 100 கவிதைகளை நூல் வடிவில் கொண்டு வந்ததைத்தான்!

அற்புதமான கவிதை மலர்களைத் தூவிய அந்த மக்கள் கவிஞரின் படைப்புக்களை நூலாகக் கொண்டு வரும் ஓர் அரிய வாய்ப்பு எனக்குக் கிடைத்துள்ளது! தூசு படிந்துக் கிடந்த அந்தத் தமிழ்ச் செல்வம் இதோ நூல்வடிவில் உங்கள் கரங்களில் திகழ்கின்றது. இந்த முயற்சியில் நான் அடைந்த ஆத்மதிருப்திக்கு அளவே இல்லை!

முதுமைப் பருவத்தில் வாழும் அவருக்கு என்னால் முடிந்த காணிக்கை இது!

தமிழ்த் தேனீக்களுக்குக் கிடைத்த விருந்து இது! இந்தத் தமிழ் விருந்தை எல்லோரும் பருக வேண்டுமென்று அன்போடு அழைக்கின்றேன். வருக!

கவிஞர் 'தாமரைத் தீவா'னுக்கு நெஞ்சம் நிறைந்த வாழ்த்துக்கள்!

அன்புடன்

**முல்லை அமுதன்**


Mr. R. Mahendran (முல்லை அமுதன்)
34, Redriffe Road
Plaistow,
London - E13 OJX
Phone : 0044-208-5867783

# அணிந்துரை

கவிஞர் 'தாமரைத் தீவா'னின் 'மொழி நூறு' பழமைக்கும், புதுமைக்குமான மனிதச் சங்கிலி!

அவர் கவிதைகள் தமிழுக்குக் கிடைத்த இன்னுமோர் அணிகலன்.

கவிஞர் 'தாமரைத் தீவான்' நாடறிந்த மூத்த படைப்பாளி. அவருடைய கவிதைகள் பலவும் இலங்கைப் பத்திரிகைகளில் வெளி வந்துள்ளன.

இன உணர்வும், சமூகப் பார்வையும், மூட நம்பிக்கைகளுக்கு சாட்டையடியும், மண் வளமும் மண்டிக் கிடக்கும் அவர் கவிதைகளில்.

அதே சமயம் தொன்மை மிக்க சடங்கு, சம்பிரதாயங்களில் உள்ள உட்பொருட்களைத் தேடிப் பிடித்து வெளிச்சப்படுத்துவதிலும் அக்கறை கொண்டுள்ளது.

"திராவிட மரபார் நாங்கள்
செந்தமிழ் மொழியார் நாங்கள்
இராதற் கழுவோ மல்லோம்
இருப்பதைக் காத்தல் வல்லோம்
வராததை வரவும் வைப்போம்
வந்ததை மனதுள் வைப்போம்
தராதரம் கண்டோர் வாரீர்
தமிழுடன் சேர்வோர் வாரீர்..."

மொழி நூறின் முதல் முழக்கம் இப்படி அதிர்கின்றது. பெண்ணும், ஆணும் 'சமம்' என்பதற்கு அவர் எடுத்து வைக்கும் வாதத்தைப் பாருங்கள்.

"சிவன் எனின் காளி உண்டு
திருமாற்கோ செய்யாள் உண்டு
அவன் எனில் அவள் இருப்பாள்!
ஆண் உண்டேல் பெண்ணும் உண்டு!

இவன், இவள் இருபாலாரும்
இணைதலே உலகின் ஆக்கம்
எவனுமே உயர்வும் இல்லை
எவளுமே தாழ்வும் இல்லை
பிரமாவோ நாவில் வைத்தான்
பெருமாளோ மார்பில் வைத்தான்
அரனாரோ பாகம் வைத்தார்
அனைவரும் மதித்தார் பெண்ணை
வருவீரம் – செல்வம் – கல்வி
வாழ்விலே முப்பெண்ணாச்சு
பெரும் ஆறு – மண் – விண் – பூண்டும்
பெண்தன்மை பெரும் பேறாச்சு
அடுக்களை பெண் மட்டல்ல
ஆடவர் தொழில் மட்டல்ல
எடுக்கின்றார் பெண்கள் இன்று
எல்லாமே சட்டம் கூட!...”

உரிமைக்காக அவர் பேனா உறுமுவதைப் பாருங்கள்:

“எந்தன் உரிமை எனக்குளது – இதை
எடுப்பதில்லை கொடுப்பதில்லை
உந்தனைப் போலவே மற்றவனும் – இதை
உள்ளத்தில் வைத்திடின் சிக்கல் இல்லை!...”

நாட்டுப்பற்றை வலியுறுத்தும் கவிஞனின் ‘ஓர்மம்’ எப்படி ஆர்ப்பரிக்கின்றது பாருங்கள்:

“ஆட்சி அமைக்கையிலே – எமை நாம்
ஆள நினைத்தோமா?
பேச்சில் விழுந்தோமே – அவரைப்
பின் பற்றி நின்றோமா?
ஒன்றின் மேல் ஒன்றாக – எமது
உரிமை போகையிலே
வென்று தடுத்தோமா? – நிலத்தில்
வேலியைப் போட்டோமா?
நம்பிக் கிடந்தோமே – அதனால்
நாட்டை இழந்தோமா?...”

எழுத்தாளர்களை நோக்கி கவிஞரின் எழுதுகோல் விடுக்கும் செய்தியைக் கேளுங்கள்:

"எழுதாளத் தமிழர்களே! எழுதுங்கள் ஆனாலோ
எதையும் அல்ல!
விழுத்துகிறார் இனவாத வெறியர்களும்,
'அபினி' களும் வெறும் பொய்யாலே!
அழுத்துங்கள் உண்மைகளை அகச்சான்று
புறச்சான்று
அனைத்தும் தேடி!
புழுத்திட்ட குப்பையெலாம் புறம் தள்ளி வீசுங்கள்
புனிதமாக!
வந்தோர்கள் நாம்தானாம் வரலாறு திரிக்கின்றார்
வங்கத்தார்கள்!
இந்தநாடு எமக்கில்லையாம் இருக்கட்டாம்
வாய்மூடி,
என்ன வீரம்?
சொந்தமெது இரவலெது? சொல்லுங்கள் வடிவாகச்
சோர வேண்டாம்!"

எது கவிதை?
அதற்கு வரவிலக்கணம் என்ன?
கேட்டுவிட்டுச் சும்மா இருக்கவில்லை அவர்!

ஒரு கவிஞர் பட்டாளத்தையே இழுத்து வந்து நம்முன் நிறுத்துகின்றார்.

"உள்ளத்துள்ளது கவிதை,
உணர்ச்சி உருவெடுப்பது கவிதை
தெள்ளத் தெளிந்த தமிழில் அதனைத்
திட்டி விடுப்பது கவிதை"
— கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை.

"ஆர்வத் தீயால் அன்புள்ளுருகி அருவிபோல வருவது பாட்டாம்" — கவி யோகி சுத்தானந்த பாரதியார்.

"சொற் புதிது, பொருள் புதிது, சுவை புதிது சோதி மிக்க நவ கவிதை" — புரட்சிக்கவி பாரதி.

“இளமைக் கயிற்றில் கனவைத் தொடுத்தல் கவியாகும்!” — நீலாவணன்.

“கண்ணுக்குத் தெரியாத இரகசியத்தைக் கைது செய்து பார்ப்பதுதான் கவிதை!” —வைரமுத்து.

“சொல்லடுக்கிச் சொல்லடுக்கிச் சோடித்த கவிதை எல்லாம் போதும்!” —காசி ஆனந்தன்.

“கடவுளுக்கு அடி முடி கிடையாது. கவிதையும் அப்படியே!” —வித்துவான் வேலன்.

“உப்புக்குப்பாடி புளிக்கும் ஒரு கவிதை ஒப்பிக்கும் என்றன் உளம்!” —ஔவையார்.

“வெறுமனே கருத்துரைத்தல் கவியாகாது!” —கவிக்கோ அப்துல்ரகுமான்.

“சிக்கலற்ற எளிமையின் இயல்பாயமைந்த வாழ்பவனுக்கு கீற்றுக்களால் வேய்ந்த குடிசையே கவிதை —வில்வரெத்தினம்

‘கவிஞர் தாமரைத் தீவா’னின் தேடல் வீச்சைப் பார்த்தீர்களா? 100 கவிதைகளை கை நிறைய அள்ளித் தந்த கவிஞரை நூறாண்டு வாழப் பிரார்த்திப்போம்!’

கவிதையை ரசிப்போருக்கும், கவிதையைப் படைப்போருக்கும் ‘மொழி நூறு’ ஒரு கைகாட்டி!

நவம்

7B, தெற்கு கங்கை அம்மன்
கோயில் முதல் தெரு,
சூளைமேடு, சென்னை — 94.
தமிழ்நாடு, இந்தியா.
தொலைபேசி:044-24729146
0091-44-24729146

# என் உரை

பழையவை போக, 90 லிருந்து புதிதாய்க் கீறியவற்றில் 8 நூல்கள் வெளியிட்டேன். 10 கிடக்கிறது. எல்லாம் சிறியவையே. ஏனெனில் கூடிய விலையில் நூல் வாங்கார் - வாங்கினும் படித்து முடிக்கார் - காலம் அப்படி - கணினிக்காலம்... தொலைக்காட்சிக்காலம். ஆயினும் மிகச்சிறு நூலுக்கும் (குறளைத்தவிர) மதிப்பில்லை. எத்தனை பக்கம்? என்பதும் ஒரு கேள்வியாயுள்ளது. எனவே 100 பக்க நூல் ஒன்றுக்கு உரியவை தேடினேன். 28ஆம் கொப்பியிலிருந்து 50 ஆம் கொப்பிவரை 'உள்ளவற்றில் சில பொறுக்கினேன். 100 தலைப்புக்கள் (400 பாக்கள்). 'மொழிநூறு' எனப் பெயரிட்டேன். யான் போன பின்பாவது யாராவது வெளியிட முயலலாம்? எனும் நம்பிக்கை உண்டு. 90 ஆம் ஆண்டிலிருந்து 2003ஆம் ஆண்டு வரையானவை உண்டு (14 ஆண்டு காலம்). இவை கவிதைகளா? எனப் பாராமல் கருத்துக்களை மரபுச் செய்யுளாகப் பார்ப்பது நலம்.

கவிதை என்றால் என்ன? என்பதற்குப் பலரும் பலவிதமாகக் கூறினார்கள். 'உள்ளத்துள்ளது கவிதை - உணர்ச்சி உருவெடுப்பது கவிதை - தெள்ளத் தெளிந்த தமிழில் அதனைத் தீட்டி விடுப்பது கவிதை' என்றார் கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளை. 'ஆர்வத்தீயால் அன்புள்ளுருகி அருவி போலே வருவது பாட்டாம்' என்றார் கவியோகி சுத்தானந்த பாரதியார். 'சொற்புதிது, பொருள் புதிது, சுவை புதிது, சோதிமிக்க நவகவிதை' என்றார் பாரதியார். 'இளமைக்கயிற்றில் கனவைத் தொடுத்தல் கவியாகும்' என்றார் நீலாவணன். 'கண்ணுக்குத் தெரியாத ரகசியத்தைக் கைது செய்து பார்ப்பதுதான் கவிதை போலும்' என்றார் வைரமுத்து. 'சொல்லடுக்கிச் சொல்லடுக்கிச் சோடித்த கவிதை எலாம்

போதும்' என்றார் காசி ஆனந்தன். 'கடவுளுக்கு அடி முடி கிடையாது, கவிதைக்கும் அப்படியே' என்றார் வித்துவான் வேலன். 'உப்புக்கும் பாடிப் புளிக்கும் ஒரு கவிதை ஒப்பிக்கும் என்றன் உளம்' என்றார் ஔவையார். 'நடந்தால் வசனம், பாய்ந்தால் கவிதை' என்பர் புதுமையோர். 'வெறுமனே கருத்துரைத்தல் கவியாகாது' என்றார் அப்துல்ரகுமான். 'சிக்கலற்ற எளிமையின் இயல்பாலமைந்த வாழ்பனுபவக் கீற்றுக்களால் வேய்ந்த குடிசையே கவிதை' என்கிறார் வில்வரெத்தினம். ஆயின் எது கவிதை? நீங்களே தீர்மானியுங்கள்.

யாப்பிற்கேற்பச் செய்யப் படுவது செய்யுள். இசையோடு பாடக் கூடியது பாடல். உணர்ச்சி, கற்பனை, சொல்லாட்சியோடு உவமை, படிமம் குறியீடு, கருத்தாழம் போன்ற கவித்துவங்கள் உடையது கவிதை எனக் கொண்டால் இவை எந்த வகை? என முடிவெடுங்கள். பொருளுக்காக (புரட்சிக்காக)ப் படித்துப் பாருங்கள். பயனுள்ள பொழுது போக்காகும். 'இரவின் இரகசியத்தைச் சொல்லி விடப் போகிறதே என்பதற்காகக் காலையில் விளக்கின் நாக்குத் துண்டிக்கப்பட்டது'. இது ஒரு நல்ல புதுக்கவிதை (யாப்பிலி)யேதான். 'அனிச்சப்பூக் கால்களையாள் பெய்தாள் நுசுப்பிற்கு நல்ல படாஅ பறை' (1115) இதுவும் ஒரு நல்ல வள்ளுவரின் பழங்கவிதை (யாப்புளி)தானே. எனவே கவிதை எங்குமுண்டு. தேடிப் பிடித்துப் படித்து மகிழ்வோம். முயற்சி தன் மெய் வருந்தக் கவிதை தரும். போதாதா?' நன்றி - வணக்கம்!

**தாமரைத் தீவான்**

*சோ. இராசேந்திரம்*
*ஈச்சந்தீவு*
*கிண்ணியா*
*27.10.1990*

## உள்ளே...


| | |
|---|---|
| 1. எங்கே? | - 15 |
| 2. இரு | - 17 |
| 3. கோலம் | - 19 |
| 4. கடிதம் | - 21 |
| 5. அழிவே | - 23 |
| 6. ஆனார் | - 25 |
| 7. அழகு | - 27 |
| 8. ஒன்று | - 29 |
| 9. மலை | - 31 |
| 10. காசே | - 33 |
| 11. உய்யும்? | - 35 |
| 12. பசி | - 37 |
| 13. இலைமலை | - 39 |
| 14. சரியே | - 41 |
| 15. யாரே | - 43 |
| 16. துணை | - 45 |
| 17. கோளில்... | - 47 |
| 18. மூவுலகம் | - 49 |
| 19. வாழ்கவே | - 51 |
| 20. கட்டு | - 53 |
| 21. மருந்தகம் | - 55 |
| 22. இறை | - 57 |
| 23. வள்ளுவம் | - 59 |
| 24. அடிமட்டம் | - 61 |
| 25. கோயில் | - 63 |
| 26. தாள் | - 65 |
| 27. பாலை | - 67 |
| 28. உலகம் | - 69 |

29. ஏனம்மா? - 71
30. தூங்கு I - 72
31. வெடி - 74
32. உரிமை - 75
33. மாற்று - 77
34. தமிழா! - 79
35. சமயம் I - 81
36. வைப்போம் - 83
37. கனவு - 85
38. கேள்வி - 86
39. காந்தி - 88
40. போதும் - 90
41. பக்குவம் - 92
42. மாறு - 94
43. சோழநாடு - 96
44. ஆறு - 97
45. உண்டு-இல்லை - 98
46. வீடு - 100
47. பார்! - 101
48. எட்டா! - 102
49. உண்டோ? - 103
50. உணர்வோம் - 105
51. கச்சான் - 107
52. முதுமை - 109
53. மனிதா - 111
54. ஏன்? - 113
55. நாற்பதுகள் - 114
56. தூங்கு II - 116
57. படி (கடிதம்) - 118
58. படி-எழுது - 119

59. ஒன்று-ஒன்பது - 120
60. ஒன்று (பதில்) - 121
61. ஒளிகள் - 122
62. ஒருதடவை - 124
63. சமயம் II - 126
64. வெல்லும் - 128
65. இனிமை - 129
66. விடாதே - 130
67. என்னே? - 131
68. இல்லை - 133
69. ஆர்? - 135
70. சரிதம் - 137
71. பார்-நோய் - 138
72. மனதால்... - 139
73. பின்னல் - 140
74. உற்றறி - 142
75. அன்பே சிவம் - 144
76. நீட்டு வரலாற்றின்... - 146
77. இல்லார் - 148
78. நம்ம தீவு - 150
79. எதிர் - 152
80. போனியா? - 154
81. பாடிட்டி - 156
82. பார்க்கிறோமா? - 157
83. போவதுவோ? - 159
84. மொத்தமாய் - 161
85. படையல் - 163
86. இறங்கும் - 164
87. வருவாய் - 165
88. ஏதுமில்லை - 166

89. புண்ணியம் - 167
90. தொழிலப்பார் - 169
91. விடலாமா? - 171
92. மனிதமேன்மை - 173
93. விழிப்பு - 174
94. வேண்டும் - வேண்டாம் - 176
95. வையாதீர் - 178
96. அள்ளு - 180
97. வெண்தாட்செய்யார் - 182
98. போவோம் - 184
99. மரபு - 186
100. சமம் - 188

# 1. எங்கே?

1. பள்ளிகள் எங்கே? கோயில் -
படிப்பகம் - நூல்கள் எங்கே?
துள்ளிய பிள்ளை எங்கே?
சுற்றுநீர் ஓடை எங்கே?
அள்ளிய கூனி எங்கே?
ஆடுகாய்க் கண்டல் எங்கே?
நள்ளிரவதனிற் கூட
நடத்திய பாவை எங்கே?

2. மந்தியின் பாய்ச்ச லெங்கே?
மா மரச்சோலை எங்கே?
அந்தியின் வவ்வால் எங்கே?
ஆந்தையின் அலறல் எங்கே?
குந்திடும் மணல்தான் எங்கே?
கூடிய சங்கம் எங்கே?
சந்திகள் தெருக்கள் எங்கே?
சரக்குள கடைகள் எங்கே?

3. வீடுகள் பொருட்கள் எங்கே?
வேலிகள் மரங்கள் எங்கே?
பாடுகள் பயன்கள் எங்கே?
பயிர்செடி கொடிகள் எங்கே?
பேடு நாய் பூனை எங்கே?
பெருந்துலாக் கிணறு மெங்கே?
தேடிய நூல்கள் எங்கே?
தீட்டிய கவிகள் எங்கே?

4. தென்னைகள் பனைகள் எங்கே?
சேர்பலா கமுகு மெங்கே?
பின்னைய சம்பு கோப்பி
பெரிய வெற்றிலைகள் கித்துள்
முன்னைய விரும்பி கொய்யா
முந்திரி தோடை எங்கே?
என்னென்ன வெல்லாம் கொண்ட
ஈச்சந்தீவூர் இன்றெங்கே?

-----

# 2. இரு

1. பொறுத்திரு. நம்பிக்கை வை!
புனிதத்தைச் செயலில் காட்டு!
மறுத்திரு வதந்திக் கூற்றை!
மறந்திரு நடந்ததெல்லாம்!
வெறுத்திரு அநியாயத்தை!
விரும்பினால் எதிர்ப்பைக் காட்டு!
நிறுத்திரு மனிதர் தம்மை,
நிகழ்ச்சியால் நடத்தையாலே!

2. படித்திரு வரலாறெல்லாம்!
படைத்திரு புதுமை யாவும்!
முடித்திரு கடமை யெல்லாம்!
முயன்றிரு கடைசி மட்டும்!
கடித்திரு பல்லைக் கெட்ட
காலங்கள் கழியுமட்டும்!
வடித்திரு கவிதைச் சிற்பம்
வண்டமிழ்க் கல்லினாலே!

3. விழித்திரு! நமதினத்தில்
விடுதலை விரும்பாதோரைக்
கழித்திரு! வீணாய்க் காலம்
கழித்திருப் போரைக் கண்டே
பழித்திரு! அழித் தொழிக்கப்
பார்த்திருப்போரையெல்லாம்
அழித்திரு! உரிமையெல்லாம்
அடைந்திடல் திண்ணமாமே!

4. சேர்ந்திரு! ஒன்று கூடிச்
சிந்தித்து முடிவில் ஒன்றைச்
சார்ந்திரு! உரிமைப் போரின்
சரித்திர வெற்றிக்காக
நேர்ந்திரு! ஆனால் துன்ப
நிகழ்ச்சிகள் காணுந்தோறும்
சோர்ந்திருக்காதே! வாழ்வின்
சுதந்திரம் முயலுவோர்க்கே!

-----

# 3. கோலம்

1. தண்ணியும் அடித்துக் கொள்வார்!
சண்டையும் பிடித்துக் கொள்வார்!
பெண்ணெலாம் ஆண்கள் ஆகும்
பிரியமும் கொள்ளு வார்கள்!
கண்ணியக் கடமை வீரர்
கட்டுப்பாடதனை நாடி
எண்ணுவார் காவல் செய்ய -
இரவிலே சுற்றுவார்கள்!

2. அடுப்பெலாம் உள் இருக்கும்!
அதிகமாய்ப் புகை எழும்பும்!
உடுப்பெலாம் கருமை யாகும்!
உள் இழுப்பார்கள் மூச்சாய்!
கொடுப்பினுள் பாக்கிருக்கும்!
குருத்தோலை உதடிருக்கும்!
கடுப்பெலாம் காலிருக்கும்!
காரணம் நிவாரணங்கள்!

3. கட்டுவார் கையிற் காப்பு!
கந்தரின் நோன்பிருப்பார்!
வெட்டுவார் மறுநாள் மீனை!
வெள்ளியில் எரிப்பார் சூடம்!
தொட்டியில் முழுகுவார்கள்!
தோய்த்தெலாம் காய வைப்பார்!
கொட்டுவார் மலத்தை எங்கும்
குப்பை மீன் தலைகள் எல்லாம்!

4. களவுகள் செய்து பார்ப்பார்!
கடியபொய் சொல்லிப் பார்ப்பார்!
பளபளப் பெல்லாம் பூட்டிப்
பயணமும் செய்து பார்ப்பார்!
வெளியிருந்தெவரும் வந்தால்
வேண்டியதெல்லாம் செய்வார்!
அளவிலாக் கோலம் காட்டும்
அகதிவாழ் 'கிளப்பன் பேக்'கே!

-----

# 4. கடிதம்

1\. இலங்கையின் அகதிதான் நான்!
இந்திய மண்ணில் உள்ளேன்!
கலங்கிய வண்ணமாய்த் தான்
கண்விழித்திருப்பாய் அங்கே!
நலங்களை அறியும் நோக்கில்
நான் மடல் தீட்டுகின்றேன்!
துலங்கிடும் எழுத்தால் உந்தன்
சுகங்களை அறிவிப்பாய் நீ!

2\. சந்தித்த மும்மாதத்தால்
சண்டையும் வந்து போச்சே!
வந்தொரு வருட மாச்சே!
வருவதும் முடியாதாமே?
இந்தியத் தமிழகத்தில்
இருப்பினும் உடல்தான் இங்கே!
சிந்தனை யெல்லாம் அங்கே!
திருமணம் ஏன் செய்தோமோ?

3\. உன்னை நான் கூப்பிடாமல்
ஓடிவந்தது தான் மோசம்!
என்னவோ படையார் என்றார்!
எடு - பிடி - நட - போ என்றார்!
சொன்னதும் சுணங்கவில்லை!
சொல்லவும் நினைவும் இல்லை!
என்னத்தின்மூலம் வந்தேன்
என்றுமே தெரியவில்லை!

4. ஒருவித மயக்கத்தாலே
உடனடித்தூக்க மானேன்!
அருகினில் சிலபேர் வந்து
அமர்ந்திருந் தெழுப்பலானார்!
பெருவியப்புடனே பார்த்தேன்,
பிறஇடம் - தமிழ்நா டென்றார்!
வருகிறேன், உரியநேரம்
வந்ததும் - கடிதம்போடு!

-----

## 5. அழிவே!

1\. காலெலலாம் இடறும் கல்லு!
கண்ணெலாம் மலையின் காட்சி!
மேலெலாம் குளிரும் காற்று!
வெளியெலாம் பறவைக் கப்பல்!
தோலெலாம் வெட்டும் போத்தல்!
தொலைவெலாம் வெடியின் சத்தம்!
கோலெலாம் கவியாய்த் தாளில்
கொட்டிடும்கிளப்பன்பேக்கே!

2\. தரையெலாம் மருந்துப் பூண்டு!
தளமெலாம் பள்ளம் திட்டி!
நிரையெலாம் மக்கள் கூட்டம்!
நினைவெலாம் ஊரும் வீடும்!
உரையெலாம் நேரும் சீரும்!
உணவெலாம் வாசச்சோறு!
அரையெலாம் கந்தல் துண்டு!
அருமைதான் கிளப்பன் பேக்கே!

3\. தெருவெலாம் கலவைச் சாந்து!
திசையெலாம் ஊர்திச் சத்தம்!
தருவெலாம் வேல் - பூவாகை!
தடமெலாம் ஆடும்மாடும்!
அருகெலாம் குடிசைக் குச்சில்!
அழிகெலாம் தகரக் கூடம்!
வருமெலா வாய்க்காலும் நீர்!
வடிவெலாம் கிளப்பன் பேக்கே!

4. வழியெலாம் வருவோர் போவோர்!
வாழ்வெலாம் அகதிப்பேரே!
குழியெலாம் கழியும் கல்லும்!
குறையெலாம் பறக்கும் வாழ்வே!
அழிவெலாம் நமக்கே சொந்தம்!
ஆக்கமோர் ஐயப்பாடே!
கழிவுளார் கலந்திட்டாலும்
காவலாம் 'கிளப்பன் பேக்'கே!

-----

# 6. ஆனார்!

1. கோயிலில் சாமி வைப்பார்!
கும்பிடக் காசு கேட்பார்!
வாயிலில் பானை வைத்தே
வணங்குவார் - உணவினாலே
நோயினை வரவழைப்பார்!
நுவலுவார் மந்திரத்தால்
பேயினை விரட்டுவார்கள்!
பேயராய்த் தமிழர் ஆனார்!

2. பிடிப்பதோ மூடக் கொள்கை!
பேச்செலாம் சாமிப்பேரே!
படிப்பதோ புராணக் குப்பை!
பார்ப்பதோ பஞ்சாங்கங்கள்!
நடிப்பதோ பக்திக் கோலம்!
நாளெலாம் மீனும் நண்டும்!
குடிப்பதோ பலவும் பத்தும்!
குண்டராய்த் தமிழர் ஆனார்!

3. கற்பதை ஆய்வு செய்யார்!
கடவுளை வாயிற்கொள்வார்!
நிற்பதோ எதிர்மா றாகும்!
நினைவெலாம் தீயவற்றில்!

பற்பல பேராசை கள்!
பகலிரா ஓட்டம், காசால்
சிற்சில அலுவல் பார்ப்பார்!
தீயராய்த் தமிழர் ஆனார்!

4. எப்படியேனும் வாழ்வார்!
இறந்ததும் கிரியை செய்வார்!
இப்படி வாழ வேண்டும்
என்ற கோட் பாடே இல்லை!
செப்படி வித்தை யல்லால்
திருந்திய வாழ்வே இல்லை!
இப்படித் தமிழர்கள் தான்
இன்றிருப்போரில் கூட!

-----

## 7. அழகு

1. பாயெலாம் மூட்டைக் கூட்டம்!
பறப்பெலாம் நுளம்புக் கப்பல்!
நாயெலாம் ஊழைப் பாட்டு!
நடப்பெலாம் மந்தைச் சாதி!
நோயெலாம் இருமல் காய்ச்சல்!
நோக்கெலாம் ஊரும் வீடும்!
வாயெலாம் தமிழும் வாழ்த்தும்!
வரைகொண்ட கிளப்பன் பேக்கே!

2. கானெலாம் தண்ணீரோசை!
காலெலாம் கடிக்கும் சோண்டி!
வானெலாம் கோளும் மீனும்!
வரையெலாம் புல்வாய் மந்தி!
தீனெலாம் பயறும் மாவும்!
செயலெலாம் கதையும் பேச்சும்!
ஏனெலா வடிவுங் கொண்ட
எமதருங் கிளப்பன் பேக்கே!

3. வீடெலாம் வேலிச் சேலை!
வெளியெலாம் விறகுக் கட்டை!
பாடெலாம் சாமான் வாங்கல்!
பணியெலாம் சமையல் பாகம்!

ஏடெலாம் கவியும் கீறும்!
இரவெலாம் மழையும் காற்றும்!
ஈடிலா அகதிக் கேற்ற
இருப்பிடம் கிளப்பன் பேக்கே!

4. வழியெலாம் கும்பம் மீனம்!
வனமெலாம் சிங்கம் கன்னி!
குழியெலாம் இடபம் மேடம்!
கூட்டலாம் மேலும் கீழும்!
கழிவெலாம் நலமாம் இங்கே!
காணலாம் பொதுவாய் எல்லாம்!
அழிவெலாம் நிகழ்ந்திட்டாலும்
அழகெலாம் 'கிளப்பன் பேக்'கே!

-----

# 8. ஒன்று!

1. கோயிலைக் கட்டி யோனும்
குடமுழுக்காட்டி யோனும்
வாயிலில் பொங்கல் இட்டே
வழிபாடு செய்திட்டோனும்
தாயினும் மேன்மை யான
தலைவனைச் செதுக்கியோனும்
போயிருந்தொன்று கூடிப்
புலம்புதல் யாரினாலோ?

2. துணி அழுக் ககற்றி யோனும்
சுருள்மயிர் நறுக்கியோனும்
அணிமரம் ஏறியோனும்
அறைபறை தூக்கியோனும்
பிணிகளை மாற்றி யோனும்
பெருங்கலை ஊட்டியோனும்
கணிசமாய் ஒன்று கூடிக்
கத்துதல் யாரினாலோ?

3. 'மல'சலம் அகற்றியோனும்
மாகடல் வலையிட்டோனும்
நிலப்பயிர் விளைவித்தோனும்
நீள்மரம் பொருத்தியோனும்
பலமனை கட்டி யோனும்
பைந்தமிழ் எழுதியோனும்
விலகிடா தொன்று கூடி
விளம்புதல் யாரினாலோ?

4. நல்லவர் தீயவர்கள்
நாட்டு நற்றொண்டரெல்லாம்
வல்லவர் வறியர் செல்வர்
வழக்கு மெய்ப்புளுகர் கள்ளர்
தொல்லைகள் புரிவோர் வாழ்வின்
தூயவர் கற்றோர் கல்லார்
எல்லாரும் ஒன்று கூடி
இருந்திடும் விந்தை காணீர்!

-----

# 9. மலை!

1. மலையப்பா நகராமப்பா!
    மலைக்கவே செய்ததப்பா!
அலையலையாக மக்கள்
    அங்கிங்கே எங்குமப்பா!
இலையப்பா கவலை அங்கே!
    எல்லாமே இருக்குதப்பா!
தலையெல்லாம் சுற்றுமப்பா!
    சரிநீயும் போய்ப்பாரப்பா!

2. தெருவெல்லாம் வண்டியப்பா!
    சிலையப்பா பெண்க ளெல்லாம்!
வருமப்பா - போகுமப்பா!
    வாயெல்லாம் இலை யானப்பா!
பெருமோசைக் கொசுவாரப்பா!
    பிணிஊசி தருவாரப்பா!
ஒருநாளும் செவியில் ஓசை
    ஒழியாது - ஒழியாதப்பா!

3. இலவசம் கல்வி யப்பா!
    என்றாலும் காசுண்டப்பா!
பலகோயில் வழிபாடப்பா!
    பாவங்கள் தொலையுமப்பா!
நலமான நூலகங்கள்
    நம்மூளை திருத்து மப்பா!
கலகலப்பான முற்றக்
    கடலோரக் காட்சியப்பா!

4. எல்லாமே சரிதானப்பா!
இருப்போர்க்கே மகிழ்ச்சியப்பா!
இல்லார்க்கோ இல்லை யப்பா!
எம்பாடும் பொறுப்பா மப்பா!
வல்லாரே வாழ் வாரப்பா!
வதையப்பா நல்லோரானால்!
பல்லாண்டும் வாழும் எங்கள்
பழம் - புது மலைதானப்பா!

------

# 10. காசே!

1. காற்றுண்டு! காற்றையுண்டே
காலத்தைக் கழிப்பதற்கு
ஏற்றவா றிருந் திருந்தால்
எவ்வகைச் செலவுமில்லை!
ஊற்றுண்டு! நீரையுண்டே
உயிர்வாழ முடிந்திருந்தால்
வீற்றிருந் திருப்போம் சும்மா
வேண்டியதில்லை ஒன்றும்!

2. உணவன்றோ மூன்று வேளை
உண்டிடும் நியதியாச்சு!
பணமன்றோ தேவை யாச்சு!
பலதொழில் வேண்டுமன்றோ?
கணமுமோர் ஓய்வு மின்றிக்
கை கால்கள் ஆடினாலும்
பிணமெனத் திரிய நேரும்,
பெரும்பணம் இல்லையென்றால்!

3. உடுத்திட உடையும் வேண்டும்!
ஒதுங்கிட வீடும் வேண்டும்!
படுத்திடப் பாயும் வேண்டும்!
பயிரிட நிலமும் வேண்டும்!
எடுத்திடப் பயனும் வேண்டும்!
இல்லாமை உள்ளார் வந்தால்
கொடுத்திடப் பொருளும் வேண்டும்!
கொஞ்சமா வேண்டும் - வேண்டும்?

4. எல்லாமே காசு காசே!
இல்லாமல் அசையா தூசே!
பொல்லாரும் நல்லார் ஆவார்!
பொருளில்லார் இல்லாரே தான்!
வெல்லாரே கற்றார் கூட!
வீரத்தார் விலையாவாரே!
சொல்லாமல் விதைத்தே காசைத்
துரிதமாய் விளைவிப்போமா?

-----

# 11. உய்யும்?

1. மனிதனென் றொருவன் வந்தான்!
மாவிலங்கொன்றே தாயாம்!
புனிதனாய் வாழ்வே னென்றான்!
போகிறான் நரகல் பாதை!
மனமெனும் ஒன்றைத் தானே
மடக்கிடத் தெரிந்திடாமல்
எனதென தென்றே நாளும்
எங்கெங்கோ அலைகின்றானே!

2. மதமென்றான், மொழியாமென்றான்!
மானிலம் துண்டு செய்தான்!
சதமல்ல வாழ்க்கை யென்றான்!
சதா தேடியோடு கின்றான்!
பதமான உரைகள் செய்தான்!
பாதியும் நடந்தானில்லை!
விதமான பொருட்களாலே
வித்தைகள் காட்டி நின்றான்!

3. அறிவென்றான், தெய்வ மென்றான்!
ஆயிரம் கோயில் செய்தான்!
அறிவினால் கருவி செய்தான்!
ஆளை ஆள் கொல்லலானான்!
வெறிகளின் உச்சம் சென்றே
விசரனாய் மாறலானான்!
பறித்தவன் சிரித்து வாழ்ந்தான்!
பறிகொடுத்திட்டோன் தாழ்ந்தான்!

4. மனிதனை மிருகம் பார்க்கும்!
மனதினுள் எதையோ சொல்லும்!
இனி உலகெங்கே உய்யும்?
என்றுதான் எண்ணும்! மேலும்
மனிதனாய் வந்தோன் மீண்டும்
மாவிலங்காகினானேல்
புனிதநம் வாழ்வும் போமோ
புவியிலே? என யோசிக்கும்!

-----

# 12. பசி!

1. இலக்கியம் சமைத்தேன்! ஆனால்
எவருமே உண்பார் இல்லை!
கலக்கினேன் நகையும் சேர்த்தே!
கரையலைக் குடிப்பார் இல்லை!
துலக்கினேன் புதுமையாலே!
தொட்டுமே பார்ப்பார் இல்லை!
விலக்கியே வைக்கப் பார்த்தேன்!
விட்டது போனால் தானே?

2. பசியானால் தாகமானால்
பருகலாம் உண்ணலாகும்!
பசியிப்போ குடலிலே தான்!
பாய்ச்சலும் ஓட்டமும்தான்!
கசிகின்ற கண்ணும் மூக்கும்,
காய்கின்ற வாயும் நெஞ்சும்,
நசிகின்ற வயிறு மானால்
நம்படைப் பெங்கே செல்லும்?

3. செவியினில் சுவை காணாமல்
திறந்தவாய்ச் சுவைகாண் மாக்கள்
அவியிலென்? வாழிலென்னென்
றன்றுரைத்தார் முப் பாலார்!

செவிக்குணவில்லாப் போழ்தே
சிறிதுண்டாம் வயிற்றின்காலம்!
அவர் காலம் செவியின் காலம்!
ஆம், இன்றோ வயிற்றின் காலம்!

4. என்றாலும் காலம் மாறும்!
இலக்கியம் வளரும் - வாழும்!
நன்றாகச் சுவைப்பார் - உண்பார்!
நாவுண்ணும் செவியின் பின்பே!
இன்றுள்ள தெல்லாம் மாறும்!
எதிர்காலம் கவிதைக் குண்டாம்!
வென்றுள்ளம் உயரும் - வண்டி
வீக்கங்கள் குறையுந் தானே!

-----

# 13. இலைமலை!

1. மலை! வெறும் மலையே அல்ல!
மரகத மலைகள்! எல்லாம்
இலைமலை! ஒன்றில் ஒன்று
இணைமலை! தொடர்மலைகள்!
கலைமலை கண்கட் கென்றும்
காட்சிமா மலைகள்! நல்ல
விலைமலை! எதுவும் சும்மா
வீண்மலையான தல்ல!

2. நாட்டினில் உயர்வு மாந்தர்
நல்மலை மாந்தரேதான்!
மேட்டினில் வாழ்வர், என்றும்
மேதினி எங்கும் வாழி!
ஏட்டினில் வாழ்வர், இந்த
ஈழமண் எல்லாம் வாழி!
பாட்டினில் வாழ்வர், இந்தப்
பாரெலாம் வாழித்தானே!

3. உணவினை உண்பவர்கள்
உழைத்துமே உண்பவர்தான்!
கணமும் ஆடாமல் அந்தக்
கைகால்கள் ஓய்வதில்லை!
மணமுடைத்தே நீருக்கே
மானிலம் படுமோர் பாடு?
பணமுழைத்திடுவோ ரெங்கே?
பாடுகள் படுவோ ரெங்கே?

4. ஆற்றலுக் கேற்ற வேலை!
அத்தொழிற்குரிய கூலி!
நாற்றிசைத் தொழிலாளர்க்கும்
நல்லுயர்வான வாழ்வு!
தூற்றுதலேது மில்லாத்
தொழிற்சம உரிமை யாவும்
போற்றிடுநாளே 'மே' நாள்!
பொதுத் தொழிலாளர் நாளே!

-----

# 14. சரியே!

1. உன் அரும் பெயர் உரைத்தே
உலகமே பொழுது போக்கும்!
என்னதான் சொன்ன போதும்,
எதையெலாம் செய்த போதும்,
சின்னதோர் அசைவு மின்றிச்
சிலையெனத் தெரிவதுந்தன்
உன்னதக் கொள்கை யாகும்!
உன்நிலை சரியுந்தானே?

2. நல்லவர் வந்து நிற்பார்!
நாடுவார் தீயவர்கள்!
வல்லவர் வேள்வி செய்வார்!
வாழ்த்துவார் மெலிவு கொண்டோர்!
சொல்லுவார் துயர துன்பம்!
சுகமுளார் வந்து போவார்!
எல்லோர்க்கும் பொதுவாய்ச் சும்மா
இருக்கும் உன் இயல்பு நன்றே!

3. புயல்வரும், வெள்ளம் பாயும்!
புவிமலை தீயைக் கக்கும்!
அயல்நிலம் நடுங்கும்! மக்கள்
ஆயிரக்கணக்கில் மாள்வார்!
இயலுமா எல்லாம் பார்க்க?
எங்குமே போர்க்களந்தான்!
தயவு செய்துந்தன் போக்கே
சரி - இரு - சிலையே நன்றாம்!

4. ஆக்கமும் காப்பும் நீயேல்,
அழிப்பதும் நீயேல் உந்தன்
நோக்கமும் சரியே! இன்றேல்
நொடியினில் பிறப்போ சாவோ
தாக்கவே செய்யும்! உந்தன்
சரித்திரம் மாறும்! மாந்தர்
நாக்கினால் எதையும் சொல்வார்!
நடைமுறைச் சிலைக்கோ வாழ்க!

-----

# 15. யாரே?

1. அன்னைக்கோர் பையைத் தந்தே
ஆண்டவா என்னைத் தந்தாய்!
'உன்னைப்பார்' என்றே மேலாம்
உயர்வான அறிவைத் தந்தாய்!
தன்னைத்தான் பாராதோர்க்குத்
தலைவாநீ எதுதான் செய்வாய்?
பொன்னைத்தான் புவியில் தந்தே
போய் அள்ளும் கையும் தந்தாய்!

2. அறிவைத்தான் வணங்கச் சொன்னாய்!
அன்பைத்தான் வணங்கச் சொன்னாய்!
நெறியைத்தான் பிடிக்கச் சொன்னாய்!
நின்சொல்லை யார்தான் கேட்டார்?
'பறி' என்றார் பதவிப் பற்றால்!
பாழ் செய்தார் மதநீர் கூடி!
வெறி கொண்டார் விளைவைக் கண்டார்!
வேதனைப் பெருமூச்சாச்சே!

3. 'கோயில்கள் பல கட்டாதே!
கும்பிட்டு வரங்கேளாதே!
தாயைப்பார் - தந்தையைப் பார்!
தமரைப்போல் பிறரையும் பார்!

நோயென்றால் பேயாகாதே!

நூல் - கோளென்றே மாறாதே!

வாயல்ல நெஞ்சே பக்தி!

வாழ்' என்றாய் - யாரே வாழ்ந்தார்?

4. 'முயற்சியே வாழ்வாம் என்றாய்!

முன்னேற்றம் அதுவே என்றாய்!

உயர்ச்சிநீ அடைவாய் என்றாய்!

உனதுசொல் யாரே கேட்டார்?

அயர்ச்சியால் கிடந்தே தூங்கி

ஆண்டவா, என்றால் நீயும்

தயக்கமாய்த்தானே பார்ப்பாய்?

சங்கரா - சிவசிவாவே!

-----

# 16. துணை!

1. ஈருடல் ஓருயிர் போல்
   என்னுடன் என்றுமுள்ள
சீருருவாளே, உந்தன்
   செயல்களைப் பார்க்கிறேன் நான்!
பேருருப் பல கிடந்தும்
   பிணியிலாப் பிணியை யெல்லாம்
தீருரு நீயே! உந்தன்
   திருப்பணிக் கெனது நன்றி!

2. தெய்வமாயிருந்து கொள்வாய்!
   சீரிய தாயாய் ஆவாய்!
ஐயமில் தோழியா வாய்!
   ஆருயிர் மனைவி போல்வாய்!
செய்திடு பணியாள் ஆவாய்!
   சிறுநகைக் குழவி ஆவாய்!
வையகக் குருவே போல்வாய்!
   வாழ்க என் பாதி நீயே!

3. நம்பிக்கை அற்றவற்கே
   நம்புமோர் உருவமானாய்!
வம்புகள் வாது சூது
   வஞ்சகம் ஏமாற்றுள்ள
அம்புவிதன்னில் வீட்டை
   அமைதியின் உலகமாக்கி
எம்பசிப் பிணியை நீக்க
   எரித்திடும் தொழிலேற்றாயே!

4. படித்துரை செய்தா லென்ன?
   படிம்முறை சொன்னாலென்ன?
இடித்துரை செய்யும் நட்பை
   என்றுமே கொள்ளுவாய் நீ!
நடித்திடும் செய்கை யின்றி
   நடக்கிறாய்! இல்லையென்றால்
வெடித்திடும்! உன்னை விட்டால்
   வீடுதான் - ஞானிதானே!

-----

# 17. கோளில்...

1. ஐயகோ அகதி ஐயா!
அகதியில் புலவன் ஐயா!
பொய்யிலை, பாரும் ஐயா!
புலம்புதல் கேளும் ஐயா!
மெய்யெனில் போடும் ஐயா!
மிஞ்சினால் வீசும் ஐயா!
வையகத் தினியும் ஏதும்
வாழ்வெமக்கு உண்டு மாமோ?

2. இல்லையே பொருள்கள் ஏதும்?
இல்லையே வளவும் வீடும்?
இல்லையே வேலி - கம்பி;
இல்லையே கமுகு - தென்னை?
இல்லையே மா - பலாக்கள்?
இல்லையே வடலி - மட்டை?
இல்லையே கிணறு - தண்ணீர்?
எவ்விதம் தாகம் தீரும்?

3. கையிலே காப்பும் இல்லை!
காதிலே தோடும் இல்லை!
மெய்யிலே பதக்கம் இல்லை!
மெல்லிடைப்பட்டி இல்லை!
ஒய்யார முடியும் இல்லை!
ஒருநகை நட்டுமில்லை!
ஐய, நான் பெண்ணுமில்லை!
ஆணையா இரங்குவீரா?

4. மீண்டுமோர் பிறவி உண்டா?

மேன்மையா மனிதன் ஆதல்?

தீண்டொணாத் தமிழினத்தில்

திரும்பவும் தோன்றலாமா?

மாண்டு வேறுயி ரினத்தே

மற்றுமோர் கோளில் வந்தால்

ஆண்டவா ஆய்வு செய்தென்

ஆவலைப் பூர்த்தி செய்யேன்!

-----

## 18. மூவுலகம்!

1. பூலோக வாழ்க்கை யெல்லாம்
புளித்ததால் ஒருவன் பன்னாள்
ஆலோசித் தமரலோகம்
அதாவது சுவர்க்கம் என்னும்
மேலோகம் சென்று பார்த்தான்!
மினக்கெட்டான் சிறிது நாட்கள்!
சாலோகம் மூன்று மில்லாச்
சாயுச்சியந்தான் கண்டான்!

2. தீயரும் அந்தி யேட்டி
செய்ததால் நல்லராகித்
தோயு நல்லின்பங் கண்டான்!
தூயராய்ச் சகல பேரும்
ஆயுமோரின்ப மல்லால் -
ஆனந்த வெள்ளமல்லால்
தேயுமோர் துயரம் காணான்!
திரும்பினான் நரகலோகம்!

3. நல்லரும் கிரியை யேதும்
நாடிடாக்காரணத்தால்
பொல்லாத துயரி லாழ்ந்து
போவதைக் கண்டு கொண்டான்!
அல்லலே - துன்ப மேதான்!
அணுவளவின்பங் கூட
இல்லை யென் றேங்கி விட்டு
எமதுபூ லோகம் வந்தான்!

4. இரவையும் பகலையும் போல்
இன்பதுன்பங்களுள்ள,
நரகமும் மோட்சமும் எந்
நாளும் எம் வாழ்விலுள்ள,
அரவங்கள் இருந்த போதும்
அமைதியும் கூடவுள்ள,
வரவொடு போக்கு முள்ள
வடிவுல கிது வென்றானே!

-----

# 19. வாழ்கவே

1. வாழ்க எங்கள் திருமலை,
   வாழ்க இனிது வாழ்கவே!
தாழ்ந்திடாமல் எவரிடத்தும்
   வீழ்ந்திடாமல் வாழ்கவே! (வாழ்க)

2. மீனளக்கும் கடல்களுக்கு
   மேலளக்கும் தோணிகள்!
மானளக்கும் கானகத்து
   மரமளக்கும் மந்திகள்!
வானளக்கும் மலையின் உச்சி!
   மனையளக்கும் காக்கைகள்!
தேனளக்கும் மலர்கள் யாவும்
   தெரிந்தளக்கும் பூச்சிகள்! (வாழ்க)

3. நல்லியற்கைத் துறைமுகத்து
   நடுவுறங்கும் கப்பல்கள்!
பல்லினத்து மாந்தர் போகும்
   பள்ளி - கோயில் - ஆலயம்!
கல்விகற்கும் பிள்ளை ஆடக்
   காணும் கோட்டைப் புல்வெளி!
கல்லில் வெப்ப நீர் சுரக்கும்
   கன்னியாப் பெருந்தலம்! (வாழ்க)

௪. சுற்றி எங்கும் வயல் நிலங்கள்,
சோலை எங்கும் படிவகை!
முற்று நெய்யும் தயிரும் பாலும்
மோருமுள்ள ஊர்மனை!
கற்றறிந்து கதைகள் தீட்டிக்
கவிதை யாக்கும் புலவர்கள்!
பற்றி வாழும் தமிழினாலே
பக்திகாட்டும் மானிலம்! (வாழ்க)

-----

# 20. கட்டு

1. அழிந்து கொண்டிருக்கிறோம் நாம்!
அழிந்திடின் நீயும் இல்லை!
கழிந்து நாம் போனால் நீயும்
கழிபடும் நிலைமை நேரும்!
ஒழிந்திடும் முன் நாம் முற்றாய்
ஒழிப்பினைத் தடுக்க வேண்டும்!
வழிந்து கொண்டிருந்த நாமேன்
வரண்டிடுநிலைக் காளானோம்?

2. எல்லோரும் உன் மக்கள் தான்!
இருந்தாலும் நீ யார் பக்கம்?
நல்லார் தீ யார்கள் உண்டே?
நடுநிலை - உண்மையுண்டே?
கல்லாதார் - கற்றார் உண்டே?
காரணம் தெரியார் உண்டே?
நில்லாதார் - நிற்பார் உண்டே?
நிலமிசை நீ யார் பக்கம்?

3. ஒருவரின் உடைமை மற்றிங்
கொருவரால் பறிக்கப்பட்டால்
வருவது சிக்கல் தானே?
வரவைத்த முதல் ஆள் யாரோ?

இருவரின் பக்கத் திற்கும்
        இருந்திடக் கூடாதே நீ?
இருவரில் ஒருவரைப் பார்!
        இதற்கொரு முடி வைக்கட்டு!

4. விட்டுநீ இருந்தால், ஆவி
        விட்டு நாம் போவோம்! நீயும்
விட்டுமே வருவாய்! பின்னால்
        வேறொரு உலகந் தன்னைத்
தொட்டுநாம் கிடந்திட்டாலும்
        தொடருமேல் இதுபோல் அங்கும்
பட்டதே பட்டும் விட்டும்
        பாழாவோம், இறைவா பாழே!

-----

# 21. மருந்தகம்

1. உலகெலாம் சுற்ற வேண்டாம்!
ஒருமருந் தகமே போதும்!
பலப்பல மனிதர் உள்ளார்!
பலவகைப் பிணியும் உண்டாம்!
சிலபிணி மாறும் - போவார்!
சிலர்மறு உலகும் போவார்!
நலமுடன் திரும்பியோர் பின்
நாலுநாள் கழித்தும் போவார்!

2. கைமுறிந்தோரும், நீண்ட
காலுடைந்தோரும், மூத்த
மெய்களைத்தோரும், சற்றே
மெலிவு கண்டோரும், காயம்
தையலிட்டோரும், தூங்கிச்
சாகவந்தோரும், உண்டே
பைநிறைப்போரும் மற்றும்
பலப்பல பேரும் உள்ளார்!

3. உண்டிடச் சாப்பாடுண்டு!
உறங்கிடப்படுக்கை யுண்டு!
கண்டிடக் கன பேருண்டு!
கழித்திடக் கூடம் உண்டு!

கொண்ட நோய்க் கூசி உண்டு!
குடித்திடக் கொதிநீர் உண்டு!
தொண்டரும் பலபேர் உண்டு!
தூக்கமே குறைவாய் உண்டு!

4. கத்துவோர் கத்திக் கொள்வார்!
காயங்கள் துடைத்தால் வாயைப்
பொத்துவோர் பொத்திக் கொள்வார்!
போனபின் சிரித்தும் கொள்வார்!
தத்துவம் பலவும் கூறிச்
சமயத்து விளக்கம் சொல்லிப்
புத்தக ஞானத் தோடும்
பொழுதெலாம் போக்கு வாரே!

-----

## 22. இறை

1. தேடினோர் தேடினார்கள்,
    தேடிக் கொண்டிருக்கிறார்கள்!
ஓடினோர் ஓடினார்கள்,
    ஓடிக் கொண்டிருக்கிறார்கள்!
வாடினோர் வாடினார்கள்,
    வாடிக் கொண்டிருக்கிறார்கள்!
சாடினோர் சாடினார்கள்,
    சாடிக் கொண்டிருக்கிறார்கள்!

2. ஆடினோர் ஆடினார்கள்,
    ஆடிக் கொண்டிருக்கிறார்கள்!
பாடினோர் பாடினார்கள்,
    பாடிக் கொண்டிருக்கிறார்கள்!
நாடினோர் நாடினார்கள்,
    நாடிக் கொண்டிருக்கிறார்கள்!
கூடினோர் கூடினார்கள்,
    கூடிக் கொண்டிருக்கிறார்கள்!

3. கோயிலை அமைத்தும் பார்த்தார்!
    கும்பிட்டுக் கிடந்தும் பார்த்தார்!
வாயிலைத் திறந்தும் பார்த்தார்!
    வாழ்த்தினைச் சொரிந்தும் பார்த்தார்!
தாயினும் மேலாய்ப் பார்த்தார்!
    தந்தையை இணைத்தும் பார்த்தார்!
தீயினிற் பாய்ந்தும் பார்த்தார்!
    தெய்வத்தைக் கண்டாரில்லை!

4. நோயினைத் தாங்கிப் பார்த்தார்!
நோன்பினில் இருந்தும் பார்த்தார்!
பேயினைத் துரத்திப் பார்த்தார்!
பெரியநூல் அணிந்தும் பார்த்தார்!
காயினை அறுத்தும் பார்த்தார்!
கனகுறிப்பெழுதிப் பார்த்தார்!
நாயிலும் கழிவாய்ப் போன
நடைப்பிண இனமே கண்டார்!

------

# 23. வள்ளுவம்

1. ‘வள்ளுவ’த்தைப் பார்க்கவே
வந்ததெங்கள் கண்ணொளி!
வள்ளு வத்தைப் பேசவே
வாயும் நாக்கும் வந்துள!
வள்ளு வத்தைக் கேட்கவே
வந்த தெங்கள் காதுகள்!
வள்ளு வத்தைப் பற்றியே
வாழ்வ தொன்றே வாழ்க்கையாம்!

2. சொல்பவற்றை மட்டுமே
சொல்லியுள்ள வள்ளுவர்,
சொல்லத் தேவை யற்றதைச்
சொல்லிடாமல் விட்டுளார்!
நல்லதில்லை என்பவர்
நாலு சான்று காட்டினால்
வெல்லலாகும், இல்லை யேல்
வெற்றியில்லை - தோல்வியே!

3. பொருளெடுக்கும் முறையினால்
புரியவேண்டும் குறள்களை!
பொருளெடுத்து ஆரியம்
போற்றுதல் தகாது காண்!
இருளறுக்கும் ஒளி அதே,
எங்கள் திராவி டர்நெறி!
அருளும், அன்பும் ஈகையாம்!
அறிவும், பண்பும் ஞானமாம்!

4. கற்க மட்டும் அல்லவே -
காணவேண்டும் பயனெனில்,
நிற்க வேண்டும் வாழ்விலே!
நினைக்க வேண்டும் நாளுமே!
அற்புதங்கள் காட்டு நூல்
ஆயிரங்கள் கற்பினும்
சொற்களன்றி வேறிலை,
தூய வாழ்வு குறளதே!

-----

# 24. அடிமட்டம்

1. இடிபட்டு நெரிபட் டோடி
 ஏதேனும் கிடைத்தால் பெற்று
பொடிபட்ட கலத்தில் கூழைப்
 புசித்தேதும் வேர்வை சிந்தி
மிடிபட்ட நிலையில் இன்னும்
 மேல்மட்டம் பார்க்க வாழும்
அடிமட்ட மக்கள் தங்கள்
 அன்றாட வாழ்வைக் காணீர்!

2. காலையில் சிரட்டைத் தேநீர்!
 கடும்பகல் ஒருவாய்ச் சோறு!
மாலையில் 'வாட்டு ரொட்டி'!
 மறுநாளும் இவ்வாறாக,
வேலையோ வேலை என்றே
 வெளிநாடு சிலபேர் போக,
ஆலையின் கரும்பாய் மற்றோர்
 அடிமட்ட வாழ்வே வாழ்வார்!

3. கந்தையைக் கசக்கிக் கட்டிக்
 காசுக்குப் பல்லைக் காட்டி
மொந்தையின் கள்ளை உண்டு
 முழுநேர வேலை பார்த்து
சந்தையின் கழிவை நீக்கி
 சாலையின் தூய்மை காத்து
வெந்ததைத் தின்று ஓலை
 வீட்டினில் வாழ்வோர் காணீர்!

4. வானமே கூரை யாக
வரம்பிலே தலையை வைத்து
கானிலே விலங்கு போலும்
கண்துயின் றெழுந்து மாசி
வேனிலை அனுப வித்தே
விளைந்ததை வெட்டி வந்து
தீனதைக் கூழாய்க் கண்டு
சீவியம் செய்வோர் காணீர்!

-----

# 25. கோயில்

1. கற்பனை கடந்த கோயில்
கலையினை வளர்த்தகோயில்
கற்சிலை வடித்த கோயில்
கனி விசை ஒலித்தகோயில்
நற்படம் வரைந்த கோயில்
நாட்டியம் பயின்றகோயில்
அற்புதம் புரிந்த கோயில்
அழிவதைக் காண லாமா?

2. அழிவினைத் தடுத்தல் வேண்டும்!
ஆக்கிட முனைதல் வேண்டும்!
அழிப்பவர் அழிதல் வேண்டும்!
அற்புதம் காட்டல் வேண்டும்!
பழிப்பவர் படுத்தல் வேண்டும்!
பார்ப்பவர் திருந்தல் வேண்டும்!
கழிப்பவர் கழிதல் வேண்டும்!
கடமைகள் நிகழ்தல் வேண்டும்!

3. கோ வாழும் இல்லே கோயில்!
கோவின்கோல் கோடி இல்லைக்
காவாமல் விட்டாலும் நாம்
காப்பாற்றி ஆதல் வேண்டும்!
தேவாரம் என்னும் பாலைத்
தெவிட்டாத கனியை - தேனை
நாவாரச் சொரிதல் வேண்டும்!
நம்காது தோய்தல் வேண்டும்!

4. நெஞ்சகம் கோயில் என்ற,
 நினைவது சுகந்தம் என்ற,
மஞ்சனீர் அன்பே என்ற,
 வாபூசை கொள்ள என்ற,
வஞ்சமில் தாயின் உள்ளம்
 வரும்வரை கோயில் தன்னைத்
தஞ்சமென்றடைந்தே கோவின்
 தாள்தொழுதிடுவோம் யாமே!

-----

## 26. தாள்

1. ஆளைப் பார்ப்பார் இல்லையடா!
   அதிசயமான உலகமடா!
   தாளைத் தானே பார்க்கின்றார்!
   தருவோரைத்தான் சேர்க்கின்றார்!

2. ஆளேதாளை அச்சிட்டான்!
   அவனைக் கூட மதியாரோ?
   தாளே தெய்வம்! தாளின்றேல்
   சாமிக்கடனும் நடவாதோ?

3. 'தாளால்' சிலபேர் தாள் பெறுவார்! (1065)
   தாளில்லாமலும் பெறுவார்கள்!
   ஆளார் என்றே பாரார்கள்!
   ஆளின் பையைத்தான் பார்ப்பார்!

4. மணம் என்றாலும் தாள் வேண்டும்!
   மனைவீடெனினும் தாள் வேண்டும்!
   பிணம் என்றாலும் தாள் வேண்டும்!
   பிணி வந்தாலும் தாள் வேண்டும்!

5. உள்நாட்டுத்தாள் போதாமல்
   ஓடிப்போவார் வெளிநாடே!
   உள்ளும்புறமும் சேர்த்தாலும்
   உள்ளம் அமைதி ஆகாதே!

6. காணாத்தாளைச் சிலர் கண்டார்!
கரிச்சோறவர்க்கு நெய்ச்சோறாம்!
பேணார் - கேளார் - பேசார்கள்!
பெரிய நடப்பாய்த் திரிவார்கள்!

7. உறுப்பால் ஒத்தார் மனிதர் அலர்!
உயர்ந்த பண்பார் மனிதர்களாம்! (993)
அறுக்கும் அரமாய் இருந் தாலும்
அவர்கள் மரமென் றார்குறளார்! (997)

8. தாளைப் பெறுவாய் முறையாக!
தாளால் வாழ்வு பறந்தாலும்
ஆளைக் கணிப்பாய் பண்பாலே!
அதுவே போதும் போதுமடா!

-----

# 27. பாலை

1. பட்டிடப் பொழுது மூடிப்
படுப்பதும், மீண்டும் வானம்
தொட்டிடத்திறந்து பார்த்துத்
தொடர்வதும், இழுப்பு நெஞ்சைச்
சுட்டதும் துயர் ஆழிக்குள்
தோய்வதும், கவலை சற்றே
விட்டதும் வெளியில் ஓட
விழைவதும் பாலை வாழ்வே!

2. பாலையாய் நெஞ்சு மாறப்
பார்வையில் வெம்மை வீசச்
சோலைநீர் ஊற்றுப் போலத்
தோன்றிடச் சில எண்ணங்கள்
சாலையில் நிமிர்ந்திடாமல்
தலை குனிந்தில்லம் வந்து
நாலையும் நினைத்த வாறே
நடந்திடும் பாலை வாழ்வே!

3. உண்டதே உணவு! மீண்டும்
உடுத்ததே உடைகள்! முன்பு
கண்டதே காட்சி! அன்று
கதைத்ததே கதைகள்! நெஞ்சில்
கொண்டதே கொள்கை! வேறு
கொடை இரவெதுவும் இல்லை!
விண்டுரைத்தறிந்திடாத
வெஞ்சிறைப் பாலை வாழ்வே!

4. மாற்றமென்றேது மில்லை!
மனிதமாவிலங்கு வாழ்வின்
தோற்றமும், அழிவும் என்றும்
தொடர்ந்திட, வாழ்வு நல்கும்
காற்று, நீர், சூடு, மண், வான்
கண்டது போல் இருக்க,
நேற்றுளான் இன்று வேறாம்!
நீளுமோ பாலை வாழ்வே!

-----

# 28. உலகம்

1. ஒருவன் பொருளை ஒருவன் அள்ளி
ஒளித்து வாழ்கிறான்!
ஒருவன் சாக ஒருவன் வாழும்
உலகம் ஈதுதான்!

2. தேனைப் பூச்சி சேகரிக்கத்
திருடிச் செல்கிறான்!
வானைப் பார்க்கும் பயிரைக் காக்கும்
மழையைப் போன்றதார்?

3. கொக்கு மீனைக் கொத்தும்போதில்
குதுகலிக்கு மேல்
சிக்கும் மீனின் வாழ்க்கை தன்னைச்
சீரழிப்ப தார்?

4. பாம்பின் பார்வை தேரைவாழ்வைப்
பாதுகாக்குமோ?
தேம்பும்பிள்ளை தாய்இறப்பின்
தீர்வு காண்பதார்?

5. ஆடும் நாயும் பேச்சுமூலம்
அமைதி காணுமோ?
நாடும் சொந்த மண் இல்லாமல்
நாங்கள் வாழ்வமோ?

6. பாடுபட்டு வீடுகட்டிப்
பலன் எடுப்பமோ?
ஏடுகாத்தும் எழுதலாமோ
இலங்கை மண்ணிலே?

7. உழைத்து வாழும் எறும்பு! அட்டை
உறிஞ்சி வாழுமே!
பிழைத்திருப்பதுலகில் என்றும்
பெரிய வர்க்கமோ?

8. ஆண்டவன்தான் மௌனமாயின்
ஆளுவோனுமா?
மீண்டும் காளை மாட்டு வாழ்க்கை
மூக்கில் உள்ளதோ?

-----

# 29. ஏனம்மா?

1. ஏனம்மா அழுகின்றாய்? என்னை ஏன் பார்க்கின்றாய்?
நானம்மா உன்பிள்ளை, நடமாடும் வயதாச்சு!
'ஏன்நீ பிறந்தாயோ? இவ்வேளை' என்றெண்ணித்
தான்நீ அழுகின்றாய், சரிதானே என்தாயே?
காலம் கனிந்தேதான் கணக்காக வந்துள்ளேன்!
கோலம் விரைவாகக் கொள்ளத்தான் போகின்றேன்!
தாய் நாட்டுமண் இதனைத் தவறாது காப்பாற்றப்
போய்வருவேன் தாயேநீ புறம் பாடமாட்டாயா?
கூடப்பிறந்தானைக் கொழுநனொடு கைவிட்ட
மாடப்புறா வனையாள் மகனாம் ஒரே உயிரை
வேலோடு போவென்று விட்ட புறமெல்லாம்
நூலோடு தானாமோ? நொண்டியோ உன் பிள்ளை?
கொண்டுவா துப்பாக்கி, கொடுகையில், ஒருமுடிவு
கண்டே வருவேன்நான்! காணாவிடில் நீ போய்
'இறப்பர்' களின் மத்தியிலே எலும்பைப் புரட்டிப்பார்!
மறப்பாயா? 'தோட்டா' என் மார்பைப் பிளந்திருக்கும்!
அம்மாஉன் மார்பை அறுத்திடவே தேவையில்லை!
எம்மாத்திர மெல்லாம் இன்பம் பெறுவாய் நீ?
ஏனம்மா அழுகின்றாய்? என்னை ஏன் பார்க்கின்றாய்?
நானம்மா உன் பிள்ளை, நல்லவிடை தருவாயா?

-----

# 30. தூங்கு I

1. கூற்றுவா, கவலை என்ன?
கூறவா, மறுத்திடாதே!
தோற்றுமே போய்விட்டாய்! உன்
தொழில் உனக்கிப்போதில்லை!
ஆற்றுகின்றார் உன் வேலை
'ஆமி'மார்! அதனாலேநீ
வேற்று நாடெங்கேனும் போய்
வேலைவாய்ப் பெடுத்துக் கொள்ளு!

2. காலங்கள் - நேரமெல்லாம்
கணித்திட முடியாதுன்னால்!
சூலமேன்? தோட்டாக் குண்டு
துளைத்திடும் தேன்கூடாக!
கோலத்தைக் 'கண்ணி' கண்டால்
குத்திட விடுமா சொல்லு?
மூலமாம் உயிரை வைக்கோல்
மூளுமுன் காணுவாயா?

3. எருமையில் வந்து போக
எத்தனை நாட்களாகும்?
அருமையாம் 'கெலி'யில் வந்தால்
அகப்படும் சிலரின் ஆவி!
பெருமைநீ பெறுவதானால்
பெரும் 'மெசின்கண்' ணைத்தேடு!
உருவையும் உடையால் மாற்று!
உடலிடு தோட்டா மாலை!

4. புதுமுறைப் பயிற்சி கொள்ளு!
போர்முறை எல்லாம் தள்ளு!
எதுசரி, பிழையோ கண்டால்
எவரையும் பொசுக்கிப் போடு!
இதுசெய முடியா விட்டால்
எருமையும் நீயும் சென்று
பதுங்கிடு எமலோகத்தில்!
படுத்தழகாகத் தூங்கே!

-----

# 31. வெடி

1. ஓடினால் வெடிதான்! ஏதும்
உசும்பினால் வெடிதான்! யாரும்
ஆடினால் வெடிதான்! சும்மா
அரக்கினால் வெடிதான்! சற்றே
கூடினால் வெடிதான்! நெஞ்சம்
குமுறினால் வெடிதான்! போட்டுத்
தேடினால் வெடிதான்! முன்னால்
சிக்கினால் வெடியே தானே!

2. குந்தினால் வெடிதான்! கைகள்
கூப்பினால் வெடிதான்! சற்றே
பிந்தினால் வெடிதான்! ஏதும்
பேசினால் வெடிதான்! கொஞ்சம்
முந்தினால் வெடிதான்! மூக்கால்
முனகினால் வெடிதான்! ஆமாம்
அந்தகோ வெடிதான்! எம்மை
ஆண்டவா வெடியே தானே!

3. காலையும் வெடிதான்! கேட்டுக்
கண்திறந்தோடி மீண்டால்
மாலையும் வெடிதான்! அல்லும்
மற்றைய நாளுமஃதே!
சாலையிற் போனா லென்ன?
சஞ்சலம் ஆனாலென்ன?
வேலையில் இருந்தா லென்ன?
வெடியலால் வேறே இல்லை!

4. பிஞ்சிலும் வெடிதான்! மூத்த
பெரிசிலும் வெடிதான்! சின்னக்
குஞ்சிலும் வெடிதான்! பெட்டைக்
குமரிலும் வெடிதான்! ஆயுள்
அஞ்சிலும் வெடிதான்! ஐம்பத்
தைஞ்சிலும் வெடிதான்! ஐயோ
கொஞ்சமா வெடிகள்? ஓசை
குறையுநாள் எந்தநாளோ?

-----

# 32: உரிமை

1. சித்திரவதை செய்தாலும்
சிறையிலே பூட்டினாலும்
கத்திடப் பண்ணினாலும்
கண்ணீரை விடவைத்தாலும்
சொத்தியாய் ஆக்கி னாலும்
துயரத்தைக் குவித்திட்டாலும்
செத்திடச் செய்திட் டாலும்
தேவையிங் குரிமை தானே?

2. வீடெலாம் தேடினாலும்
வெளியெலாம் நிறுத்தினாலும்
காடெலாம் இருத்தினா லும்
கனவிலே காய்ச்சி னாலும்
கேடெலாம் செய்த போதும்
கேள்வியால் துளைத்த போதும்
பாடெலாம் படுத்தி னாலும்
பல்லவி உரிமை தானே?

3. கைகளைக் கட்டி னாலும்
கடுமுகாம் ஏற்றி னாலும்
பொய்த்தலை ஆட்டி னாலும்
புளுகையே கூட்டினாலும்
வைத்தெலாம் கிண்டி னாலும்
வாழ்வெலாம் போக்கி னாலும்
மெய்மையாய்த் தேவை யாகும்
மேன்மையாம் உரிமை தானே!

4. விடுதலைப் போராட் டத்தின்
விரிவான வரலா றெல்லாம்
அடிமுடி போகும் வண்ணம்
அறிந்திருந் தார்க ளானால்
படுகொலை செய்விப் பாரா?
பறித்திட முன்னிற்பாரா?
நடுநிலை தவறிடாமல்
நடந்திருப்பார்க ளன்றோ?

-----

# 33. மாற்று

1. வாய்திற! இந்தா சோறு!
வைத்திரு! மெதுவாய்ச்சப்பு!
போய் இரு! விழுங்கிக் கொள்ளு!
பொறுத்திடின் தண்ணீர் ஊற்று!
நாய்வரும், துரத்திப் போடு!
நாம் சனநாயகத்தைப்
பேய் பிடித்திட விடாமல்
பிரியமாய்க் காக்க வேண்டும்!

2. உன்மொழி, உன்நாடென்றும் -
உன்மதம், உன் ஆள் என்றும் -
உன்புகழ், உன் பேர் என்றும் -
உன் இடம், உன்வீடென்றும் -
உன் குடும்பத்தார் என்றும் -
உன்னையே எண்ணி எண்ணிச்
சின்னவன் ஆகி டாமல்
சிந்திநீ, பொதுவாய்ச் சிந்தி!

3. தனிமையாய்ப் பிரிந்து போதல்
சரிவரப் போவதில்லை!
இனி அதை மாற்றிக் கொள்ளு!
இணைந்துமே வாழ யோசி!
மனிதன் என்றுன்னை எண்ணி
மக்களோடொத்துப் போபோ!
குனியவும் தேவை யில்லை,
குறுகிய நோக்கும் வேண்டாம்!

4. சுதந்திரம் - உரிமை என்று
சொல்லியே செத்திடாமல்
பதங்களை விட்டுச் சேர்ந்து
பாரினில் வாழப் பார் பார்!
மதங்களைக் காட்டிடாமல்
மனதினைக் கட்டி யாண்டு
விதம் விதமாகச் சேர்த்தால்
வீட்டினில் வெளிநாடாமே!

-----

# 34. தமிழா

1. பஞ்சாங்கத் தமிழா, வீட்டில்
பாய்போட்டுப் படுக்கும் போதும்
பஞ்சாங்கம் பார்க்கின்றாயா?
பார் - தலையணையின் கீழ்வை!
துஞ்சிநீ எழும்பும் போதும்
தொட்டதை நேரம் பாராய்!
அஞ்சனில் இராகு காலம்!
ஆறுக்கே சுபநேரம் - பார்!

2. நேரங்கள் பிழையாம் என்றால்
நித்திரை மீண்டும் கொள்ளு!
ஆரெங்கே வரச் சொன்னாலும்
அசையாதே! - இராகுகாலம்!
வாரங்கள், திதிகள், யோகம்,
வருகரணங்கள், வெள்ளி
சேரப்பார்த் தேது மென்றால்
செவ்வாய் போய்ப் புதன் எழும்பே!

3. பழந்தமி ழகத்தில் இந்தப்
பஞ்சாங்கம் இல்லாமற்றான்
இளங்காளை - கன்னி எல்லாம்
இரவிலும் சந்தித்தார்கள்!
கிழத்தாயர் தேட விட்டே
கிளம்பினார் நாள் பாராமல்!
களமெல்லாம் நாள்கோள் பார்த்தால்
கடுஞ்சண்டை ஏன் செய்கின்றார்?

4. சாம்போதும் பஞ்சாங் கத்தில்
சரியென்றால் சாக வேண்டும்!
போம்போது பிழையாம் என்றால்
போகாமற் கிடக்க வேண்டும்!
தாம்போகும் வடவர் பாதை
தமையெல்லாம் ஆராயாமல்
நாம்போகும் தமிழர் ஆனால்
நமக்கிங்கேன் தனிப் பண்பாடு?

-----

# 35. சமயம் I

1. கோயிலில் மட்டுந் தானா,
குடும்பத்தில் சமயம் எங்கே?
வாயிலே மட்டுந்தானா,
வாழ்விலே சமயம் எங்கே?
நோயெனில் மட்டுந் தானா,
நொடி மணிநாளும் எங்கே?
பாயிலே கிடந்தால் தானா,
பாயுநாள் எல்லா மெங்கே?

2. 'நின்றாலும், இருந்திட்டாலும்,
நடந்தாலும், கிடந்திட்டாலும்
என்றுமே சிவனார் தாளின்
இணை நினை' என்னும்போதில்
ஒன்றெனில் ஒன்றென் றெண்ணி
உண்டெனில் உண்டென்றெண்ணி
நன்றாகச் சமய வாழ்வை
நாளாந்தம் வாழ்தல் வேண்டும்!

3. ஆண்டெல்லாம் மச்சம், ஆனால்
ஐப்பசி மச்சம் இல்லை!
வேண்டுமா இந்தக் கூத்து?
வெள்ளிதான் சமய வாழ்வா?
தீண்டலாம் வியாழின் மாலை -
திரும்பவும் சனிநாட் காலை!
ஈண்டெலாம் போலி வாழ்வே!
என்றும் ஒன்றாகி வாழ்வோம்!

4. சடங்கெலாம் வாழ்க்கை அல்ல!
சலசலப் பரவம் அல்ல!
படங்களும் பூவும் அல்ல!
பஞ்சாங்க நாட்கள் அல்ல!
இடம், பணம், ஆளுக்கேற்ப
எடுத்திடும் சோடிப் பல்ல!
அடங்கவே மூன்றும் ஒன்றாய்
அமைதியாய் வாழுவோமா?

-----

# 36. வைப்போம்!

1. பாரதிக்கு மடமுண்டு, படமுண்டு, சிலையுண்டு,
பலவும் உண்டு!
பாரதிக்கு விழவுண்டு, முழவுண்டு, நூலுண்டு,
பல வாழ்த்துண்டு!
பேரதற்கே உண்டல்லால் பிறகேதும் பயனில்லை,
பேசப் போனால்
ஆரதற்குச் செவிசாய்த்து அதுபோன்று வாழ்கின்றார்,
ஆரும் இல்லை!

2. ஆயிரங்கள் தெய்வமிலை, அறிவொன்றே தெய்வமென
அறைந்தான் அன்று!
ஆயிரத்துக்கப்பாலும் அதிகரிக்கு தல்லாமல்
அருகக் காணோம்!
தாயினிலும் தெய்வமுள தோவென்றான், அக்கேள்வி
தகுந்த கேள்வி!
தாயினையே தெய்வமெனக் கொள்வோர்கள் தாரணியில்
எவரும் உண்டோ?

3. இல்லை இல்லை சாதிகளே, எல்லோரும் ஓர்குலமே,
என்றான் அன்று!
நல்லதுதான் என்கின்றோம், நாட்டினிலோ நாம்வேறு
நளவர்வேறே!
தொல்லை இது கண்டன்றோ பலதோழர்நமை விட்டே
தொலைந்து விட்டார்!
எல்லை இதற்கிலை என்றால் எம்முடிவு என்னாமோ,
எவர்கண்டார்கள்?

4. ஆண்டாண்டு மேடையிற்றான் பாரதியார் வருகின்றார்,
அதுவும் இன்றேல்
மாண்டுவிட்ட பாரதியார் மறைந்தேதான் போயிருப்பார்,
மனதைவிட்டே!
நீண்டபல பாரதிரும் பாதந்த பாரதியை
எமது நெஞ்சக்
கூண்டினிலே எந்நாளும் சிறைவைப்போம் அவரோடு
கூடிவாழ்வோம்!

- - - - -

# 37. கனவு

1\. தூங்கி எழுந்திருந்தேன், தூங்கும் நடுநிசியில்!
ஏங்கி இருந்தாள், எனதருகே என்துணைவி!
என்னவென்றேன், கனவென்றாள்! என்னகனவென்றேன்?
சொன்னாள் கனவைத் தொடர்கதைபோல் கேட்டேன்நான்!
ஏவுகணைதனிலே ஏறி அமர்ந்தாளாம்!
தாவியதாம் அம்புலியைத் தடையின்றிப் பாய்ந்ததுவாம்!
அங்கிறங்கிப் பார்த்தாளாம், அத்தனையும்கல்தானாம்!
பொங்குகடல் நீரோ - பூங்காற்றோ அங்கிலையாம்!
பாழும் பெருவெளியாம், பலதிட்டாம், மாமலையாம்!
வாழும் உயிரினத்தின் வாடையே அங்கிலையாம்!
பொல்லா உயிரினமும், புனலும்,மரம், காற்றும்
எல்லாமே அங்கிருந்து எந்தமிழர் சென்றிருந்தால்...?
ஆண்டவனின்பேராலே ஆலயத்தை உண்டாக்கித்
தீண்டாமைபேசிச் சிதைத்திருப்பார் அம்புலியை!
'அப்பலோ'தன்னில் அமெரிக்கர் சென்றதனால்
தப்பியது அம்புலிதான், என்றாள் - தலை சாய்த்தாள்!
என்ன இருந்தாலும் உயர்வுள்ளம் இங்குனக்கே!
என்னைத் தனியாக இங்குவிட்டா போனாய் நீ?
உன்போல் உளங்கொண்ட உலகத்துப் பெண்ணினமும்
பொன்கனவு காணட்டும், போய்வரட்டும் அம்புலிக்கே!

-----

# 38. கேள்வி

1. தம்பியிடம் சில கேள்வி - கேட்பேன்
தக்க விடைதர வேண்டும்!
நம்பி யிருக்கிறேன் தம்பி - நீ
நல்ல விடை தருவாயோ?

2. அன்பின் வடிவமோ தெய்வம்? - எனில்
ஆட்பலி கேட்பதும் ஏனோ?
அன்பொடு யாவரும் வாழ்ந்தால் - புவி
ஆனந்த மாமடா தம்பி!

3. தாயினைக் கோயில் என்றாரே! - முன்னோர்
தந்தைசொல் மந்திரம் என்றார்!
தாயிருக்கக் கோயில் தேடி - தெய்வம்
தன்னைக் தொழப் போவதேனோ?

4. கொக்கென்ன செய்திடும் தம்பி - மீனைக்
கொத்தி விழுங்கிடும்போது?
கொக்கின் மகிழ்ச்சியைத்தானோ - மீனும்
கொண்டிடும் சொல்லடா தம்பி?

5. பாம்புக்குத் தேரையோ தம்பி? -வீட்டுப்
பல்லிக்குப் பூச்சி சாப்பாடோ?
நாம்வளர்க்கும் கோழி யெல்லாம் - தின்னும்
நல்ல புழுக்களோ தம்பி?

6. இப்படிப் பாவங்கள் செய்ய - உயிர்
ஏன்கடவுள் படைத்திட்டார்?
அப்படி மனிதனும் செய்தால் - பின்பு
அதிலென்ன அதிசயம் தம்பி?

7. படைத்தார் உலகைக் கடவுள் - என்றால்
படையாத காலமுண்டன்றோ?
படையாத காலத்தில் அன்னார் - வெறும்
பணிசெய்யாச்சோம்பேறி தானோ?

8. இன்னும் சிலவுண்டு கேள்வி - தம்பி
ஏற்ற விடைதருவாயேல்,
பின்னோர்முறை அவை கேட்பேன் - இவை
பேய்வினா அல்லடா தம்பி?

-----

## 39. காந்தி

1\. காந்தியின் படத்தை மாடிக்
கட்டிடச் சுவரில் மாட்டி
ஏந்தி வந்ததற்கோர் மாலை
இட்டுமே நாளும் சாந்தி -
சாந்தி என் றோல மிட்டே
தம் மனப் போக்கில் வாழும்
மாந்தரைக் காந்திக் கொள்கை
மதிப்பவர் என்னலாமோ?

2\. மேடையில் முழக்கம் செய்வார்!
மிகுபணம் சம்பாதிப்பார்!
ஆடையில் எளிமை காட்டார்!
அணிமணி எல்லாம் பூண்பார்!
சோடையா போவேன்? என்றும்
சொல்லுவார்! தோழர் வந்தால்
சாடையாய் 'வடி'யும் கொள்வார்!
தாம் சிறுகாந்தி என்பார்!

3\. உள்ளத்தாற் பொய்யாவாறு
ஒழுகியே உலகத்தாரின்
உள்ளத்தில் உறைந்தார் என்பார்!
ஒழுகுவார் பெரும் பொய்யோடு!
தள்ளுங்கள் சாதி பேதம்
சகலரும் சமமே என்பார்!
மெள்ளத்தன் பெண்ணுக்காங்கே
மேல்சாதிப் பையன் பார்ப்பார்!

4. உண்ணிடா நோன்பால், பொய்யா
உள்ளத்தால், உண்மை வாக்கால்
எண்ணொணா மக்கள் தங்கள்
இதயத்தில் உறைந்த காந்தி
அண்ணலை - அறப்போர் கண்ட
அன்பெனும் வடிவை எண்ணிக்
கண்ணியக்கடமை செய்தே
காந்தியாய் மாறி வாழ்வோம்!

-----

# 40. போதும்

1. கற்றதும் போதும், நூலைக்
காத்ததும் போதும், பூண்டோ(டு)
அற்றதும் போதும், சுற்றி
அலைந்ததும் போதும், இன்னல்
உற்றதும் போதும், இன்னும்
உறுவதும் போதும், அன்றே
பற்றறுத்திருந்தால் இந்தப்
பாடுகள் இருந்திராதே!

2. வந்ததும் போதும், கெட்ட
வாலில்லா விலங்கினத்தால்
நொந்ததும் போதும், தெய்வம்
நோற்றதும் போதும், காட்சி
விந்தையும் போதும், காட்டும்
வீரமும் போதும், பற்றின்
சிந்தையாலன்றோ? இன்றேல்
தீங்குமேல் ஓங்கு மாமோ?

3. கொண்டதும் போதும், பொல்லாக்
கொடியரால் விளைந்ததெல்லாம்
கண்டதும் போதும், விட்டே
கலைந்ததும் போதும், காய்ச்சி
உண்டதும் போதும், வாங்கி
உடுத்ததும் போதும், எல்லாம்
அண்டுமோ பற்றையெல்லாம்
அன்றறுத்தெறிந்திருந்தால்?

4. எடுத்ததும் போதும், வைத்தே
இருந்ததும் போதும், அள்ளிக்
கொடுத்ததும் போதும், கட்டைக்
குலைத்ததும் போதும், ஆளத்
தொடுத்ததும் போதும், ஆவி
தொலைத்ததும் போதும், இங்கே
அடுத்தெது நடக்கும் என்றே
ஆர் அறிவார் அச்சோவே?

-----

# 41. பக்குவம்

1. நிலம்முதல் உழுதல் வேண்டும்!
நீர் - எரு பின்னர் வேண்டும்!
வலம், இடம், மேல், கீழ் என்று
வந்து மண்போக வேண்டும்!
பலமுறை உழுதே நன்கு
பண்படுத்தாது விட்டால்
நலந்தரா விதைகள்! குற்றம்
நம்மீதே - நிலம்மீதல்ல!

2. பண்படுத்தாமல் ஆங்கே
பதர்விதை தூவி விட்டால்
மண்நிலம் என்ன செய்யும்?
மாபெரும் வேலி போட்டுக்
கண் எனக் காத்தா லென்ன?
களையெலாம் தீர்த்தாலென்ன?
தண்ணீர் பாய்ந்தோடி யென்ன?
தருபயன் குறைவேதானே!

3. விதையிலும் மாற்றம் வேண்டும்!
வெவ்வேறு மாறிமாறி
விதைத்துமே பார்க்க வேண்டும்!
விதைமிகப் பழைய தானால்
அதை விடுத்தேதும் வேறு
அம்மண்ணிற் கேற்றதான
புதியதை நாடல் வேண்டும்!
போக்கிலும் மாற்றம் வேண்டும்!

4. பக்குவப்பட்ட மண்ணே
பயிரினுக்கேற்ற தாகும்!
தக்கநல் விதைகள் இட்டால்
தருபயன் தந்தே தீரும்!
மிக்கநல் முயற்சி செய்தால்
மேல்நிலைவரவே செய்யும்!
சிக்கல்கள் குறையும் வாழ்வில்
செல்வமும் சிறக்குந்தானே!

-----

# 42. மாறு

1, கவிதைப் பெண்ணாளே என்னைக்
காதலிக்கின்றாய் நன்று!
புவியில் நின் காதலால் நான்
புலவன்பேர் பெற்றேன் நன்று!
குவிக்கலாம் தமிழை அள்ளிக்
கொட்டலாம் உந்தன் கூட்டால்!
தவிக்கத்தான் வேண்டும் எங்கள்
தகைமைக் கிங்கிடந்தான் இல்லை!

2. எவர்தருவார்கள் எங்கட்(கு)
இடம்? அதுதானே இல்லை!
அவர் தருவாரா? இல்லை!
அவர்தரா விட்டால் இங்கே
இவர்தருவாரா? இல்லை!
ஏனென்றும் தெரியவில்லை!
எவருமே தாரா விட்டால்
எம்வாழ்க்கை என்ன வாகும்?

3, மனங்கவர்கின்றாய்! என்னை
மதிக்கின்றாய்! ஆனால் மற்றோர்
மனமீர்க்க வில்லைப் போலும்?
மரபன்றோ தழுவுகின்றாய்!
எனதன்புக் கவிதைப் பெண்ணே
இனிநீயும் புதிதாய் மாறு!
மனம்வைத்தால் இடமா இல்லை?
மதிப்பில்லை உன் போன்றார்க்கே!

4. பொருளோடு நீ வந்தாலும்
'பொருள்' வேண்டும் இன்றேல் உன்மேல்
அருள் காட்டமாட்டார் போலும்?
அதற்கென்ன செய்வாய் சொல்லு?
உருள்கின்ற புவியில் மற்றோர்
உணராமல் விட்டாலும் நான்
தருகின்றேன் இடம்நீ வா வா!
**தாள், கோல் உண்டவை போதும் வா!**

-----

# 43. சோழநாடு

1. சோழவளநாடு தம்பி சோறுடையநாடு!
   தூயதமிழ் இசை பொழியும் தொல்லியற்கை நாடு!
ஆழஉழும் வயல்களெல்லாம் அள்ளித்தரும் பொன்னே!
   ஆடவரின் ஆண்மை விழும் அரிவையரின் முன்னே!

2. காவணங்கும் காவிரியாள் கரைபுரண்டும் பாய்வாள்!
   கன்னியரும் காளையரும் காவிரியில் தோய்வார்!
பூவிரியும் சோலையெல்லாம் பொன்சொரியும் காலை!
   பூமகளைச் செங்கதிரோன் புணரவரும் வேளை!

3. காவிரிப் பூம்பட்டினத்தே காண்பதெல்லாம் குன்றே!
   கப்பல்வரும் வணிகரெல்லாம் கைகுவிப்பார் நன்றே!
நாவிரிப்பார் பொருளெடுப்பார் நல்ல புகார்கண்டே!
   நல்லகடல் நாவாய்கள் நாள்முழுதும் உண்டே!

4. மாவளத்தான் கரிகாலன், மன்னன் நலங்கிள்ளி,
   மற்றும் பல சோழரெலாம் வழங்கினர் பொன்அள்ளி!
நாவளத்தார் பிசிர் ஆந்தை, நல்லகிழார், சாத்தர்
   நல்லபெரும் பாடல்களை நந்தமிழில் கோத்தார்!

5. பாக்கமெல்லாம் அங்காடி - பல தெருக்கள் எங்கும்!
   பாடல்களே, ஆடல்களே பார்க்குமிடம் எங்கும்
நோக்கமெல்லாம் நல்ல தொழில் நுட்பமுயர் வாழ்வே!
   நொடிப்பொழுதும் வீண்போகா நூற்றாண்டின் வாழ்வே!

6. கோயில்களும், பள்ளிகளும், குடியிருப்பும் நாட்டின்
   குறைவுபடாக்கலை வளமாம் கூத்துகளும், பாட்டும்!
வாயில்களும், வெளியார்கள் வரவுகளும், போக்கும்
   வண்மைகளும், திண்மைகளும் வாய்த்த பெரும்நாடே!

- - - - -

# 44. ஆறு

1. மானிடனே, மானிடனே மாண்புடையோன் நீதானா?
நானறிந்த வரையினிலே நல்லவனாய்க்காணோமே?
ஏனழிந்து போகின்றாய்? இடையினிலேன் சாகின்றாய்?
தானழிவதோடு, பிறர் தம்மையுமேன் அழிக்கின்றாய்?
ஐயறிவு வாழ்கிறதே! ஆறறிவேன் மாள்கிறது?
மெய்யறிவா? இல்லையெனில் மேதினியைப் பாழாக்கும்
பொய்யறிவா? இல்லையெனில் போலி அறியாமை இதா?
வையகத்தார் வாழ்வாங்கேன் வாழவிலை - ஏன்இல்லை?
மொழிகண்டும், நெறிகண்டும், மொழிஆளும் நூல்கண்டும்,
விழியானகலைகண்டும், விண்ஆயும் கோள் கண்டும்,
சிந்தனைக்கேன் இந்த நிலை? தேய்கிறதா - வளர்கிறதா?
இந்தநிலை மாறிடுமா? இவ்வுலகம் வாழ்ந்திடுமா?
அறிவைக்குறைப்பாயென்(று) அவனிடத்தில் கேட்போமா?
'வெறியைத்தணி' என்றே வேண்டுவமா மேலிடத்தில்?
இல்லையெனில் கிடந்திடுவோம், இப்படியே! ஏனென்றால்
தொல்லைகளும் தரலாம் சுகம்?

-----

# 45. உண்டு - இல்லை

1. நூற்றாண்டுக் காலத்துக்குள்
 நூலெலலாம் படிக்கொணாதேல்
நூற்று முப்பத்து மூன்று
 நூல்களை மட்டும் பாரீர்!
சாற்றுவார் முப்பால் என்றே!
 தமிழிற் சிந்தனைகள் வற்றா
ஊற்றுக்கண் வேறொன்றில்லை!
 உணரலாம் அறியுந்தோறும்!

2. உங்களின் வாழ்க்கை தன்னில்
 உள்ள சிக்கல்களை ஏதோ
அங்கதைத் தேடிப் பார்த்தால்
 அதற்கு நற்றீர்வும் உண்டு!
தங்களின் வாழ்வை அந்தத்
 தமிழ்க்குறட்படியே வாழின்
எங்குமே சிக்கல் என்றே
 எதுவுமே தோன்றிடாதே!

3. செந்தமிழ்ப் பொருள் காணாமல்
 திருக்குறள் படிப்போருண்டு!
சிந்தையிற் பதிப்பாருண்டு!
 திறம்பட நடப்பாரில்லை!

முந்தவை தன்னில் நின்று
மொழிந்திடப் பலபேர் உண்டு!
அந்தளவிற்கு வாழ்வில்
அவைகடைப்பிடிப்பார் இல்லை!

4. தெள்ளிய வாழ்விற் கண்ட
சிறந்தவாழ் வியல்நூல் இஃதை
வள்ளுவர் உள்ளங் கொண்டு
வயதுகட்கேற்ற வாறு
அள்ளி ஆய்ந் தாய்ந்து கற்று
அதன்படி வாழ்ந்து பார்த்தால்
கொள்ளை இன்பங்கள் காண்பார்!
குறள்களும் வாழுமாமே!

-----

# 46. வீடு

1. கம்பென்றார் இடுகென்றார்! கட்டிக்கிடந்தோர்க்கே
நம்பும் இரண்டென்றார்! நான்கு பிறகென்றார்!
தும்பும் கிடக்காமல் துடைப்பீர் வளவென்றார்!
கும்பிடுவீர் சாமியையும் கோயிலிலே என்றாரே!

2. தும்பிக்கை யானைக்குச் சோழன் பொரி எனினும்
நம்பிச் சிலர் பறந்தார்! நடந்தார்சிலர் சுணங்கி!
கொம்புக் குரங் கெனவே குதித்தே சிலர் அழித்தார்!
வெம்பிப் பலர் சிலரின் விலங்குச் செயல் பார்த்தார்!

3. தேரைக்காலாய்ப் பலநாள் சென்றெடுத்த தேட்டத்தில்
ஊரை இடங்காட்டும் உயர்சாமிக் கொருபங்கு!
நீரிறைத்துக் கம்பேற்றி நிலமிழுத்தோர்க்கும் பங்கு!
வீரமுடன் கைப்பையுள் விட்டதிரு'குத்தி'களே!

4. புனர்ஜென்மம் போலான புனர்வாழ்வே, இனிமேலும்
புனர்வாழ்க்கை வரலாமோ? பொறுத்திருந்தே பார்ப்பாரார்?
மனமார வீடமைத்து மாடியிலே வீற்றிருக்கும்
கனவேதும் காணுமுதல் காண்போமோ மேல்வீடு?

-----

# 47. பார்!

1. பாரடா சாதியைப் பார்! பைந்தமிழ்ச் சாதியைப் பார்!
ஊரடா - அதுவுமில்லை! உலகிலோர் நாடுமில்லை!
போரடா அன்றும் இன்றும்! போகுதாம் உலகமெல்லாம்!
ஆரடா அறிவு சொல்வார்? அதையெலாம் கேட்பவர்யார்?

2. மலை தோன்று காலமாமே? மண்தோன்றுமுன்னராமே?
கலையோடு வந்த நாடாம்? கடல் கொண்ட குமரியாமே?
தலையாக நின்று வாழ்வைத் தரணிக்கே தந்தவன்தான்
விலையாகிவிட்டான் இன்று வெறுஞ்சோற்றுப் பாண்டமானான்!

3. கட்டுவான்ஒருவன், வீட்டின் கல்லெலாம் விற்பான் மற்றோன்!
வெட்டுவான் கிணற்றை, மற்றோன் வீழ்த்துவான் குப்பைகூளம்!
வெட்டுவான் மரத்தை, முன்னோன் விட்டுநீர்வளர்த்த தெல்லாம்!
குட்டுவான் ஒருவன், மற்றோன் குனிந்து கொண்டழுதிருப்பான்!

4. நாயென நக்கிக் கொள்வான்! நரியெனப் புத்தி சொல்வான்!
பேயெனஆடி நிற்பான்! பிணத்திற்கும் சடங்கு செய்வான்!
போயெலாம் அள்ளிச் சேர்ப்பான்! பொதுவினுக்கதிகம் ஈயான்!
வாயெலாம் புளுகும் பொய்யும்! வாழ்வெலாம் தலைகீழாமே!

-----

# 48. எட்டா!

1. எட்டாதாள், எட்டாகோல், எதையும் எழுதாதே!
அட்டாவாழ் நிலமேபாழ் அகரம்தனை எழுதாய்!
விட்டாபுகழ் வெறுவார்த்தைகள் வீணாகிடும் நேரம்!
தொட்டா உயிர் நிலையாய் முதல் தொடவேண்டிய தெல்லாம்!

2. துணிவாய் எதிர் பகைவன்தனை சொல்லால் அடியாய்நீ!
பணியாதிரு, கழுவாதிரு, பாதம் வருடாதே!
அணிசேர்படை அதுசேர்வழி அதன்மேல் ஏதுமுண்டோ?
மணியாய் எழுத்தெழுதாய் உடல் மடியும் கவிமடியா!

3. சரியாய் சரிநிகராய் எழுத் தெழுதாய்! முடியாதேல்
விரியாதிரு தாளை, வெளி வீசாய் வரைகோலை!
நரியாய், வளை எலியாய், நெளி நஞ்சாய் இருக்காதே!
பெரிதாய்நினை, முயல்அம்பினும் பிடியாய்கரிவேலை! (772)

4. மனிதன்எனில் மனிதன்என வாழ்வாய் புவிமீதில்!
புனிதன் எனக்கூறிப்படு சேற்றில் புரளாதே!
தனியாய் எவர் வென்றார் தமிழ் இனமாய் ஒருவழிபோ!
குனியாதிருந் தெதிர்நாள்உயர் குறிக்கோள் அடைவாயே!

- - - - -

# 49. உண்டோ?

1. கோழிகள் கூவும், குளிரடிக்கும் நரி
கூடிக்கரைச்சையில் ஊளையிடும்!
பாழிரா - கும்மிருள் வெண்ணிலா மேற்கினில்
பட்டிடும்வெள்ளி வெளிப்பிருக்கும்!

2. ஆடவரைத் தோளில் தட்டிவிட்டே பெண்டிர்
அட்டில் புகுந்து சமைத்திடுவார்!
கூடத்துயிலும் குழந்தைகளை விட்டே
கொட்டாவியோடும் எழுந்திடுவார்!

3. வேம்பினால் பல்லை விளக்கிய வண்ணமே
வெளிக்குச் சென்றே முகம்கழுவி
போம் அயலாரையும் கூவி அழைத்துமே
புறப்படுவார்கட்டுச் சோற்றுடனே!

4. ஓடை கரைச்சை, வயல் வரப்புள்ளவை
ஒன்றும் விடாமல் நடை, போட்டே
கோடைக்களப்பினில் வண்டில்நிறைந்திடும்
கொய்யாம்புளித்துறையும் தாண்டி,

5. காலைக்கதிர் வரவேற்றிட நல்வயல்
கண்டல்காட்டுத்திடல்மால் அடைந்து
வேலைதொடங்க முனைந்திடுவார், வயல்
வெட்டத்தொடங்குவார் வெய்யில் விழும்!

6. கட்டுச்சுமந்துமே சூடுவைப்பார், களம்
கம்பிவேலி போட்டே காத்திடுவார்!
கொட்டிச் சரித்திட மாடு மிதித்தநெல்
கும்பத்தைத் தூற்றுவார் காலையிலே!

7. வண்டியின் நெல்லினை மாடிழுக்கும், விற்று
வந்திடும் காசை நகை இழுக்கும்!
கொண்டு வந்தே மீண்டும் வண்டில் அவிழ்த்திடக்
குஞ்சும் குழந்தையும் தூங்கிடுமே!

8. எண்ணிலாத் தொல்லை இருப்பினும் எங்களின்
ஈச்சந்தீவாருக் கிது பழக்கம்!
தெண்ணீர் அடுபுற்கை ஆயினும் தாள் தந்த(து)
உண்ணலின் ஊங்கும் இனியதுண்டோ? (1065)

-----

# 50. உணர்வோம்

1. முல்லைவளம், குறிஞ்சிவளம், முழுநெய்தல் மருதவளம்
முறையாய்க் கொண்டு
இல்லாத வளமேதும் இல்லையென்றுரை செய்தற்
கேற்றவாறு
நல்லதிருக்கோணமாமலை தன்னை நாளாந்தம்
நாடுவோர்க்கு
அல்லலறுத்தருள் செய்யும் நோக்குடனே கோணேசர்
அமர்ந்துள்ளாரே!

2. முப்பாலும் கடல்முழங்க - முடிமீதில் காற்றிரைய
முறையாய்ப் பூசை
தப்பாது மணிஒலிக்க - தாளதனைக் கடலலைகள்
தடவிச்செல்ல-
அப்பாலே கலம்போக - அகன்றபெரும் பேராழி
அமைதிகாக்க -
எப்போதும் அருள்தரவே கோணேசர் குன்றின்மேல்
இருக்கின்றாரே!

3. திருஞானசம்பந்தர் கோணேசர்மீதில் செந்
தமிழைக் கொண்டு
அருளார்ந்த தேவாரம் அங்கிருந்தேபாடி
அடி தொட்டாரே!
அருணகிரிப் பெருமானும் அவ்வாறே புகழ்பாடி
அன்பைப் பெற்றார்!
வருநாளில் நாமும்நல் வாழ்வுதனைப் பெறவின்றே
வணங்குவோமே!

4. கேடுசெயமுனைவோர்கள் கெட்டழிந்து போவார்கள்,
கேட்டவாறே
ஏடுகளிற்காண்கின்றோம், இறைவனது செயலெல்லாம்
இறுதிக்கூறே!
ஆடுகிறகோணேசர் ஊழிக்கூத் தொருகாலம்
ஆடவந்தால்...?
ஊடுருவல் காரரெலாம் ஒழிந்திடுவர், எனும் உண்மை
உணர்வோம் யாமே!

-----

# 51. கச்சான்

1. நாலுமுழம் நீக்கிடுவாய், நங்கைஉடை தூக்கிடுவாய், நடந்து
சென்றால்
மேலெல்லாம் தடவிடுவாய், மிதிவண்டிதள்ளிடுவாய், மிகமூத்தோரை
கோலெடுக்க வைத்திடுவாய், குப்பைகளைக்கிளறிடுவாய்,
குனியப்போனால்
காலுக்கு மேலிடமோர் கையிருக்கச் செய்திடுவாய், கச்சான் காற்றே!

2. குடத்தின்மேல் ஊற்றிடுநீர் கொட்டிடவே செய்திடுவாய்,
குளிக்கப்போனால்
அடகெடுவாய் மேலாடை அணியத்தான் விடுவாயா? ஐயோ வெட்கம்!
விடுவார்கள் பலபட்டம் விண்ணோடும் உனைநம்பி வீழ்த்தாய் -
ஆனால்
கடுங்கைநூல் அறுந்தாலோ கடல்மீதும்கிடத்திடுவாய்
கச்சான்காற்றே!

3. கண்ணெல்லாம் புழுதிமயம்! காதெல்லாம் தூசுமயம்! கை மாச்சீனி
உண்ணத்தான் விடுவாயா, ஒருவீட்டுக்கிடுகேனும் ஒழுங்காய்
உண்டா?
பின் இழுத்த தலைமயிரை முன் அலைப்பாய் வாழையிலைப்
பீத்தல் போலே!
கண்உறங்கும்நிலை ஏது? கதவடைக்கும் நிலை ஏது? கச்சான்
காற்றே!

4. பேய் என்றும் சொல்கின்றார், உண்மையிலே நீஎன்ன
பேயா சொல்லு?
நாய்பூனை கோழிக்கும் நடுச்சாமம்உன்னாலே நல்லதூக்கம்!
பாய்துணிகள் போட்டாலோ வீட்டுக்குமேலாலே பறந்தும் போகும்!
காய்பிஞ்சுகண்டமரம் கனிகாணுமுன்காம்பாம், கச்சான் காற்றே!

5. மலைநாட்டு முகடெல்லாம் காணாமல் முகிலாலே மறைத்து
வைப்பாய்!
அலைகொண்டு படகெல்லாம் ஆட்டியேபாய்வேகம் அதிகரிப்பாய்!
இலைகூட்டும் மாதர்களின் இடுப்பெல்லாம் வலிகூட்டி
இருக்கச்செய்வாய்!
கலைமேகம் மப்பாக்கிக் கடுவெப்பம் காப்பாயே கச்சான் காற்றே!

6. திருமலையின் துறைமுகத்துத் தெருவாலே போம்பொழுதும்
செய்வாய்சேட்டை!
பெரும் அலையால் மோதுவதும், பேரரவம்போடுவதும் பெரியோன்
என்றா?
இரு - வாடை வருமட்டும், இல்லாமற் போகாட்டால் ஏனென்றே
கேள்?
கருநீதான் - தாளைவிடு - கவிதையினைப் போடச்செய், கச்சான்
காற்றே!

-----

# 52. முதுமை

1. முத்துப்பல் முதலோடும்! மோகனப் புன்னகை விலகும்!
மொழியும் பேச்சின்
சத்தங்கள் குறைவு படும்! சரியான தெளிவும் இரா!
தளரும் நாக்கு!
சித்தத்தின் உறுதி விழும்! சிந்தனைகள் சீரழியும்!
செயல்கள் நிற்கும்!
மொத்தத்தில் சொல்லுங்கால் முழுவாழ்க்கை காலாகும்!
முதுமை தானே?

2. கண்பார்வை மங்கிவரும்! காதுகளும் செவிடாகும்!
கை - கோல் தேடும்!
மண்மீதும்கால் இடறும்! மறுவாழ்வுச் சிந்தனைகள்
மலிந்தே நிற்கும்!
புண்போன்று தெரியும் உடல் - புனிதம் எனத்தெரியாது!
போகும் நாளின்
எண்ணம்தான் மேலோங்கும்! ஏனென்றால் வயதேறும்
ஏற்றம்தானே?

3. இனிப்பெல்லாம் கசப்பாகும்! ஏக்கம்தான் கூடுதலாய்
இருக்கப் பார்க்கும்!
பனிகூட மழையாகும்! பகல்கூட இரவாகும்!
படுக்கை நோகும்!
தனியான இடந்தனையே தான்தேடும், கூட்டெல்லாம்
சரியாகாது!
கனியாகிக் காற்றாடும் காம்புவிடு காலத்துக்
கடைசிக் கூறே!

4. எப்போதும் சளி இருக்கும்! இருமுவதும் குறையாது!
எல்லாநோயும்
தப்பாமல் ஓடி வரும்! தலை தொட்டுக் கால்வரையும்
தாக்கா நிற்கும்!
முப்போதும் அருகிருந்து முழுநலமும் பேணிவர
முயலார் யாரும்!
இப்பாழும் முதுமைக்கே ஏதேனும் மாற்றுண்டோ,
இறப்பேயல்லால்?

-----

# 53. மனிதா

1. மனிதன் என்கிறாயே - மனிதா மனிதன் ஆகினாயா?
புனிதன் என்கிறாயே - அழுக்கு போனதென்கிறாயா?

2. நல்ல எண்ணமாமா - பேச்சும் நல்ல சொற்கள் தாமா?
நல்ல செய்கையாமா - உலகம் நன்கு வாழுதாமா?

3. போர்கள் ஆரினாலே - மனிதா, பூசல் ஆரினாலே?
வேர்கள் உள்ளதெங்கே - மனிதா, வெட்டு வீழ்வதெங்கே?

4. ஆறு என்கிறாயே - அறிவு ஆட்சி செய்யுதாமா?
வேறும் ஏதும் உண்டா - மனிதா, வென்று நிற்குதாமா?

5. தேனீ செய்யும் கூடு - செய்யும் திறமை உள்ளதாமா?
வானிலே பருந்தாய் - சென்றே வட்டம் போடுவாயா?

6. சிலந்தி பின்னுமாப்போல் - வலையை சிறிது பின்னுவாயா?
நிலத்துப் பூச்சி கிண்டும் - நிலையில் நீயும் கிண்டுவாயா?

7. நீரில் மீனைப் போலே - நீந்தி நிலத்தைக் காணுவாயா?
ஊரும் செல்லின் புற்றில் - ஒன்றை உண்டு பண்ணுவாயா?

8. தூக்கணத்தின்கூடு - கட்டி தூங்கச் செய்குவாயா?
ஈக்கள் தோன்றிடாமல் - காத்தே இனிது வாழுவாயா?

9. ஆந்தைபோல் இராவில் - பார்க்கும் ஆற்றல் பெற்றுளாயா?
சேர்ந்து ஒன்றுபட்டே - வாழும் சிறப்பு வைத்துளாயா?

10. சாவைத்தாண்டினாயா - வாழ்வில் சாதி போக்கினாயா?
நோவைத்தந்து கொள்ளும் - உடலின் நோயை நீக்கினாயா?

11. மொழிகள் கண்டுமென்ன? - ஆதி முதலைக்கண்டு மென்ன?
வழிகள் கண்டுமென்ன? - கோயில் வைத்து வந்து மென்ன?

12. உடைகள் கண்டுமென்ன? - உணவு - ஊர்தி கண்டுமென்ன?
படைகள் கண்டுமென்ன? - ஆட்சி பார்த்து வைத்து மென்ன?

13. மதி இறங்கியென்ன? - செவ்வாய் மாறி ஏறி என்ன?
விதியை வென்று மென்ன? - வேறு வெற்றிகண்டு மென்ன?

14. பள்ளிகட்டி யென்ன? - கற்றே பட்டம் பெற்று மென்ன?
தெள்ளி வைத்த தமிழில் - கவிதை தீட்டி விட்டும் என்ன?

15. விலங்கினாலே வந்த - மனிதா, விலங்கு ஆகுவாயா?
விலங்கு பறவை யெல்லாம் - சிரிக்கும் வீழ்ந்து வீழ்ந்து தானே?

16. மனிதன் ஆகவேண்டும், - மனிதா, வையம் அழியுமுன்பே!
புனிதம் ஆக வேண்டும், - உலகம் புதியதாக வேண்டும்!

-----

# 54. ஏன்?

1. செய்யத் தொழில் இல்லையா? சேர்க்கப்பணம் இல்லையா?
வையத்திலே எதற்கும் - மனிதா, வருந்திக் கலங்குவதேன்?

2. உடுக்கத் துணி இல்லையா? உண்ண உணவில்லையா?
படுக்க மனை இல்லையா? மனிதா, பாழும் துயரதுமேன்?

3. பார்க்கப்படம் இல்லையா? பழகத்துணை இல்லையா?
வார்க்கக்'கிளாஸ்' இல்லையா?-மனிதா, வாடித்தொலைப்பதுமேன்?

4. குளிக்கக் கிணறில்லையா? கொட்டக்குழியில்லையா?
செழிக்க மழையில்லையா? - மனிதா, சிரிக்கத்தயங்குவதேன்?

5. ஆடஅரங்கில்லையா? அடிக்கத் 'தவில்' இல்லையா?
பாடக்கவி இல்லையா? - மனிதா, பயந்து நடுங்குவதேன்?

6. படிக்க இதழ் இல்லையா? படைக்கக் கதை இல்லையா?
அடிக்க முரசில்லையா? - மனிதா, அல்லற்படுவதுமேன்?

7. ஓடக் 'கொண்டா' இல்லையா? உலாத்திடப் 'பீச்' சில்லையா?
போடப்'பெற்றோள்'இல்லையா?-மனிதா, பொழுதைக்கெடுப்பதுமேன்?

8. இப்படித்தானே இன்று ஏராளமானோர் எண்ணம்?
தப்பிப்பிழைப்பாயோநீ - மனிதா, தரணியின் கதி என்னமோ?

-----

# 55. நாற்பதுகள்

1. மூதூர் எனும் பழைய முத்தூரைப் பார்க்கின்றேன்!
ஏதூரும் இவ்வூர்க் கிணையில்லை! - தோதூரே
தொழிலுக்கும், உழவுக்கும், தூய்தான வாழ்வுக்கும்!
அழியாதெதிர்காலம் ஆம்!

2. ஈர்இனமும், மும்மதமும், என்றுமே வாழ்ந்து வரும்
ஓர்மொழியும் இவ்வூர்க் குயர்வேதான்! - பார்மீதில்
முத்தெடுத்த காலத்தும் முன்னும் உணவளித்த
சத்திரமாம் வரலாறு தான்!

3. கொட்டியனார் ஆண்டதினால் கொட்டியாபுரம் ஆகி
விட்டாலும் மூதூர் விடுமாமோ? - கட்டுமர
வத்தைவழிகாட்ட வந்த பொறிப்படகால்
செத்தாலும் பயணம் செலும்!

4. அல்லைப்படிங்குளநீர் அளைவழியால் ஓடிவரின்
இல்லை எனும்பேர் இருப்பாரோ? - தொல்லையினை
வறுமைதருமாமோ? வள்ளல் குறைவாரோ?
வெறுமைப்படுமோ வெளி?

5. அந்தோனியார்தந்த அந்தநாட்கல்வியினால்
செந்தமிழோடெங்கும் திரிகின்றேன்! - இந்தநாள்
எல்லாம் புதுமையாய் இருந்தும் பழமையிலும்
நல்லவையும் கண்டால் நலம்!

6. எம்மை இணைக்கின்ற இம்மொழியை செம்மொழியை
அம்மை மொழியாய் அணைத்தேநாம் - இம்மையிலே
நம்மை வளர்ப்பதொடு நாட்டின்நலம் பேணி
நிம்மதியாய் வாழ்வோம் நிதம்!

7. முல்லையுடன், நெய்தல், முயலும் மருதமென
எல்லாமிருக்கின்ற இவ்வூரில் - நில்லாதே
அடக்கும்முழு முறையும் அதிகாரக்கூத்துகளும்
நடக்குமோ ஒன்றாயின் நாம்?

8. நூலால் அறிகின்றோம் நொக்ஸின் பெயரதனை!
கோலால் அறிகின்றோம் கோன் ஆட்சி! - வாலாலே
நாயாம்விலங்கினது நன்றி அறிகின்றோம்!
தாயால் அறிவோம் தமிழ்!

-----

# 56. தூங்கு II

1. தூங்கடா தமிழா தூங்கு, தூக்கத்தைவிடவே வேண்டாம்!
தீங்கெவர் செய்தபோதும், சிதைத்தெமை அழித்தபோதும்,
ஏங்குதல் மூச்செடுத்தல் என்றெதும் செய்திடாதே!
தாங்குநீ எதையும் தாங்கு, தாக்குதல் உனக்கடாதே!

2. குவலயத்தோர்க்கு முன்னம் குமரியில் வந்தாலும்நீ
சவமெனக்கிடந்து தூங்கு! தாரணிவிழித்தாலென்ன?
நவநிலம் கண்டாலென்ன? நற்பொருள்குவித்தாலென்ன?
அவமானம் இதிலே என்ன? ஆறுதலாகத் தூங்கே!

3. எவரெலாம் எங்கேயெல்லாம் என்னென்ன வெல்லாம் செய்ய
அவரரும் முயற்சியாலே ஆக்கிய யாவும் பெற்றே
சிவ்சிவா என்றே கோயில் சிலையுடன் நின்றே தூங்கு!
அவமானம் இதிலே என்ன? ஆறுதலாகத் தூங்கே!

4. புவிஆய்ந்து மேலைநாட்டார் போய்மதி ஆய்ந்து - பார்க்கத்
தவிக்கிறார் செவ்வாய்தன்னை! தமிழ்இதழ்கூடப் பாராய்-
கவிகல்லாய் - தீட்டாய் - ஆனால் கற்பனைக்குப்பையெல்லாம்
குவித்துமேவைத்துக்கொண்டே கும்பிடும் தமிழா தூங்கே!

5. ஊழையும்பலர்காண்கின்றார் உப்பக்கம், உலைவு இன்றித்
தாழாது உஞற்றலாலே (620) தமிழ்க்குறள் அவர்பாலுண்டு!
ஊழ் ஊழ் என்றடித்துக்கொண்டு உஞற்றலில் தோல்விகண்டு
வாழாது மடிய எண்ணும் வண்டமிழ்த்தமிழா தூங்கே!

6. அருமையென்றெண்ணிடாமல்(611) அசாவாமைதனைமேற்கொண்டு
பெருமையை முயற்சியாலே பிறர் அடைகின்றார்! ஆனால்
ஒருபொழுதேனும் வாழாய் - ஒரு கோடிக்கப்பால் கூடக்
கருதுவாய் (337) தமிழாநன்றாய்க் கண்மூடித்தூங்கு தூங்கே!

7. ஆள்வினையோடுநல்ல ஆன்றறிவு எனுமிரண்டின்
நீள்வினையாலே வாழ்வு நீளும் என்பார்முப்பாலார்!(1022)
பாழ்படும் ஆரியத்தின் பழமறைக்குட்டைக்குள்ளே
மூழ்கிடும்தமிழாநீண்ட மூச்சிழுத்திழுத்தே தூங்கே!

8. கீழ்கீழாய்ப்போவதால்தான் கீழ்நாட்டார்என்றிட்டாரோ?
கூழ்கூழாய்க் குடிப்பதால்தான் கூழையர் என்றிட்டாரோ?
மேல்நாட்டார் வழிகள்காட்டி வெளிக்கிட்டு வந்த போதும்
கால் தூக்கிப் போக அஞ்சும் கதியற்ற தமிழா தூங்கே!

-----

## 57. பிடி (கடிதம்)

1. அன்புத்திருமகளே, அரசிப்பெயராளே,
இன்பத்தமிழ்கற்க எங்கெங்கோ சென்றவளே,
ஊரை இழந்தாய்! உனக்கான வீடிழந்தாய்!
சீரை இழந்தாய்! தேட்டம்பல இழந்தாய்!
அகதி என ஆனாய்! ஆரிடம் போய்ச் சொல்வாய்நீ?
சகலருக்குமானாலும் தனிஇழப்பு உனக்கம்மா!
மலையென்றும், ஊற்றென்றும் மாறித்திரிந்திட்டாய்!
அலைந்ததினிப்போதும், அண்ணன் உதவியுடன்
யாழில்படிதாயே! யாவருக்கும்முன்னால் நில்!
ஆழப்படியம்மா! அனைவர்க்கும் வழிகாட்டு!
கற்றோருக்குள்ளவையே கண்ணாம் - பிறபுண்ணாம்!
கற்றோர்க்கெலாம் நாடாம்! கல்விக்கழி விலையாம்!
பிச்சையெடுத்தாலும் பெருங்கல்வி தேவையம்மா!
எச்சம்கலைப்புகழே! எனவேபடித்திடம்மா!
மீண்டும்போர்காணாத மேலாம் உரிமையுடன்
ஆண்டுநாம் எங்களையே அன்போடுவாழ்ந்திடுமோர்
நாளும் வருமென்றே நம்பிக்கிடக்கின்றோம்!
ஆளுவாய்நீயும் உனை! அதைநாமும் பார்த்திடுவோம்!
இன்றுந்தன் வேலையெலாம் இரவாய்ப் பகலாக
நன்றாய்ப்படிப்பதுவே, நல்வணக்கம் - பிறபின்பே!

-----

# 58. படி - எழுது

1. பாட்டைப் படியாமல் பாட்டெழுதப் போகாதே!
கேட்டுத்தெரியாமல் கிறுக்கலினைச் செய்யாதே!
நாட்டாரின் பாடல்களே நற்பாடல், என்றாலும்
போட்டுப் புரட்டிப்பார் - போயெழுது பின்பாடல்!

2. கம்பருக்கும் முன்னால் போ - காணுவாய் வள்ளுவரை!
நம்பிப்போ மேன்மேலும், நற்சங்கப்புலவர் உளார்!
அம்புவியே வியக்கின்ற அடிகுக்கருத்தையெலாம்
நம்புலவர் தந்திடுவார் - நற்கிளவிப் பாடல் அவை!

3. படிக்கப்படிக்க வரும் பண்பு வரும் - அன்பு வரும்!
வடிக்கவடிக்க வரும் வடிவான வாழ்க்கை வரும்!
குடிக்கக்குடிக்க வரும் கூத்தோடு பாட்டு வரும்!
முடிக்க முடிக்க வரும் மோகமுந்தான், தாகமுந்தான்!

4. அரியநடை ஏதுமில்லை, அவைகள் எளியவையே!
பெரிய பொறுப்பேதுமிலை, பேச்சுநடை அன்றதுவே!
உரியபயிற்சியுடன் ஒழுங்காகக் கற்றுவரின்
சரியான பாட்டெழுதித் தமிழாய்ச் சொரிந்திடலாம்!

-----

# 59. ஒன்று - ஒன்பது

1. ஒரேஒரு காணித்துண்டு, ஒன்பது பள்ளம் திட்டி!
ஒரேஒரு செங்கல் வீடு, ஒன்பது ஒழுக்குக் கூரை!
ஒரேஒரு பன்னீர்வேலி, ஒன்பது மாட்டின் வாசல்!
ஒரேஒரு கிணற்றின் வாளி, ஒன்பது பெருங்கண் ஓட்டை!

2. ஒரேஒரு சோற்றுப் பானை, ஒன்பது ஒறுத்தின் வாய்கள்!
ஒரேஒரு அரிக்கன்சட்டி, ஒன்பது வெடிப்பின் கீறல்!
ஒரேஒரு தண்ணீர்ச்செம்பு, ஒன்பது நெளிவுப் பள்ளம்!
ஒரேஒரு அகப்பைப் காம்பு, ஒன்பது சூட்டுக்காயம்!

3. ஒரேஒரு சாயப்பன்பாய், ஒன்பது ஓரப்பீத்தல்!
ஒரேஒரு கூதற்போர்வை, ஒன்பது இறதற்கீற்று!
ஒரேஒரு நீளச்சட்டை, ஒன்பது தையல் மூட்டு!
ஒரேஒரு செருப்புச்சோடி, ஒன்பது மாறா வெட்டு!

4. ஒரேஒரு வருவாய் மட்டும், ஒன்பது செலவுத்திட்டம்!
ஒரேஒரு பிறவிக்கூடு, ஒன்பது பிணியும் நோயும்!
ஒரேஒரு உலகப்பந்து, ஒன்பது கோளின் சுற்று!
ஒரேஒரு வாழ்க்கை இன்பம், ஒன்பது துயர் நாளாமே!

-----

# 60. ஒன்று (பதில்)

1. உற்றதுணை வாழ்க்கையிலே ஒன்றே ஒன்று! - அதை
ஓதுகிறார் வள்ளுவனார் மனைவி என்றே!
பெற்றாரோ பிள்ளைகளோ 'துணை' ஆவாரா? - நுகர்
பேரின்பம் ஐந்தினையும் தரவல்லாரா?

2. தொடக்கத்தில் இனித்தவளேன் கசந்தாள் இன்று? - அந்தச்
சுவைகுறையக் காரணமார், காலந்தானா?
நடுநிலையோடாராய்ந்தால் நம்மைநாமே - சரி
'நானேதான் - நீயில்லை' எனவும்தேறும்!

3. பண்ணுவதெல்லாம் ஆண்மை பண்ணிவிட்டு - வீண்
பழியெல்லாம் பெண்மையிலே போடலாமா?
எண்ணங்கள் தவறானால் இரண்டும்பாழே! - ஈர்
இதயத்தின் அன்பூற்றே வாழ்க்கை மூலம்!

4. பெண்ணைவிடப் பெரிதுண்டோ? என்று கேட்டான் - அந்தப்
பெரும்புலவன் மூன்றாம்பால் பருக வெற்றி!
பெண்ணுக்கே உடல்பாதி ஈந்தான் ஈசன்! - அந்தப்
பெருமானே விரும்பானே பெண்ணைக் காய்ந்தால்!

5. தன்னைத்தான் ஆய்வதுதான் தகுந்தஆய்வு! - ஆம்
தன்குற்றம் நீக்கியபின் பிறரை ஆய்ந்தால்
என்னகுறையும் வாரா, தினிமேலேனும் - நீர்
ஈருடலாய் - ஓருயிராய் - எனக்காய் வாழ்க!

-----

# 61. ஒளிகள்

1. ஆசிரியர் உலகத்தின் அறிவு விளக்கொளிகள்!
பேசின் நடுங்கும் பெருமடமை! - கூசிஇருள்
ஓடிப்பறந்து விடும்! உயர்வொழியத் தாழ்வில்லை!
நாடின் கிடைக்கும் நலம்!

2. ஆசு இரிந்ததினால் ஆசிரியப் பெருமக்கள்
ஈசுவரனுக்கே இணையாவார்! - வீசுபுகழ்
எல்லாமே ஆசிரியம் என்றே பறைசாற்றும்,
அல்லாமல் வேறே தறை?

3. எழுத்தை அறிவித்தோன் இறைவன் எனச்சொல்லி
வழுத்தினார் முன்னோரின் வாழ்க்கையது! - அழுத்தியே
மீண்டும் அதனை நாம் மெதுவாய்ப் புதுப்பித்தால்
ஈண்டு கிடைக்கும் எலாம்!

4. ஓர் ஆசிரியற்கும், உயர்வான அன்னைக்கும்
நேர் ஆம் இணைப்பில் நிகரேது? - பேர்ஆன
எத்தனையோ மாந்தர்கள் எங்கேயிருந்தாலும்
அத்தனையும் சரியாகு மா?

5. அன்பும், மொழியறிவும், ஆழ்ந்தபெருஞ் சிந்தனையும்,
பண்பும் பொதுவான பார்வைகளும், - வெண்பாபோல்
வெள்ளை நிறையுளமும், வீறும், வினைவலியும்
உள்ளோருக் காசி உரை!

6. பிள்ளைகளைப் பேணுவதும், பெரும்பள்ளி காப்பதுவும்,
நல்ல சுவடிகளை நாடுவதும், - வள்ளலென
வாரி வழங்குவதும், வறுமையினை ஓட்டுவதும்
சீருடையா சிரியர் செயல்!

7. தொழிலை மதிப்பதுவும், தொண்டாய்ப் புரிவதுவும்,
அழியாத கல்வி உயர் வாக்குவதும், - ஒழியாத
பணியிலே நிற்பதுவும், பாரைத்திருத்து வதும்
அணியாசிரியகுலம் ஆம்!

8. குலன் அருளும் தெய்வம் கொள்கையொடு மேன்மையும்
கலை பயிலும் தெளிவும் கட்டுரையும் - நிலம்மலை
நிறைகோல்மலருக்கு நிகரான மாட்சியொடு
அறையுமுலகியலே அவர்!

-----

# 62. ஒருதடவை

1. ஒவ்வொரு நாளும் வேண்டாம் - தேவையில்லை!
   ஒருதடவை வாடாப்பா வந்து பாரேன்!
எவ்வாறு மக்கள் எலாம் வாழ்கின்றார்கள்?
   என்னென்ன சொல்கின்றார் - செய்கின்றார்கள்?
இவ்வாறே எனச்சில்லோர் இருக்கப் பல்லோர்
   எவ்வாறும் எனக்கிடக்கும் காட்சியும்பார்!
அவ்வாறு கண்டால்தான் உனக்கிங் குள்ள
   அடிப்படைகள் நேரடியாய்த் தெரியுங்கண்டாய்!

2. வன்செயலாம் நாடெல்லாம் வந்து பாரேன்!
   வன்செயலைத் தூண்டுவதார், வடிவாகப்பார்!
முன்செயல்கள் என்னென்ன? வம்பாய் வந்து
   முடிந்ததிற்குக் காரணமார்? முயன்றால் காண்பாய்!
'என்செயலோ யாதுமிலை' என்கின்றார்கள்!
   இதனுடைய பொருளறிவாய்! எதுவானாலும்
உன்செயலாம் பார்த்தாயா - வழுவும் போக்கை?
   ஒருமுறை நீ வந்தாயேல் உரைக்கார் மீண்டும்!

3. நடுநிலைமை உள்ளோன்நீ - நீதவான்நீ!
   நாட்டினிலே பெரும்பாலோர் பக்கச் சார்பார்!
கெடுமதியே - செயல்நஞ்சே - கிளத்தல் தேனே!
   கேட்பாரா குறள் கற்றோர் - கிளர்ச்சிதானே?
கொடுப்பதுயார் - பெறுவதெவர் - கூழா, சோறா?
   குறைவாகி அழிவதனால் குறையாதீரும்?
படுமோச மாகிவிடும், இனிமேலும்நீ
   பார்த்துக்கொண்டே யிருந்தால்... வாடாப்பா வா!

4. உருவமுனைக்கிலை யென்பார் - நல்லதாச்சு!
உருவிலியாய் வந்தால் தான்தப்பிப் போவாய்!
பருவமுமோ கணக்காச்சு - இன்னும் பார்த்தால்
பழம் வீழ்ந்து விதை தோன்றும் - நீண்டேபோகும்!
பெருமனங்கொண் டொருதடவை வரப்பார் - இன்றேல்
பேச்சாலே பயனிலையென் றுறுதியாய்ப்போம்!
அருவத்தின் இறைவா, எம் ஆவலைத்தீர்!
அங்கெங்குமலை யாமல் இங்கு வாவா!

- - - - -

# 63. சமயம் II

1. மக்களெலாம் மக்களென வாழுதற்கும்
மண்ணுலகம் அமைதியிலே மூழ்குதற்கும்
தக்கநெறி-கோட்பாடு தேவையென்றே
சான்றோர்கள் சமைத்திட்டார் சமயந்தன்னை!
அக்காலந்தொட்டுள்ளத் தன்பினோடும்
அறவாழ்வு சிலர்வாழப் பலமாந்தர்கள்
இக்காலம் தலைகீழாய் வாழுகின்றார்!
ஏனென்றே யாமறியோம் - இறைவாநீ பார்!

2. பூச்சிடுவார், பொட்டிடுவார், பூவும் வைப்பார்!
பொன்னகையும், புதுத்தூசும் காட்டிப் போவார்!
ஆச்சரியக் கதைசொல்வார் - அமர்ந்து கேட்பார்!
அடுத்தகணம் மனம்மாறி ஏதோ செய்வார்!
பேச்சொன்று - செயலொன்று - பிணங்கும் நெஞ்சம் -
பேராசைச் சிந்தனைகள் - பிளக்கும் போக்கு!
கூச்சமிலாச் செயற்பாடு - கொலையும், நோன்பும் -
கூற்றெல்லாம் தேனமுதம் - கூடாவாழ்வே!

3. ஒன்றோடு ஒன்றுபகை! ஒருமைப்பாடோ
ஒருபொழுதும்கிடையாது! உண்மை - அன்பு
என்றென்றும் கிடையாது! மக்கள் வாழ்வில்
எங்கெங்கும் கிடையாது! சமயமெல்லாம்
நன்றேதான் சொன்னாலும் நாட்டார்பல்லோர்
'நானேதான் நீயில்லை - நான்மேல் நீ கீழ்'
என்றேதான் சிந்தித்து - ஏதோ சொல்லி-
ஏதேதோ செய்வதெலாம் சமயமாமோ?

4. பலகற்போம் - பலகேட்போம் - பல்லாரோடும்
பாசமுடன் நடந்திடுவோம் - உயிரைக் காப்போம்!
நலமேதான் சிந்திப்போம் - நன்றே சொல்வோம் -
நல்லதையே செய்திடுவோம் - நாளும் ஒன்றே
குலமென்போம் - ஓர் இறையைக் குறிக் கோளாக்கி
கொலை, களவு, பொய்யற்றுக் கூடி இங்கே
சிலரேனும் வாழ்ந்தால்தான் சமயம் வாழும்!
செயலெல்லாம போலியெனில் சிதைந்தே போகும்!

-----

# 64. வெல்லும்

1. குறிஞ்சி நிலந்தானையா! குமரன் இடந்தானையா!
அறிஞ்சுதான் வந்தோமையா! - அவனே அழைப்பு விடுத்தானையா!

2. உச்சிமலையில் ஏறி உயரத்திருந்து பார்த்தால்
அச்சம் வருந்தானையா! - எனினும் அவனை நினைப்போமையா!

3. நீளம் மிகுந்த மலை! நிலமும்சிவப்பு நிலம்!
ஆழம் மிகுந்த கடல்! - அதிலும் அருகில் களப்பாம் ஐயா!

4. கப்பல் பறந்து வரல் காலுக்குக்கீழ் எனினும்
தப்ப முடியாதையா! - எவரும் சண்டை வரும் பாரையா!

5. கிணறென்ற பேச்சே இல்லை கிடைத்தால் குழாயின் தண்ணீர்!
மணலையும் காணோமையா! - எனினும் மரங்கள் வளர்ப்பாரையா!

6. வாழையோ மாவை வெல்லும்! வரிக்கன் அதனை வெல்லும்!
ஏழைமரவள்ளியோ - விழுந்தே எதனையும் வெல்லுமையா!

7. முதலில் விநாயகனார், முடிவிலே பூசனியாள்,
இதனால் முருகன் அவன் - தலத்தை இடையினில்கொண்டானையா!

8. இலிங்கத்திற்கோர் குறையும் இந்த நிலத்தில் இல்லை!
மலிந்தநிலையாயினும் - எவரும் மறத்தல் இயலாதையா!

- - - - -

# 65. இனிமை

1. தன்னந்தனியனடா! தாயுமிலி-தந்தையிலி!
முன்னமும் ஏகாந்தமே! - அடடா, முடிவிலும் ஏகாந்தமே!

2. கவியும், தமிழும், நல்ல கருத்தின் குறளுமல்லால்
எவரின் துணையுமில்லை! - அடடா, ஏன் வந்தகப்பட்டனோ?

3. 'தம்பி'யும் இல்லை யென்றால் 'ச ரி க ம ப த நி' தான்!
தும்பி பறக்குமடா! - விழித்தால் தொலைக்கடற் காட்சியடா!

4. குடியைக் கலைத்ததினால் கொட்டு முழக்கு மில்லை!
அடிபிடி சண்டையில்லை! - அதனால் அமைதி உறையுதடா!

5. பிறப்புத் தனியெனினும் பிறகெலாம் கூட்டுறவே!
இறப்புத் தனியெனினும் - வரையில் இருக்க முடியாதடா!

6. சமைக்கும் கறியும் தனி! தலையின் இடியும் தனி!
அமைதித்தவமிருக்கும் - துறவிக் கருமை இடமாமடா!

7. தனிமை கவிக்கு நன்று! தமிழுக்கிருவர் நன்று!
இனிமை இசைக்கு நன்று - எனினும் இரைச்சலும் வேண்டுமடா!

8. தனித்தமிழ் வெறுப்போர் சாம்பார் சுவைக்கு தென்பார்!
இனிக்கும் கலப்பதுவே! - சிலர்க்கோ, இனிக்கும் தனித்துவமே!

-----

# 66. விடாதே

1. 'குடி' யை விட வேண்டாம்! கும்பி கொதிப் பேறும்!
குடி யால்தான் மானிடர்கள் குவலயத்தில் வாழ்கின்றார்!
குடி ப்பாய் விடியு முதல்! கொடிய வெயிற் கால மிது!
துடிப் பாய்அனல் கூடின்! சொல்லுவதைக் கேளப்பா!

2. நீருண்டு தென்னையிலே! நிலாத் தோடம் பழமுண்டு!
மோருண்டு - பாலுண்டு! முயன்றெடுத்த தேனுண்டு!
காருண்டு நீர் பொழிய! கரைத்த பழஞ்சோறுண்டு!
ஊருண்டு துரவோடு! உயர்குடி யைவிடவேண்டாம்!

3. தண்ணீரை வடிகட்டு! தணல்மீது சூடேற்று!
உண்ணாய் வயிறூத! ஒருபழுதும் நேராது!
எண்ணித் துணிக செயல்! எல்லோர்க்கும் வழிகாட்டு!
மண்ணெல்லாம் குடி ஐயா! மறவேல்-விடவேண்டாம்!

4. குடியைக்குடி உயர்த்தும்! குடியாதார் இல்லங்கள்
விடியாது! நோய்நொடியே விளையாடிக் கொண்டிருக்கும்!
அ:டிப்படையே நற் 'குடி'யே! அதையா விடவேண்டும்?
முடியாது - கூடாது! முழுக் குடி யை விடவேண்டாம்!

- - - - -

# 67. என்னே?

1. இறைவனின் பெயரை நாவால்
எப்போதும் உச்ச ரிப்பார்!
இறைவன் இல்லாது விட்டால்
எதுவுமே நடவா தென்பார்!
இறைவனோ எல்லாம் வல்லான் -
எதையுமே அறிவான் என்பார்!
இறைவனை அறியத் தானே
இப்பிறப் பெடுத்தோ மென்பார்!

2. உள்ளத்தில் உள்ளான் என்பார்!
உணர்ந்திடல் வேண்டும் என்பார்!
எள்ளிலே எண்ணெய் போலும்
இருக்கிறான் இறைவன் என்பார்!
வள்ளலும் நம்மை நம்ப
வாழ்ந்திட வேண்டும் என்பார்!
வெள்ளை உள்ளத்தின் அன்பை
விரும்புவான் இறைவன் என்பார்!

3. நல்லதே சொல்வார், ஆனால்
நடைமுறை எவ்வாறிங்கே?
சொல்வதை யாவர் கேட்பார்?
தூயநெஞ் செவருக் குண்டு?
வெல்வதும், குறுக்கால் ஓடி
விழுந்தடித்துயர்வதும்தான்
பல்லோரின் நோக்கம் இன்று!
பார்க்கிறோம் - இறையும்பார்க்கும்!

4. பொய்யென்ன? கொலைகளென்ன?

போய்விட்ட உயிர்கள் என்ன?
பைபை யாய்க் கள வெடுத்த
பணங்காசுத் தாள்களென்ன?
ஒய்யாரத்தார்கள் என்ன?
ஒன்றுமில்லாதவர் என்ன?
வையத்தை இறைவன் கண்டும்
வாளாதிங்கிருப்ப தென்னே?

-----

# 68. இல்லை

1. கள்ளர்கள் போகின்றார்கள்!
கடும்பொய்யர் போகின்றார்கள்!
கொல்பவர் போகின்றார்கள்!
குடிகாரர் போகின்றார்கள்!
அள்ளுவோர் போகின்றார்கள்!
ஆளுவோர் போகின்றார்கள்!
எல்லோரும் போவார் கோயில்!
எனவே யான் போவதில்லை!

2. காட்டுவோர் போகின்றார்கள்!
கஞ்சர்கள் போகின்றார்கள்!
கூட்டுவோர் போகின்றார்கள்!
கொடுமூடர் போகின்றார்கள்!
மாட்டுவோர் போகின்றார்கள்!
மதக்காரர் போகின்றார்கள்!
மூட்டுவோர் போகின்றார்கள்!
முடிவு - நான் போவதில்லை!

3. சிரிப்பவர் போகின்றார்கள்!
செருக்கர்கள் போகின்றார்கள்!
அரிப்பவர் போகின்றார்கள்!
அறமிலார் போகின்றார்கள்!
உரிப்பவர் போகின்றார்கள்!
ஒதுக்குவோர் போகின்றார்கள்!
விரிப்பவர் போகின்றார்கள்!
விளைவு - நான் போவதில்லை!

4. வஞ்சகர் போகின்றார்கள்!
வம்பர்கள் போகின்றார்கள்!
நஞ்சர்கள் போகின்றார்கள்!
நாணிலார் போகின்றார்கள்!
நெஞ்சிலார் போகின்றார்கள்!
நெருக்குவார் போகின்றார்கள்!
எஞ்சுதீயோர்கள் போவார்!
எனவே யான் போவதில்லை!

-----

# 69. ஆர் ?

1. அன்போடறிவினை ஊட்டுவதார்? நல்ல
 ஆற்றலைக் காட்டி வளர்ப்பவர் ஆர்?
இன்பத்தமிழ்த்திறன் காட்டுவதார்? நல்ல
 ஏடுகள் தீட்டிடச் செய்பவர் ஆர்?

2. எண்ணோடெழுத்தை விளக்குவதார்? நல்ல
 ஏணியாய் ஏற உதவுவதார்?
வண்ணத் தமிழ்இசைத் தேனைச் செவியுடன்
 வாயினிக்கப்பாடச் செய்பவர் ஆர்?

3. தோணி எனக்கரை ஏற்றுவதார்? தமிழ்
 தொட்டுச் சுவையினைக் கூட்டுவதார்?
பாணிப்பழமென நாளும் விழுங்கிடப்
 பைந்தமிழ்தேடிப் பறிப்பவர் ஆர்?

4. நல்வழி ஒன்றையே காட்டும்மரமென
 நாளும் பொழுதும் இயங்குவதார்?
வெல்லும் வழிவகை சொல்லியே தோல்வியை
 வெற்றியின் பக்கம் திருப்புவதார்?

5. ஆட்டமும் ஓட்டமும் காட்டுவதார்? பெரும்
 அற்புதங்கள் அரங்கேற்றுவதார்?
தீட்டிடும் ஓவியம், காவியம், நாடகம்,
 சிற்பக்கலைக்கும் உரியவர் ஆர்?

6. என்ன தொழில்முறை எங்கு நிகழுமோ
இந்த உலகினைச் சீரமைக்க?
அன்னவைக்கெல்லாம் அடிப்படை மூலம் ஆர்?
ஆசிரியப் பெருமக்களன்றோ?

7. கண்களினால் என்றும் காணா இறைவனில்
காணும் இறைவனே ஆசிரியன்!
பண்களுடன் நல்ல பாடல்கள் தீட்டியே
பாடிடுவோமவன் மாண்புகளை!

8. ஐப்பசி ஆறுக்குரியவனோ அவன்?
ஆண்டுமுழுவதும் ஆசிரிந்தோன்!
மெய்ப்பசி தீர்க்கும் உணவு - உளப்பசி
மேதினியில் தீர்ப்போன் இங்கிவனே!

-----

# 70. சரிதம்

1. ஓலைக்குடிசைகட்டி ஒன்றும் விடாமல் வாங்கி
மூலை முடுக்கில் மரம் - வளர்த்தே முடிந்ததடா சரிதம்!

2. முன்பும் இதே சரிதம் முடித்தே பலதடவை
பின்பும் அதே கதைதான் - எனவே பேசுதற்கேதுமில்லை!

3. தாமரை வில்லு மில்லை, தனி ஈச்சந்தீவு மில்லை!
ஆமிந்த லிங்கநகர் - அடடா, அதுவும் கிடையாதடா!

4. இதுதான் பழவினையோ? எழுத்து, விதிப்பயனோ?
அதுவும் விளங்காதடா-எனவே ஆய்வும் பொருந்தாதடா!

5. பொன்னைப் புடம் இடுதல் புதியநகைகள் செய்ய,
என்னைப் புடம்இடல் ஏன் - அதுதான் எனக்கே விளங்கவில்லை!

6. மாக்களே மக்கள் ஆகி மக்களே மாக்கள் ஆனால்
தாக்கம் வரவே செய்யும் - எனவே தாங்கவே வேணுமடா!

7. இன்னும் உயிர் உள்ளதால் இறக்கும்வரை முயன்றே
பின்னும் முருக்கேறு வோம் - தளரும் பேச்சுக்கிடமே இல்லை!

8. துயரைத்துயர் எனாமல் தூயநலமாய் எண்ணி
அயராதுழைப்போமடா - அதுதான் அழிவினில் ஆக்கமடா!

-----

# 71. பார்-நோய்

1. ‘கோ’ என்றான்! ‘இல்’ என்றான்! கோயில் என்றான்!
   கும்பிட்டான்! நெறி என்றான்! வழிபா டென்றான்!
‘நோ’ என்றான்! துயர் என்றான்! நோன்பு நோற்றான்!
   நூற்றாண்டின் மேலாலும் வாழப் பார்த்தான்!
‘சா’ வென்றான்! பிறப்பென்றான்! ஆன்மா என்றான்!
   தலை எழுத்து-விதி என்றான்! ஊழாம் என்றான்!
‘போ’ என்றான்! அவ்வுலகம்! ‘வா’ இங் கென்றான்!
   புனிதன் ‘தாள்’ அடைந்திடவும் வழி சொன்னானே!

2. அறி வென்றான்! கலை என்றான்! ‘ஞானம்’ என்றான்!
   அணுக்குண்டு-ஏவுகணை எல்லாம் கண்டான்!
‘பொறி’ என்றான்! நிதி என்றான்! போனான் மேலே!
   பொன்நிலவில் கால் வைத்தான்! செவ்வாய் என்றான்!
வெறி கொண்டான்! போர் செய்தான்! நாடு வென்றான்!
   விலைப்பட்டான்! விடுதலையும் வேண்டி நின்றான்!
பறித்தோனா-மீட்போனா பயங்கரத்தான்?
   பாழ்படுவாய்-மானிடனே ‘பார்-நோய்’ நீயே!

-----

# 72. மனதால்...?

1. உணவால் திருந்துபவன் உடையால் திருந்துபவன்
துணையால் திருந்துபவன் தொழிலால் திருந்துபவன்
மனையால் திருந்துபவன் மருந்தால் திருந்துபவன்
மனதால் திருந்தானா? மாமனிதன் ஆகானா?

2. களத்தால் திருந்துபவன் கதையால் திருந்துபவன்
வளத்தால் திருந்துபவன் வதையால் திருந்துபவன்
இழப்பால் திருந்துபவன் இடிப்பால் திருந்துபவன்
உளத்தால் திருந்தானா? உயர்அன்பன் ஆகானா?

3. இகத்தேநிலைமாறும் இடத்தால் திருந்துபவன்
மகத்தான வாழ்வதனை மதித்தே திருந்துபவன்
முகத்தால் சிலசமயம் முற்றாய்த் திருந்துபவன்
அகத்தால் திருந்தானா? அன்பழகன் ஆகானா?

4. பள்ளி அளிக்கின்ற பண்பால் திருந்துபவன்
அள்ளி வழங்குபொருள் அதனால் திருந்துபவன்
வெள்ளி சனி பார்த்து வெளியால் திருந்துபவன்
உள்ளால் திருந்தானா? உண்மையொடு நில்லானா?

-----

# 73. பின்னல்

1. பின்னல் நாற் காலி வேண்டும்!
   பெரியதோர் திண்ணை வேண்டும்!
கன்னலாம் தமிழில் வாழ்க்கைக்
   கருத்துள நூல்கள் வேண்டும்!
சின்னதோர் 'மேசை' வேண்டும்!
   சிறந்ததோற் குச்சு வேண்டும்!
தின்னவும் ஏதும் வேண்டும்!
   தெரிபடிந்தாலும் வேண்டும்!

2. நல்மரநிழலும் வேண்டும்!
   நாற்புற அமைதி வேண்டும்!
மெல்லிய காற்றும் வேண்டும்!
   மின்விளக்கதுவும் வேண்டும்!
தொல்லைகள் நீக்க வல்ல
   துணைவியும், காசும் வேண்டும்!
கல்லாத நூல்கள் யாவும்
   கற்றுமேதீர வேண்டும்!

3. கண்மூடச் சற்று நேரம்
   கற்பனைச் சிறகு கட்டி
விண்வரை பாய இந்நாள்
   வேண்டிய கவிதை யாத்து
எண்ணிலா நூல்கள் யாக்க
   எல்லோரும் தேடி வாங்கின்
மண்மீதில் மீண்டும் மீண்டும்
   மனிதனாய்ப் பிறந்தாலென்ன?

4. இவை எதும் இல்லை யென்றால்
எழுதவும் முயலலாமோ?
அவை கருத்தளிக்கு மாமோ?
அனைவரும் விரும்பு வாரோ?
கவைக்குத வாத வற்றால்
கனியுமோ மனிதவாழ்வு?
எவைநலம்? அவையே தேவை!
இல்லையேல் எழுத்தே வேண்டாம்!

-----

## 74. உற்றறி

1. இயற்கையை உற்றுற்றுப் பார்!

இரவிலே வானத்தைப் பார்!

மயக்கிடும் கடலை - மண்ணை -

-மலைகளை - மரத்தை - ஆற்றை-

தியக்கிடும் கரும்பை - தேனை

தென்றலை - மழையை - மின்னை -

புயலினை - நடுக்கம்தன்னை -

புவி எரி மலை எல்லாமே!

2. ஆக்கிடும் இயற்கை யேதான்

அழித்தலும் செய்யும்! யாவும்

போக்கிடும்! ஆனால் பார்க்கப்

புதுமையாய் இருக்கும்! நீரைத்

தேக்கிடும் நிலத்தில்! நீரில்

தெரிபடச் செய்யும் மண்ணை!

தாக்கிடும் நீரைக் காற்று!

தடுத்திடும் நெருப்பைத் தண்ணீர்!

3. இலைவிழும்! இலைகள் தோன்றும்!

இடிவிழும்! மின்னல் தோன்றும்!

மலைதனை அரிக்கும் ஆறு!

மணல்தரும் - கற்கள் சேரும்!

உலை என வெய்யில் மாறும்!

உறைபனி நடுங்கச் செய்யும்!

நிலைதனில் மாறும் - சேர்க்கும்!

நீக்கிடும் - நீண்டும் போகும்!

4. யாவையும் அறிதல் வேண்டும்!
யாவும் இங்கியற்கைக் கூத்தே!
தேவைகட்குரிய வற்றைத்
தேடியாம் பெறுதல் வேண்டும்!
நோவை யாம் மறத்தல் வேண்டும்!
நுட்பத்தால் மகிழ்தல் வேண்டும்!
சாவையும் மாற்ற வல்ல
சாதனை நிகழ்த்தல் வேண்டும்!

-----

# 75. அன்பே சிவம்

1. தெய்வம் சிவனேதான்! சிறப்பாம் நமது நெறி
சைவமே வேறு தமிழ் இல்லை! -பொய்யான
சிறுதெய்வம் பற்றியே சேரினும் நஞ்சிவனே
இறுதியிலே சேர்வான் எமை!

2. ஒன்றென்றிருப்பதுவும், உண்டென்றிருப்பதுவும்
நன்றென்பதனாலே நாமதுபோல் -நின்றின்றும்
கற்போம் கசடறவே, கற்ற பிறகதுபோல்
நிற்போம் அதுதான் நெறி!

3. நெஞ்சகமே கோயிலாய் நிறைவே சுகந்தமாய்
மஞ்சனநீர் அன்பாய் மகிழ்வாரே - தஞ்சமெனத்
தேடியே வாரானோ தில்லைச் சிவன், இங்கும்
ஆடிவா ரானோ அவன்?

4. ஒன்றேகுலமாக- ஒருவனே தேவன் என
நன்றாக வாழவழி நஞ்சிவனே! - இன்றேநம்
வாழ்வு தொடங்கட்டும், வாழட்டும் நமதுசிவன்!
தாழ்வில்லை - இல்லையே தான்!

5. உள்ளமே கோயிலாய் ஊனுடம்பாலயமாய்
வள்ளலது வாசலே எம்வாயாய் - தெள்ளவே
தெளிந்துகிடப்போரைத் தேடியே வாராமல்
ஒளிந்தெங்கு போவான் உரு?

6. என் கடனே யாகுமே என்றும் பணி! சிவனின்
தன்கடனோ எனையும் தாங்குவதே! - முன்னைப்
பழமைப் பொருளுக்கும் பழையோன், இளமைக்கும்
இளையோனாய் உள்ளோன் இவன்!

7. அன்பும் சிவமுமோ அறியார்க்கிரண்டாகும்!
அன்பேசிவமாம் அறிந்தார்க்கு! - அன்போடு
வாழ்ந்தேவருவோரை வாழ்த்தானோ நமதுசிவன்?
தாழ்ந்துமே போவரோ தான்?

8. சிவனுக்கு நிகரான தெய்வம் பிறிதுண்டோ?
அவனைப் பழித்தல் அழகாமோ? - இவனையே
வடவர் உருத்திரனாய் வாழ்த்திவருவதுவும்
நடமென்னும் கூத்தின் நலம்!

-----

# 76. நீட்டு வரலாற்றின்...

1. வீரம் விளைந்த நிலம்! வெற்றி பல கண்ட நிலம்!
நேரம் கணிப்போரின் நெல்லு நிலம்! - கூரம்பு
ஈட்டி, வாள், வேல் என்று எல்லாம் பறந்த நிலம்!
நீட்டு வரலாற்றின் நிலம்!

2. வன்னிப் பழைய நிலம்! வன்னியர்கள் ஆண்ட நிலம்!
செந்நெல் மலைகள் தெரிந்த நிலம்! - கன்னியர் கை
காட்டுமுதல் ஓடிக் காளை கால் வீழ்ந்தநிலம்!
நீட்டு வரலாற்றின் நிலம்!

3. வெள்ளைச் செருக்குகளை விரட்டியடித்த நிலம்!
கொள்ளைப் பரிசும் கொடுத்த நிலம்!
பாட்டுத் தமிழமுதால் பசியாற்றி வந்த நிலம்!
நீட்டு வரலாற்றின் நிலம்!

4. மருதவளமெல்லாம் மறவாது காட்டு நிலம்!
பொருத களத்தின் புனிதநிலம்! - விருதோடு
தேட்டக்கலை யாவும் தேடிப் பயின்றநிலம்!
நீட்டு வரலாற்றின் நிலம்!

5. இன்றும் போர் வீரத்தில் இணையற்று நிற்குநிலம்!
வென்றிடவே துடிக்கும் வெற்றி நிலம்! - குன்றிவரும்
ஊட்டத்தை மீட்டுவிட உறுதியாய் நிற்குநிலம்!
நீட்டு வரலாற்றின் நிலம்!

6. அடக்கும் முறைகட்கு அடங்காத வன்னிநிலம்!
ஒடுக்கும் முறையால் உயர்ந்தநிலம்! - மிடுக்கெல்லாம்
போட்டுப் புதைப் போரைப் புறங்காண வல்ல நிலம்!
நீட்டு வரலாற்றின் நிலம்!

7. ஏதிலிகள் கூட்டத்தால் இன்று தளர்ந்த நிலம்!
பாதிப்பால் நெஞ்சம் பதறு நிலம்! - தீதுற்ற
நாட்டின் நிலை மாறி நலஞ்சூழ நம்புநிலம்!
நீட்டு வரலாற்றின் நிலம்!

8. மாற்றார் வருகையினால் மாறிடப் பார்க்குநிலம்!
தோற்றோடிக்கேடு தொலையு நிலம்! - நேற்றோடு
வேட்டுமுடிக வெனும் வேண்டுதலை வேண்டுநிலம்!
நீட்டு வரலாற்றின் நிலம்!

-----

# 77. இல்லார்

1. தெய்வத்தைப் பரவல் ஆக்கி
தேவாரம் கிழியப் பாடி
மெய்யெல்லாம் பூச்சால் மூடி
மேல்தீப தூபம் காட்டி
கையெல்லாம் பூவாய் வீசி
காணிக்கை போட்டும் காட்டி
உய்யலாம் செத்தால் என்றே
ஒவ்வொரு நாளாய்ச் செய்வார்!

2. கைலாயம் கண்டார் போலும்,
கடவுளோ டிருந்தார் போலும்,
வைகுந்தம் போனார் போலும்,
வரமங்கு பெற்றார் போலும்,
மெய்வாழ்வு வாழ்வார் போலும்,
மேலேழு கீழேழென்றும்
பொய்யில்லாப் பொய்யே சொல்வார்!
பொன்னெல்லாம் புரளும் மார்பில்!

3. வீட்டிற்குள் படங்கள் பத்து!
வெளியிலே சூலம் மூன்று!
காட்டிற்குள் வேம்பு நின்றால்
கட்டிடும் முடிச்சோர் ஏழு!
போட்டுவிட்டொரு நாள் ஆடிப்
புளுகினால் நூலோர் ஆறு!
ஆட்டிடும் மந்திரங்கள்!
ஆடுவார் வேலை இல்லார்!

4. வேண்டியதெல்லாம் செய்து
விற்றெமை வாங்கப் பண்ணி
தாண்டுவான் செவ்வாய்க் கன்னோன்!
சாத்திரம் பார்க்கிறோம் நாம்!
ஈண்டெலாம் சாவின் அச்ச
எண்ணமே, மறுவாழ்விற்காய்!
மாண்டொழிந்தாலோ சாம்பல்!
மண்ணனில் எலும்புக் கூடே!

-----

# 78. நம்ம தீவு

(தன்னனானா தன்னானனா - தன/தானனானா தன்னானனா)

1. ஈச்சந்தீவு நம்மதீவு - இதில் இருப்ப தெல்லாம் நம்ம சொந்தம்!
மூச்சுவிட்டா முத்தமிழ்தான் - எங்க முந்தையோரின் சொத்திதுதான்!

2. ஈச்சங்காயோ பச்சநிறம் - கொஞ்சம்இருந்து பாத்தா சிவப்பு நிறம்!
தோச்சு வச்சசாக் கறுப்புநிறம் - அதச்சுவைச்சுப் பாத்தா என்னநிறம்?

3. மாமரங்கள் காச்சுவரும் - வவ்வால்மறந்திடாமக் காவல் தரும்!
பூமரத்தில் பாட்டிசைக்கும் - வண்டுபொழுது பட்டா நரிமுழிக்கும்!

4. தென்னம்மட்டை குடைபிடிக்கும் - தாச்சித்தேங்காயெண்ணை சிலுசிலுக்கும்!
தின்னக்குள்ள மொறுமொறுக்கும் - கோழிசேவல் காக்க முட்டையிடும்!

5. விழுதுக் கண்ணாப் பாழியிலே - கம்பிவிட்டிழுத்தா நண்டு வரும்!
முழுநிலாவை இடையிடையே - முகில்மூடிமூடித் துறந்துவிடும்!

6. கண்டக்காடு நம்மகாடு - வயல்காவல் காத்தா நெல்லுயரும்!
மண்டி மண்டி மட்டியெல்லாம் - கழிமறைஞ்சிருக்கும் கிண்டு மட்டும்!

7. தும்பங்காய்கள் சிங்கிலியில் - பசுந்தோரணங்கள் போட்டிருக்கும்!
கம்புகட்டி இழுக்கையிலே - அடகாயும் பூவும் சேந்து வரும்!

8. குல்லாக்கட்டைச் சவள் வலிக்கும் - சுமைகூடிப்போனா நீர் குடிக்கும்!
கல்லுவெட்டி மீன் படுக்கும் - ஓடைக்களப்பு நண்டு மணல் புதையும்!

9. தாமரை வில் பனம்பழத்தில் - கால்தடுக்கி வீழப் பந்துருளும்!
சாமம்தன்னில் பளபளக்கும் -நிலாச்சாயும் போதில் தடதடக்கும்!

10. கொட்டுப் போட்டாச் சுங்கான்மயம் - புழுகுத்திப் போட்டாப்
பனையான்கிளை!
விட்டுப்போனா வேதனைதான் - நம்மவிடுதலைக்கும் சோதனைதான்!

11. அலையடிச்சா மணல் நனையும் - மீசைஅடம்புக்குள்ளே நீண்டிருக்கும்!
வலை இழுத்தா மீன் நெளியும் - வித்துவந்து பாத்தாப்
பணங்குவியும்!

12. ஆலங்கேணி தயிர் உறைக்கும் - வீட்டுஅடுப்படியில் நெய்யிருக்கும்!
கால்கடுக்கத் தோள்கடுக்க - நம்மகண்டக்காடு பால் கொடுக்கும்!

(ஈச்சந்)

-----

# 79. எதிர்

1. கடைசியிலே கற்றேன் ஓர்
காவியத்தை அடடாவோ,
கடைச்சங்க காலத்தைக்
கண்டுமே மீண்டேன் யான்!
தடைசெய் திருந்திட்ட
தமிழகத்து நம் குழந்தைப்
படையல் இராவணன் பேர்
பரப்பும் எழிற் காவியமே!

2. பழந்தமிழர் சால்பு களைப்
பறைசாற்றும் இப்பெருநூல்
இளந்தமிழர் அனைவர்க்கும்
இனிப்பான கற்கண்டே!
வளர்ந்து வருவோர்க்கு
வாழ்க்கை எது என்றுரைக்கும்
குழந்தைப் பெரும் பாட்டு-
கொள்கைக் கொரே சான்று!

3. கம்ப மா தாச ரது
கருத்தின் மறு முனையாம்!
எம்பகைவர் ஆரியரின்
ஏட்டிற் கெதிர் ஏடாம்!
நம்பியே கெட் டொழிந்த
நமது தமிழருக்கோர்
கம்பத்து நல் விளக்கு!
-கனி, தேன், பால், பாகமிழ்து!

4. ஐ காண்டம் - அதனுள்ளே!
ஐம்பத்து ஏழ் படலம்!
மொய்த்துளது நூற்றோடு
மூவாயிரம் பாடல்!
வையத் திது வரை யில்
வரைந்தோர் எவருமிலர்!
கைதொட்டால் வையாது,
கற்றே களிப்புறு வோம்!

-----

## ௯0. போனியா?

1. கண்டக்காடு போனியாடா காத்தவராயா -
டேய் காத்தவராயா? - அந்தக்
கறுத்தமாட்டக் கண்டியாடா காத்தவராயா -
டேய் காத்தவராயா?

2. கண்டக்காடு போகேலாடி கண்மாணியாத்த -
அடி கண்மாணியாத்த - அந்தக்
கறுத்த மாட்டக் கதைக்கவேணாம் கண்மாணியாத்த
அடி கண்மாணியாத்த?

3. பொன்னாங்காணி போனியாடா புளுகுச்சங்கரா -
டேய் புளுகுச்சங்கரா? - அந்தப்
பொட்டக்கோழி கிடக்குதாடா புளுகுச்சங்கரா -
டேய் புளுகுச்சங்கரா?

4. பொன்னாங்காணி போகேலாடி பூங்குயில் வாணி -
அடி பூங்குயில் வாணி - அந்தப்
பொட்டக்கோழி கதைக்க வேணாம் பூங்குயில் வாணி -
அடி பூங்குயில் வாணி?

5. சுங்கான்குழி போனியாடா சுருட்டு வைரவா -
டேய் சுருட்டு வைரவா - அந்தச்
சொத்திநாயைக் கண்டியாடா சுருட்டு வைரவா -
டேய் சுருட்டு வைரவா ?

6. சுங்கான்குழி போகேலாடி சொக்கத்தங்கமே -
அடி சொக்கத்தங்கமே - அந்தச்
சொத்திநாயக் கதைக்க வேணாம் சொக்கத்தங்கமே -
அடி சொக்கத்தங்கமே ?

7. ஈயக்குண்டான் போனியாடா இளிச்சவாயனே -
டேய் இளிச்சவாயனே - அந்த
ரெட்டவாத்தக் கண்டியாடா இளிச்சவாயனே -
டேய் இளிச்சவாயனே ?

8. ஈயக்குண்டான் போகேலாடி எலும்புக்காறியே -
அடி எலும்புக்காறியே - அந்த
ரெட்டவாத்தக் கதைக்க வேணாம் எலும்புக்காறியே -
அடி எலும்புக்காறியே ?

-----

# 81. பாட்டு

(தானே தனனானனே - தன தானனானே தன்னானனே)

1. வானம் சிவக்குதடி - நாளை வந்து பெய்யும் ஆடிமழை!
நானும் வயல் உழவே - நீயும் நாலு பாட்டுப்பாடிடடி!

2. பாட்டும் படிச்சுவர - மாடு படுத்திருந்து தலையசைக்க
கேட்டுக்குறட்டைவிட - தொழில் கெட்டுநாசம் ஆயிடுமே!

3. நெல்லுவிதைக்கையிலே - காலை நீட்டி நானும் வைக்கயிலே
புல்லு முளைக்கு முதல் - நீயும் போட்டு வாடி கூத்திரண்டு!

4. கூத்தில் குதிச்சுவர - நெல்லுக் கொட்டுப்பட்டே கும்பமிட
நாத்துப் பறந்துவிட - வயல் நாசமாகிப் போயிடுமே?

5. களைகள் பிடுங்கையிலே - இரு கைகள் வலிக்கையிலே
வளையும் உடல்நிமிர்த்தி - நீயும் வந்து எண்ணை பூசிடடி!

6. எண்ணை தடவிவிட - முழு எலும்பும் நிமிர்ந்து விட
முன்னால் வளையாவிடில் - நம்ம முயற்சி வீணாய்ப் போயிடுமே!

7. வெட்டிக் குவிக்கையிலே - அதைவிட்டு நானும் தூக்கையிலே
கட்டை அடிக்கயிலே - கொஞ்சம் காத்து வாங்கி வந்திடடி!

8. காத்துக்கு வயல் கடந்து - நான் கடலோரம் போகையிலே
வேர்த்து விழுந்துவிட்டா - ஐயோ விசிறி கொண்டு யார் வருவார்?

-----

# 82. பார்க்கிறோமா?

1. காலை 'டிஸ்கவரி' பார்ப்பேன்!
காணாத வெல்லாம் காண்பேன்!
மாலை முன் இரவும் பார்ப்பேன்!
மறுநாளும் இவ்வாறே தான்!
வேலைகள் இருந்த போதும்,
வேளையொன்றொதுக்கி ஆய்ந்த
நாலையும் காண வேண்டும்!
நாம்பயன் பெறுதல் வேண்டும்!

2. பிறந்துளோம் மனிதராக!
பேசவே பொழுது போதா!
இறந்தபின் வருதல் இல்லை!
இதற்குளே உண்டுறங்கி
அறம், பொருள், இன்பம் கண்டு
அறிவெலாம் தேடி ஆய்ந்து
திறம்பட வாழ்ந்து - மூத்தால்...
செத்துமே போதல் வேண்டும்!

3. அறிவியல் கண்ட மேலோர்
அறியாமைக்கீழ் வாழ்வோர்க்கு
அறிவினைப் பரப்பும் நோக்கில்
ஆய்வெலாம் தருகின்றார்கள்!
பெறுமொளி தவிர்த்தோ மானால்
பேரிருள் ஆழ்வோம் யாமே!
அறுபுலம் பெற்ற யாங்கள்
ஐந்துடன் வாழலாமா?

4. உடலியல் உளவியல்கள்,
உணவியல், ஊரியல்கள்,
கடலியல், கானியல்கள்,
கண்செலா வானியல்கள்,
நடமிடும் உயிரியல்கள்,
நம்பழிங் கலை இயல்கள்
படம்படமாகக் காட்டிப்
பார்க்கிறார் - பார்க்கிறோமா?

-----

# 83. போவதுவோ?

1. பாட்டாய் வளர்ந்த தமிழ்,
பண்ணாய்ச் செழித்த தமிழ்,
கேட்டே இனித்த தமிழ்,
கிளர்ந்தே மகிழ்ந்த தமிழ்,
ஊட்டம் படைத்த தமிழ்,
உள்ளம் நிறைத்த தமிழ்,
வாட்டம் அடைவதுவோ?
வதைபட்டுழல் வதுவோ?

2. தனித்தபால் ஆன தமிழ்,
சாம்பாராய் மாறுவதோ?
இனித்ததேன் ஆன தமிழ்,
இலைப் பாகல் ஆகுவதோ?
கனிச்சாறு போன்ற தமிழ்,
கடு வாய்த்திரளுவதோ?
புனித அமுத மொழி,
போவதுவோ கூட்டாகி?

3. சொல் குறைவாய் உள்ள தெனில்
சொல் ஆக்கு புத்தமுதாய்!
இல்லாத நிலைமை யெனில்
ஏராளம் உருவாக்கு!
பொல்லா அறிவியலைப்
புதிதாக்கிக் கல்லா நில்!
நல்ல தமிழ் வளரட்டும்,
நாடும் நலம் பெறட்டும்!

4. ஆங்கிலத்தை நன்கு படி!
ஆங்கிலத்தில் படியாதே!
தீங்காம் வட மொழியைச்
சேர்த்துக் கெடுக்காதே!
ஏங்கா முயற்சி எடு!
எல்லாம் தமிழ் ஆக்கு!
தாங்க முடிய விலை,
தனித்தே தமிழ் இயக்கு!

-----

# 84. மொத்தமாய்...?

1. ஏன்? என்று கேள்வி கேளான்!
எவ்வாறு? என்றாய்வு செய்யான்!
தேன் என்று சொன்னால் வாங்கிச்
சீனியின் பாணி தின்பான்!
மான் மகள் வள்ளி என்பான்!
மறலியே எருமை என்பான்!
தான் முதல் மனிதன் என்போன்
தமிழனாய் வாழ வந்தான்!

2. இராவணன் அரக்கன் என்பான்!
இரணியன் அசுரன் என்பான்!
இராமனைத் தெய்வம் என்பான்!
இலக்குமி சீதை என்பான்!
திராவிடன் இனி ஏதென்பான்?
செந்தமிழ் வளராதென்பான்!
தராதல முதல்வன் என்போன்
தமிழனாய் வாழ வந்தான்!

3. மூடநம் பிக்கை எல்லாம்
மொத்தமாய்த் தேக்கி வைப்பான்!
நாடெலாம் ஓடிப் போக
நடந்தவன் தவழ்ந்தே போவான்!
பாடெலாம் பட்ட வாறே
பழியினை ஊதே என்பான்!
தாடகை அரக்கி என்போன்
தமிழனாய் வாழ வந்தான்!

4. தெய்வத்தைப் பலவாய்ச் செய்து
தெருவெலாம் கோயில் போட்டு
பொய் வைத்த வேதம் பாடிப்
புராணத்தை வரலாறாக்கி
உய்யுங்கால் பற்றோர் தாளால் -
ஊழுக்குள் இவன் போய்நிற்பான்!
தைக்கதிர் போற்றி வந்தோன்
தமிழனாய் வாழ வந்தான்!

-----

# 85. படையல்

1. அன்புக்குறளோனே - வள்ளுவா, ஆழப் பொருளோனே!
இன்பத்துப் பாலோனே - வள்ளுவா, ஈடில்லா நூலோனே!

2. எல்லாமறிந்தோனே - வள்ளுவா, என்றுமே வாழ்வோனே!
எல்லார்க்கு மானோனே - வள்ளுவா, இல்லாத தில்லோனே!

3. ஆரியக் குப்பைகளை - வள்ளுவா, அள்ளிப் புதைத்தோனே!
பாரினை ஒன்றெனவே - வள்ளுவா, படையல் தந்தோனே!

4. மூடவழிகளையே - வள்ளுவா, முன்னாக்கி வையாமல்
நாடவே வைத்தோனே - வள்ளுவா, நல்லதே செய்தோனே!

5. சமயச் சாயமிட்டே - வள்ளுவா, சாய்க்க நினைப்போரால்
மயங்கிப் போகாதே - வள்ளுவா, மதிப்பைப் போக்காதே!

6. தெய்வப் பொதுமையினை - வள்ளுவா, சிதற அடிப்போரால்
பொய்மையில் மூழ்காதே - வள்ளுவா, புரட்சியை மாற்றாதே!

7. உந்தன் குறட்கருத்தை - வள்ளுவா, உரையால் மாற்றுகிறார்!
இந்த நிலைமையினால் - வள்ளுவா, எண்ணம் புரியவில்லை!

8. மக்களுடன் நடந்தாய் - வள்ளுவா, மக்களின் முன் நடந்தாய்!
தக்க நெறி அதுவே - வள்ளுவா, தமிழ்போல் வாழியவே!

-----

# 86. இறங்கும்

1. பச்சை சிவப்பு நிறப் - பணமே, பாரைக் கலக்குபவா,
உச்சியில் உள்ளோயே - பணமே, உலகம் உன் கீழோ?

2. உன்னை அடைவதற்கே - பணமே, ஓடிப்பறந்திடுவார்!
சின்ன வழிகளிலும் - பணமே, சிலபேர் பெற்றிடுவார்!

3. குட்டி இடுவாய் நீ - பணமே, குஞ்சு பொரிப்பாய் நீ!
மட்டி மடையர்களை - பணமே, மதிக்க வைப்பாய் நீ!

4. உள்ளவர் ஆடிடுவார் - பணமே, உலகை வாங்கிடுவார்!
இல்லாதவர் பிணமே - பணமே, ஈக்களும் மொய்க்காவே!

5. தெய்வமும் நீதானே - பணமே, செய்யும் முயற்சிகளால்
உய்வார் ஒருசிலபேர் - பணமே, ஒன்றும் பெரியதில்லை!

6. உந்தனைத் தேடுகிறேன் - பணமே, ஓடியே வாராயோ?
எந்தனைச் சேராமல் - பணமே, ஏன் தள்ளிச் செல்லுகிறாய்?

7. ஆயுளும் போகிறதே - பணமே, அடைய முடியாமல்
போயும் விடுவேனோ - பணமே, போனால் கிடையாதோ?

8. உன்னுடன் வாழ்வதுவே - பணமே, உண்மையில் வாழ்வாகும்!
இன்னும் வயதிறங்கும் - பணமே, என்னை நீ வந்தடைந்தால்?

- - - - -

## 87. வருவாய்

1. நான் புதுப் பெண் மனிதா - வருவாய், நல் உலாப் போய் வருவோம்!
ஏன் அஞ்சி ஓடுகிறாய்? - மனிதா, என்னைப் பிடிக்கல்லையா?

2. நான் உந்தன் தோழியடா - வருவாய், நல்லதோர் தோழன் என!
ஏன், என்ன யோசனைகள்? - விடடா, இரட்டையர் ஆகிடவா!

3. வேறு நினைக்காதே - ஏதுமே, வித்தைகள் காட்டாதே!
நாறு மெச்சிந்தனையும் - வருமேல், நல்லுளம் மாறிடுமே!

4. பெண்ணொடும் ஆண் இணைந்தால் - உலகின் பேதங்கள்நீங்கிடுமே!
கண்கள் இரண்டினிலும் - எதுமேல்? காட்ட முடிந்திடுமோ?

5. திட்டங்கள் போட்டிடுவோம் - அவற்றைச் செயற் படுத்திடுவோம்!
விட்டு விலகாமல் - இரவில் வேறாய்த் துயின்றிடுவோம்!

6. பொய்கள் கலவாமல் - உளத்தில் புனிதம் பேணிடுவோம்!
ஐயங்கள் வாராமல் - என்றுமே அன்பை வளர்த்திடுவோம்!

7. வாடி முடியாதா? - உலகம் வாழ்வெனச் சொல்லாதா?
ஆளமுடியாதா - நமைநாம்? ஆறுதல் தோன்றாதா?

8. உலகின் கண்களுக்கே - நமது உயர்வைக் காட்டிடுவோம்!
கல கலப் பாய் வா - மனதின் கவலை தீர்ந்திடவா!

----

## 88. ஏதுமில்லை

கோயில் அதிகரிப்பால் குடியிருக்க வழியில்லை
தாயில்லாப் பிள்ளையெனத் தவிப்பில் கிடக்கையிலே-
நோயில் உழன்றபடி நொடி ஆண்டாய்ப் போகையிலே-
பாயில் கிடந்தபடி பசிக் கூழ் குடிக்கையிலே
அப்பன் பெயர் சொல்லி ஐவர் நிதி என்பார்!
ஆத்தாள் பெயர் சொல்லி அறுவர் நிதி என்பார்!
மூத்தோன் பெயர் கூறி மூவர் பொருள் என்பார்!
இளையோன் பெயர் கூறி இருவர் மடி விரிப்பார்!
முடித்துக் கொரு கோவில்! மூச்சு விடக்காற்றில்லை!
கோயிலெல்லாம் சாமிகளாம் - குட்டிகளாம்-குஞ்சுகளாம்!

கும்பிடவா காசு பணம்? கொடுப்பனவை யார் பெறுவார்?
மரத்தில் பணம் காய்த்தால் மறக்காமல் ஆய்ந்திடலாம்!
வெளிநாட்டுத்தாள் கிடைத்தால் விளையாடிப் பார்த்திடலாம்!
நீர்பாய்ந்து நெல் விளைந்தால் நேர்த்திக்கடன் தரலாம்!
ஏதிலிகள் காசெடுத்தல் எந்தவிதம் - எங்கே போய்?
சாமிகளும் இன்றுவரை சாதித்த தேதுமில்லை!
சுரண்டல் சுரண்டல்தான்! சொன்னால் பிணமேதான்!
ஆனாலும் நம்புகிறோம், அன்றிருந்து இன்றுவரை!
வேதனையின் வெம்பல் இது! வேறொன்றுமேயில்லை!
கோயில் அதிகரிப்பால் குடியிருக்க வழியில்லை!

-----

# 89. புண்ணியம்

1. மாம்பழம் கிள்ளைக் கானால்,
மஞ்சட் பப்பாளி யான
தீம்பழம் காக்கைக் கானால்,
சிறுகொய்யா அணிலுக்கானால்,
சூம்பிய வாழை போகச்
சுளைப் பலா வண்டிற்கானால்,
காம்பிலாப் பனங்காய் வவ்வால்
கண்டு வாய் வைக்கு மானால்...

2. நாவலும் குயிலுக் கானால்,
நாரத்தைப் புளிச்சல் போக-
ஆவலாய் முந்தி ரிக்கும்
அணில் வந்து போகு மானால்,
பூவிலே மாதுளை க்கும்
பூச்சிகள் அரிக்கு மானால்,
சாவதற் கிடையில் நாங்கள்
சாப்பிட ஏதுண்டையா?

3. ஊற்றிய தண்ணீர் என்ன?
ஓய்ந்திடாப் பார்வை என்ன?
போற்றிய முறைகள் என்ன?
போட்டிட்ட எருக்கள் என்ன?
ஆற்றிய பணிகள் என்ன?
அடித்திட்ட மருந் தென்னென்ன?
நேற்றையக் கழுதை தேய்ந்து
நிலத் தெறும் பான தென்ன?

4. என்னவோ உயிர்கள் சாற்றால்
இரைப்பையை நிறைத்த தாலே
தின்ன வெண் சோற்றை மட்டும்
தெரிவு செய் திட்ட போதும்
முன்னைய வினைக ளெல்லாம்
முடிந்துமே இறைவனாரின்
'புண்ணியம்' பெற்றி டோமா?
புறங்காலில் குந்திடோமா?

-----

# ௯0. தொழிலய்யார்

1. ஈச்சந்தீவை மறக்கப் போறன் என்ன சொல்லுறாய்? -நீ
என்ன சொல்லுறாய்? -அடி
எதிரணியில் நின்றிடாமல் ஏற்றுக் கொள்ளடி! - இதனை
ஏற்றுக் கொள்ளடி!
வாச்சிருக்குக் காணி ஒண்டு வாங்கப் போறன்'டி - நான்
வாங்கப் போறன்'டி - அதில,
வந்திருந்து எந்தனோட வாழ்ந்து பாரன்'டி - நீ
வாழ்ந்து பாரன்'டி!

2. தீவான் தீவான் எண்டுகத்திச் செத்துப் போனியே! - சும்மா
செத்துப் போனியே! - இப்போ
தீவுக்கென்ன வந்ததெண்டு சினத்தமூட்டுறா? - சும்மா
சினத்தமூட்டுறா?
சாவாத்தமிழ் நாட்டைப் பெத்த தாய்மை எண்டியே! - உந்தன்
தாய்மை எண்டியே! -அந்தத்
தாயினையா மறக்கச் சொல்லிச் சண்டை போடுறா? - இப்போ
சண்டை போடுறா?

3. சிவப்பெறும்பு கடிக்குதேடி - செல் அரிக்குதே! - பயிர்
செல் அரிக்குதே! - அட
தேடிவந்து மாம்பழத்தத் திண்டு போகுதே! - வவ்வால்
திண்டு போகுதே!
கவலை, அல்லை, வள்ளி வேரைக் காணவில்லையே? - அடியே
காணவில்லையே? - வெறும்
காட்டுப்பண்டிக் கெழும்பிவந்து காவல் பாப்பியா? - ராவில்
காவல் பாப்பியா?

4. பண்டி வந்தாப் பொறிக்கிடங்கைப் பாத்துக் கிண்டு நீ! - வழியப்
பாத்துக் கிண்டு நீ! - ஒரு
பன்னாடையால் சிவப்பெறும்பைப் பாத்துக் கொள்ளுறன்!-நான்
பாத்துக் கொள்ளுறன்!
ஒண்டு மட்டும் சொல்லுறன் நான் உரத்துப் பேசாத ! - இதை
உரத்துப் பேசாத!
ஊர்அறிஞ்சாப்பகிடி பண்ணும், உனது தொழிலப்பார்!-சும்மா
உனது தொழிலப்பார்!

-----

## 91. விடலாமா?

1. எழுத்தாளத் தமிழர்களே, எழுதுங்கள் ஆனாலோ
எதையுமல்ல!
விழுத்துகிறார் இனவாத வெறியர்களும், 'அபினி'களும்
வெறும் பொய்யாலே!
அழுத்துங்கள் உண்மைகளை, அகச்சான்று புறச்சான்று
அனைத்தும் தேடி!
புழுத்திட்ட குப்பையெலாம் புறமள்ளி வீசுங்கள்,
புனிதம் ஆக!

2. வந்தோர்கள் நாம்தானாம், வரலாறு திரிக்கின்றார்
வங்கத்தார்கள்!
இந்தநா டெமக்கிலையாம், இருக்கட்டாம் வாய்மூடி
என்ன வீரம்?
சொந்தமெது-இரவலெது? சொல்லுங்கள் வடிவாகச்
சோரவேண்டாம்!
வெந்தபுண்மீதினிலே வேலைநுழைக்கின்றாரே
விடலாமா நாம்?

3. சிறுகதையோ, நாடகமோ, திறமான கவிதைகளோ,
சிறந்த ஆய்வோ?
வெறுமைகளாய் எழுதாதீர், வெட்டொன்று துண்டிரண்டாய்
விடுப்பீர் வாளை!
குறுகியதை நீட்டுங்கள், கொடுமைகளைக் காட்டுங்கள்,
கொடுங்கோல் ஆட்சி
அறுபடவே தீட்டுங்கள், அதற்காகவே கோலை
அசைப்பீர் தாளில்!

4. கிண்டுங்கள்-கிளறுங்கள்- கேளுங்கள்- பாருங்கள்-
கிடைக்கும் சான்று!
பண்டையநூல் உள்ளோர்கள் பரிவோடும் தருவார்கள்,
பார்க்கச் சொல்லி!
மண்டிவரும் சான்றுகளே மடையர்களைத் திருத்தட்டும்
மறவாதீர், கோல்
கொண்டநமக்கதுவேதான் கூர்வாளுமாகட்டும்,
குறையெண்ணாதீர்!

-----

# 92. மனிதமேன்மை

1. ஒருவன் வாழ்வின் உரிமைதன்னை ஒருவன் பறிக்கிறான்!
ஒருவன் சாக, ஒருவன் வாழ்ந்து உள்ளம் களிக்கிறான்!

2. ஒருவன் மண்ணில் வீட்டைக்கட்டி ஒருவன் வாழ்கிறான்!
ஒருவன் பையைத் தூக்கிக் கொண்டு ஒதுங்கிப் போகிறான்!

3. மொழியைக் காட்டி வெறியை நெஞ்சில் மூட்டி விடுகிறான்!
அழிவுக்கான வழியைக்காட்டி ஆர்ப்பரிக்கிறான்!

4. வாயில் தேனைப் பூசி நெஞ்சில் நஞ்சை வைக்கிறான்!
கோயில் சென்று போர்வையோடு குறிகள் போடுறான்!

5. பொய்கள் சொல்லிக்களவு செய்து பொழுதை ஓட்டுறான்!
பை நிறைத்துப் பிறரின் மீது பழியைப் போடுறான்!

6. விலங்கு - புள்ளுச் செய்திடாத வேலை செய்கிறான்!
கலங்க வைத்து உலகுதன்னைக் கருவறுக்கிறான்!

7. அன்புமில்லை, பண்புமில்லை, அறிவுமில்லையே!
தன்புகழ்ச்சி பேசிப்பேசித் தாழ்ந்து போகிறான்!

8. உயிர்களுக்குள் மனிதமேன்மை உரைக்கலாகுமோ?
துயர் விளைப்பதில்லை என்று சொல்ல லாகுமோ?

- - - - -

# 93. விழிப்பு

1. கொள்ளைத் தொழிலாளர் - வந்ததும்
   கூடிக்கலைத் தோமா?
   அள்ளி விழுந்தே போய் - வரவேற்(று)
   ஆடை விரித்தோமா?

2. ஆரியக் கூத்தை அவர் - ஆடுங்கால்
   ஆராய்ந்து பார்த்தோமா?
   காரியம் கண்டோமா? - எமைநாம்
   காத்து மகிழ்ந்தோமா?

3. ஆட்சி அமைக்கையிலே - எமைநாம்
   ஆள நினைத்தோமா?
   பேச்சில் விழுந்தோமே! - அவரைப்
   பின்பற்றி நின்றோமே!

4. ஒன்றின்மேல் ஒன்றாக - எமது
   உரிமை போகையிலே
   வென்று தடுத்தோமா? - நிலத்தில்
   வேலியைப் போட்டோமா?

5. நம்பிக் கிடந்தோமே! - அதனால்
   நாட்டை இழந்தோமே!
   வெம்பிப் பிடித்தோமே! - பிந்தியே
   வெற்றி எளிதாமோ?

6. வீரம் இருந்தது போல் - எம்மிடம்
விழிப்பிருந்திலையே?
ஆரும் பிழை இலையே? - நமைநாம்
அழித்தே விட்டோமே!

7. கூட்டு வாழ்வற்ற இனம், - ஒன்றுமே
கொள்கை இல்லாத இனம்,
காட்டிக் கொடுக்கும் இனம், - நமைப்போல்
காணமுடிந்திடுமோ?

8. தந்து பெறுவதுவோ? - உரிமை
தாமே பெறுவதுவோ?
வெந்துமே சாவதுவோ? - அடிமை
விட்ட விடுதலையோ?

-----

# 94. வேண்டும்-வேண்டாம்

1. மட்டிக்கழி வேண்டும்! - செவ்வான
மண்ணும் தர வேண்டும்!
கொட்டிய செந்தரையில் - ஒருசிறு
குச்சில் தர வேண்டும்!
கட்டுசிறு குடிலில் - நாலுபேர்
கண் உறங்கல் வேண்டும்!
வெட்ட வெளியினிலே - நிழல்மர
வித்தும் இடல் வேண்டும்!

2. ஒன்றுபடல் வேண்டும்! - உயரிய
உள்ளம் பெறல் வேண்டும்!
நன்று செயல் வேண்டும்! - நமக்கொரு
நாடுவரல் வேண்டும்!
என்றும் தமிழ் மொழியை - விழியென
எண்ணி வரல் வேண்டும்!
வென்று விடல் வேண்டும்! - விடுதலை
வீரம் பெறல் வேண்டும்!

3. சண்டை இனி வேண்டாம்! - சமாதானச்
சாட்டும் இனி வேண்டாம்!
அண்டை அயலார்கள் - கிள்ளியே
ஆட்டி விட வேண்டாம்!
கண்டு தெளியாமல் - எதையுமே
காட்டிவிட வேண்டாம்!
மண்டுகளால் மாறி - மனிதத்தை
மாற்றி விட வேண்டாம்!

4. ஆசைகளைக் கூட்டிப் - பொருட்களை
அள்ளி வர வேண்டாம்!
காசைக்கரியாக்கி - விழாவென்று
களிகொள்ளல் வேண்டாம்!
ஓசைகளைக் கூட்டி - வீணாக
ஒப்பாரி வையாமல்,
தூசைத் துடைத்திடவே - மனப்புவி
தூய்மையடைந்திடுமே!

-----

## 95. வையாதீர்

1. எங்கள் தலையில் கை வையாதீர், உங்கள்
எல்லோருக்கும் இதைச் சொல்லுகிறோம்!
உங்கள் அலுவலைப் பார்த்திடுவீர், இங்கே
உள்ளவற்றை நாங்கள் பார்த்திடுவோம்!

2. ஆருக்கும் ஆரும் அடிமையல்ல, மக்கள்
அத்தனைபேரும் சமமேதான்!
ஊருக்குபதேசம் செய்வதை விட்டுமே
உள்ளத்தின் மாசைக் கழுவிடுவீர்!

3. எந்தன் உரிமை எனக்குளது, இதை
எடுப்பதில்லை - கொடுப்பதில்லை!
உந்தனைப் போலவே மற்றவனும், இதை
உள்ளத்தில் வைத்திடின் சிக்கல் எழா!

4. வந்தவர் யாரென - வாழ்ந்தவர் யாரென
வாயைத்த திறந்தால் வரலாறு,
இந்த நிலைமைகள் ஏற்பட்டிருக்குமோ?
இறைவன் சான்றும் தரவிலையே?

5. சுரண்டலாலே விளைந்ததுவே, இந்தத்
தொல்லைகள் யாவும் உலகினிலே!
சுரண்டுவோரும், சுரண்டப்படுவோரும்
தொன்று தொட்டுள்ளனர் இன்றுவரை!

6. விழிப்புணர்வுகள் வாழ்வில் அவசியம்
வேண்டும், இலாவிடில் வேற்றினத்தார்
அழித்தொழிப்பதில் ஆர்வமே கொள்ளுவர்,
அனுபவத்தினில் கண்டறிந்தோம்!

7. வல்லவர் கால்களை வைத்துளார், நாமினி
வாழ்வது கூண்டுக்கிளி வாழ்வே!
நல்லவராகவே நாமிருந் தென்பயன்,
நாடேது? ஆட்சி நமக்கேது?

8. உலகுநம்மைப் புரிந்திடுமேல் - ஏதும்
உதவிசெய்திட வந்திடுமேல்-
நலங்கள் ஏதும் கிடைத்திடலாம்? இன்றேல்
நாமின்றிருப்பதே போன்றிருப்போம்!

-----

# 96. அள்ளு

1. ஒன்றே முக்கால் அடிதம்பி,
உலகம் அதனுள் இருக்குதடா!
நன்றாய்க் குறளைக் கற்றாயா?
நல்வழிதனிலே சென்றாயா?

2. எழுசீருக்குள் உலகமடா!
எல்லாம் அதனுள் இருக்குதடா!
பழுதில்லாமல் படிதம்பி!
படிக்கச் சொல்லிக் கொடுதம்பி!

3. முனைவர் மு.வ.உரையோடும்
முற்றாய்ப் படித்து முடி தம்பி!
உனையார் வெல்வார் பிறகிங்கே?
உண்மைகண்டே உரைக்கின்றேன்!

4. எழுந்தவுடனும் படி தம்பி!
இரவில் விரித்த பாய்தனிலே
விழுந்தவுடனும் படி தம்பி!
வெல்வாய் வாழ்வில் படி தம்பி!

5. பள்ளிப்பாடம் படித்தாலும்
பதவி, பணங்கள் எடுத்தாலும்
'உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல்' (596)
ஓதும் குறளை மறவாதே!

6. எந்தத் தொழிலைச் செய்தாலும்
எடு-பார்-குறளில் இருக்கும் அது!
அந்தப்படியே நடந்தா யேல்
அல்லல் உனையே நெருங்காதே!

7. 'நுண்மாண் நுழை புலம்' தேவையெனில் (407)
நூல்கள் தேடித் திரியாதே!
கண்பார்க்கட்டும், நெஞ்சினிலே
கல்வெட்டாகப் பதியட்டும்!

8. வள்ளுவர் உள்ளம் புரிந்து விடு!
வாழும் முறையில் வாழ்ந்து விடு!
அள்ளும் வரையில் அள்ளி எடு!
அறிவுப் பசியைப் போக்கி விடு!

-----

# 97. வெண்தாட்செய்யார்

1. பட்டங்கள் பணம் ஆடை பரிசென்று நன்னூல்கள்
படைத்தேனில்லை!
திட்டத்தைச் செயலாக்கும் தேவையினால் சிலவற்றைச்
செப்பா நின்றேன்!
கட்டங்கள் வரும்போதில் காதேறச் சிலவற்றைக்
கழறாநின்றேன்!
மட்டம்கீழ் என்றாலும், மலை உச்சம் ஆனாலும்,
மலைத்தேனில்லை!

2. பெற்றாரோ, பெறவிலையோ? பெற்றோர்கள் நூலுடனே
பேசாமற்போய்க்
கற்றாரோ, கற்கலையோ? கண்திறந்து பார்த்தாரோ?
கருத்தால் ஏதும்
உற்றாரோ, உறவிலையோ? உண்மை பொய் கண்டாரோ?
ஒன்று மின்றேல்
விற்றென்ன, விற்காமல் விட்டென்ன? எல்லாம் வீண்
வேலைதானோ?

3. பாட்டிருக்கும் பாடிடலாம், பழஞ்செய்யுள் பார்த்திடலாம்,
பாடமாக்கிக்
கேட்டிடவே சொல்லிடலாம், கேளாட்டால் வைத்திடலாம்,
கிடைத்தால் நேரம்
மீட்டிடலாம் தமிழ்க்காக, மிகச் சிலவே கவி எனினும்
மெதுவாய் உள்ளே
காட்டுகிற புலவனது கருத்தென்ன, என்றேனும்
கண்டால் என்ன?

4. கதைசிறிதேல் கற்றிடுவார், கதைபெரிதேல் கற்றிடவே
காலம்பார்ப்பார்!
எதை எவரே கற்றாலும் எதிலேயும் பொருள் ஏதும்
இருந்தே தீரும்!
அதைக்கண்டு கொண்டாரேல் அதுபிடியா விட்டாலும்
அதுவே போதும்!
விதையாமல் உழுவாரோ, வெறுங்கோலைத் தொடுவாரோ,
வெண்தாட் செய்யார்?

- - - - -

# 98. போவோம்

1. செத்திடவா போகின்றேன்? சீர்சரியா என்வாழ்வு?
சிறப்பா - தீதா?
எத்திசையில்போகவுளேன்? எனக்கதனைச் சொல்லிவிட
இங்காள் உண்டா?
முற்றியபின் பழுத்தேனா? முன்னாலே பழுத்தேனா?
முடிவா சாதல்?
குற்றவியலா, அன்றேல் குணவியலா அதிகமெனக்
கூறுவார் ஆர்?

2. எங்கிருந்து யான் வந்தேன்? ஏன்வந்தேன்? வந்ததற்கு
என்ன செய்தேன்?
இங்குவருமுன்னே யான் என்புரிந்தேன்? சொல்ல
எவர் உள்ளார்கள்?
எங்கெங்கோ எவரெவரோ என்னென்னவோ வெல்லாம்
இயம்பா நின்றார்?
அங்கென்ன அவர்இருந்து அதையெல்லாம் பார்த்தாரா-
அறிந்தா சொன்னார்?

3. சொன்னதையே சொன்னார்கள் பல்லோர்கள், சொல்லாத
சிலரே சொன்னார்!
அன்னார்கள் சொல்லியதை அலசியெடுத்தாராய்ந்தால்
அதிகம் பொய்யே!
பின்னோரும் அவ்வழியே பேசாமல் போனார்கள்!
பேசிச் சில்லோர்
தன்னுரிமைப் போக்கினிலே போனார்கள்! தமியேனும்
அதனைச் சார்ந்தேன்!

௪. மரபணுவால் பதிப்பாகும் மானிடர்கள் வருமட்டும்
மடிவார் மாந்தர்!
இரவுண்டேல் பகலுண்டாம், இறப்புண்டேல் பிறப்புண்டாம்,
என்பதெல்லாம்
உரம்பெறுதல் அரிதாகும்! உளப்பாங்கும் மாறிவரும்!
உண்மை வெல்லும்!
வரமாகும் அறிவியலும் வருமட்டும் இவ்வூர்க்கு
வந்தோம் - போவோம்!

-----

# 99. மரபு

1. திராவிட மரபார் நாங்கள்!
        செந்தமிழ் மொழியார் நாங்கள்!
இராததற் கழுவோ மல்லோம்!
        இருப்பதைக் காத்தல் வல்லோம்!
வராததை வரவும் வைப்போம்!
        வந்ததை மனதுள் வைப்போம்!
தராதரம் கண்டோர் வாரீர்!
        தமிழுடன் சேர்வோர் சேரீர்!

2. இயற்கை எம் வழிபாடாகும்!
        எதனினும் அழகாய் வாகும்!
செயற்கையைத் தொழுவோமல்லோம்!
        தெய்வமும் இகழ்வோமல்லோம்!
தயக்கமோ தாழ்வோ விட்டோம்!
        தாங்குவோம் தாங்கும் மட்டும்!
மயக்குவார் தோற்றே போவார்!
        மயங்குவார் எதிரார் ஆவார்!

3. நாமார்க்கும் குடியாய் வாழோம்!
        நாற்சாதிப் பெயரால் தாழோம்!
ஏமாற்றோம் - ஏமாறோம் நாம்!
        எல்லோர்க்கும் சமம் இங்கேநாம்!
தாமாக வாழ்வோம் விட்டால்!
        சமராடிமாள்வோம் தொட்டால்!
ஆமாம் நாம் உரிமைக் காரர்!
        அதனால் நாம் பெருமைக்காரர்!

4. பிறர்நாட்டைச் சுரண்டல் செய்யோம்!
பெரும்பொய்நூல் வரைந்தே வையோம்!
குறள் ஒன்றே - மறைகள் மூன்றே!
கொண்டால்நல் வழியே தோன்றும்!
அறம் இன்றேல் நெஞ்சம் மாசாம்!
ஆகாதோர் செயலைப் பேசேல்!
மறம் - செல்வம் - கலைகள் வேண்டும்!
வளரோமா நாங்கள் மீண்டும்?

-----

## 100. சமம்

1. சிவன் எனில் காளி உண்டு!
திருமாற்கோ செய்யாள் உண்டு!
அவன் எனில் அவள் இருப்பாள்!
ஆண் உண்டேல் பெண்ணும் உண்டு!
இவன், இவள் இருபாலாரும்
இணைதலே உலகின்ஆக்கம்!
எவனுமே உயர்வும் இல்லை!
எவளுமே தாழ்வும் இல்லை!

2. பிரமாவோ நாவில் வைத்தான்!
பெரும்மாலோ மார்பில் வைத்தான்!
அரனாரோ பாகம் வைத்தார்!
அனைவரும் மதித்தார் பெண்ணை!
வருவீரம் - செல்வம் - கல்வி
வாழ்விலே முப்பெண் ஆச்சு!
பெரும் ஆறு, மண், விண், பூண்டும்
பெண்தன்மை பெறும் பேறாச்சு!

3. அடுக்களை பெண் மட்டல்ல!
ஆடவர் தொழில் மட்டல்ல!
எடுக்கின்றார் பெண்கள் இன்று
எல்லாமே - சட்டம்கூட!
உடுக்கின்றார் சமமாய் எல்லாம்!
ஒருவேறு பாடே பிள்ளை!
படுக்கும்பாய், கட்டில், மெத்தை,
பால் கூடப் பாதி பாதி!

௪. பிறர் நுழைந்திடையில் நின்றே
பெண்மையைக் கெடுக்கலானார்!
அறம்நிலை குலைய லாச்சு!
அன்னை மேல் தந்தை யாச்சு!
முறையெலாம் பிறழலாச்சு!
மூடர்கள் பெருகலாச்சு!
திறம் பெறுபேரின் பத்தைச்
சிற்றின்பம் ஆக்கலாமோ?

-----

# ஆசிரியர் பற்றி...

முழுப்பெயர் : சோமநாதர்-இராசேந்திரம் (93/2
மு.இ.வீதி-தி/இலிங்கநகர்

புனைப்பெயர்(கள்) : தாமரைத் தீவான்
(கோலேந்தி-எறிகோலன்-சுதந்திரன்-
அகதிக்கவிராயர்-சாப்பாட்டுக்கவிராயர் -
மலைப்புலவர்-பொடிப்புலவன்) பிற

பிறந்தநாள் : 24.07.1932

பிறந்த ஊர் : தி/கிண்/தாமரைவில் (1942ன் பின் ஈச்சந்தீவு)

பெற்றார் : சி. சோமநாதர் + க. முத்துப்பிள்ளை

கல்வி : தி/தாமரைவில் றோ.க.த.க.பா +
தி/மூதூர் றோ.க.த.க.பா (சி.த.ப.வகுப்பு)

குடும்ப விவரம் : 5 மக்கள் = அன்பழகன் (ஆசிரியர்) +
அண்ணாத்துரை (தையல்) +
நெடுஞ்செழியன் (திட்டமிடல் உ.பணிப்பாளர்)
சிற்றரசு (சமா-சகவாழ்வு) +
தமிழரசி (ஆசிரியை)

தொழில் : ஆசிரியர் (03.01.1955) +
அதிபர் (27.03.1972)
ஓய்வு (23.07.1987)

| | | |
|---|---|---|
| கற்பித்த இடம் | : | தி/யோசப் கல்லூரி[1954] +<br>வது/கந்தேகெதற[03.01.1955] +<br>தி/கந்தளாய் [01.01.1961] +<br>தி/ஈச்சந்தீவு [01.01.1963] +<br>தி/உப்பாறு றோ.க.த.க.பா=[14.02.1968] |
| திருமணம் | : | வ.தவமணி[11.05.1960] |
| எழுத்தின் தொடக்கம் | : | 1952. முதல்கவி=<br>வெள்ளைப்பூனை[1956]சுதந்திரன் |
| வெளிவந்த நூல்கள் | : | பிள்ளைமொழி[1992]+கீறல்கள்[1992]+<br>கட்டுரைப்பத்து[1997]+<br>போரும்பெயர்வும்[1999]+<br>ஐம்பாலைம்பது[2001]+<br>வள்ளுவர் அந்தாதி[2002]+<br>உணர்ந்தேன் உரைத்தேன்[2004]+<br>சிறுவிருந்து[2004]+சோமம்[2005]+<br>என்பாநூறு[2005]+ஐந்தொகை[2005]+<br>இணைப்பு[2005] |
| வெளிவராதவை | : | மும்மறை+பத்துப்பத்து+போர்நாற்பது+<br>நீத்தார்பெருமை+அன்பழைப்பு |
| கவிவந்த ஏடுகள் | : | சர்வதேச தமிழர்+தமிழ்உலகம்+<br>சுதந்திரன்+வீரகேசரி+தினகரன்+<br>சுடர்+சிந்தாமணி+சூடாமணி+<br>தினமுரசு+தினக்கதிர்+நேயம்+<br>சிவநெறி+தாகம்+கவிதைஉறவு+<br>மில்க்வைற்.... பிற |

பரிசுகள் : கீறல்கள்(வ.கி.மா 92)+
வ.கி.மா ஆளுநர்(2001)+
செல்வா+மணிபல்லவம்+கொழு த.சங்கம்
பிற கலாபூஷணம்(2005)

பாராட்டுக்கள் : குறளமுதம்(94)+தாகம்(1991)+
முத்.வள க மன்(96)+தி.மா இ.இ பே+
திரு.இந் கல்(99)+பாதி மா நிதி(2001)+
கந்.கெத (2003)
(117கல்வெட்டுக்கள்+1972-78 கவியரங்குகள்)
(இழப்புக்கள் (1990இல்) -27+13(80பக்க)
தொப்பிகள்+600நூல்கள் பிற)

-------



# தாமரைத் தீவான்

யாப்பிற்கேற்பச் செய்யப் படுவது செய்யுள். இசையோடு பாடக் கூடியது பாடல். உணர்ச்சி, கற்பனை, சொல்லாட்சியோடு உவமை, படிமம் குறியீடு, கருத்தாழம் போன்ற கவித்துவங்கள் உடையது கவிதை எனக் கொண்டால் இவை எந்த வகை? என முடிவெடுங்கள். பொருளுக்காக (புரட்சிக்காக)ப் படித்துப் பாருங்கள். பயனுள்ள பொழுது போக்காகும்.